கல்கி

KALKI 11-8-1974 60 காசு



கம்ப்யூட்டரை மிஞ்சும் ஸிஸிஎம்

நியூ மிர்ராபோ

புத்துலகப் பாதையிலே...






இன்று கம்ப்யூட்டர் அளிக்கும் சித்திரக்
கோலங்கள் வியப்பூட்டும் புதுமைகள்.
கற்பனையைக் கடக்கும் எழில் படைப்புகள்.
ஸிஸிஎம் நியூ மிர்ராபோ ஃபுல் வாயில்
புடவைகளும் அப்படியே. மெல்லிடையாள்
மனங்கவரும் புதையல்கள். உயர்தர
எகிப்திய பருத்தியில் தயாரிக்கப்பட்டவை.
'ஆன்டிகிரஸ்' செய்யப்பட்டவை.
இதற்கு ஏற்ற ஃபுல் வாயில் சோளித்துணிகள்.

இதர படைப்புகள்:
எல்கன்னா சூட்டிங் • லவ்லின் ஷர்ட்டிங்
• ஸ்ட்ரேஞ்சர் ஷர்ட்டிங
• ஸில்வர் கிங் வேஷ்டி • மல
• கேஸ்மெண்ட் துணிகள்.


ஸிஸிஎம் அளிப்பது வண்ணப் புதையல்கள்.

**தி கோயம்பத்தூர்
காட்டன் மில்ஸ் லிமிடெட்**

ADWAVE/CCM 187



நேற்று!
ரூபாய்க்கு 3படி அரிசி
உங்கள் ஓட்டு எங்கே?
இன்று!!
அரிசி எங்கே?
நாளை!!!
தி.மு.க எங்கே?
1976 தேர்தல் முடிவு



உனக்கு எப்பொழுதும் இல்லாத பலம் இப்பொழுது இருக்கிறது.
புதுவரிகள்
இதையும் தாங்கிக் கொள்
விஸ்வாசி
வரி
மக்கள்

கல்கி

மலர் 34

இதழ் 2

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

ஆளத் தெரியாதவர்களின் ஆட்சி

அமைச்சர் சாவனுக்கு பத்மபூஷண் என்ன, பாரத ரத்னவே கொடுக்கலாம்! வரி விதிக்கும் ஆற்றலில் அவரை மிஞ்ச ஆளில்லை! மக்களை வதைப்பதில் அவருக்கு நிகரானவர் எவருமில்லை!

அரசாங்கச் செலவில் வீடும் வாசலும், ஏர்கண்டிஷனரும், ஃபிரிஜ்ஜும், காரும், சேவகரும், மின் வசதியும் சோபா செட்டும் இதர பல சௌகரியங்களும் அனுபவித்துக் கொண்டு மந்திரிகள் ராஜபோகமாக வாழ்க்கை நடத்தட்டும். நாம் ஆட்சேபிக்கவில்லை. ஆனல் அப்படி வாழ்வதாலேயே அவர்களுக்கு மக்கள் படும் துயரம் புரியாமல் இருக்கிறதோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது. இடைக் கால பட்ஜெட் இந்த எண்ணத்தை நன்கு வலுப்படுத்துகிறது.

பண வீக்கத்தைக் குறைக்கத்தான் இடைக்கால பட்ஜெட்டாம்-சொல்லிக் கொண்டார்கள்! வரவு செலவுக் கணக்கில் துண்டு விழும் தொகையை நோட்டு அச்சடித்து ஈடு செய்யாமல் பெரும் பகுதியைப் புதிய வரிகள் மூலம் வசூலித்து விட்டால் பணவீக் கத்தை அந்த அளவுக்குக் குறைத்து விட்டதாக சாவன் அற்பத் திருப்திப் பட்டுக் கொள்ளலாம். ஆனல் புதிய வரிகளின் மூலம் விலைவாசிகள் எல்லாம் மேலே மேலே உயரப் போகின்றனவே, அதை யாரிடம் முறையிட்டு அழுவது? செலவினங்களைக் குறைத்துச் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதற்குப் பதில் நிதி அமைச்சர் புதிய புதிய வரிகளைத் தேடிக் கண்டுபிடித்து விதித்திருக்கிறார். மக்கள் வாடி வதங்கப் போகிறார்கள்.


பாங்குகள் வழங்கும் கடனுக்கு வசூலிக்கப்படும் வட்டித் தொகை மீது ஏழு சதவீதம் வரி விதித்துள்ளார் அமைச்சர். இந்த வரியைக் கடன் வாங்குவோரிடமிருந்து பாங்குகள் வசூலித்துக் கொள்ளலாம் என்றும் பச்சைக் கொடி காட்டி விட்டார். ஏற் கெனவே பாங்குகள் பதினறு, பதினைந்து சதவீதம் வட்டி வசூலித்து வருவதைப் பார்க்கையில் இவர்கள் நடத்துவது பாங்குதான அல்லது வட்டிக் கடை வியாபாரமா என்று கேட்கத் தோன்றுகிறது. பாங்கு களைத் தேசிய மயமாக்கியது இப்படிப் பிய்த்துப் பிடுங்கத்தான? பகல் கொள்ளை என்பது இதற்கு மற்றொரு பெயர்!

இதன் நிகர விளைவு என்ன? தொழிலகங்களுக்குக் கடன் வசதி பெறும்போது அதிக வட்டி தரவேண்டியிருந்தால் உற்பத்தியாகும் பொருட்களின் விலை உயரத்தானே செய்யும்? இப்படியே டயருக்கு விதிக்கும் வரி, லாரிகளில் வந்திறங்கும் காய்கறிகளின் விலையை அதிகரிக்கும். சிமெண்ட் மீதான புதிய வரி, வீடு கட்டுமானத் தொழிலைப் பாதித்து வாடகைகளை உயர்த்தும். இவ்வாறு சுற்றி வளைத்து மக்களை எல்லா வரிகளுமே பாதிக்கும் என்றல் நேரடியாக மக்களைத் தாக்கும் வரிகளுக்கும் சாவனின் பட்ஜெட்டில் குறை வில்லை. சிகரெட், காகிதம், மின் உபகரணங்கள் ஆகியவற்றின் மீதான வரிகளைச் சொல்லலாம்.

பண வீக்கத்தைக் குறைக்கவோ, விலைவாசிகளை இறக்கவோ, கருப்புப் பணத்தை ஒழிக்கவோ இதுவரை ஒரு துரும்பைக்கூட எடுத்துப் போடாத அரசு மக்களின் தலை மீது புதிய வரிகள் என்னும் பாறங்கல்லைத் தூக்கிப் போட்டிருக்கிறது!

கருப்புப் பணமும் கள்ள மார்க்கெட்டும் அரசாங்க பட்ஜெட்டி லிடம் பாதுகாப்புப் பெறுகின்றன. அவற்றுக்கு ஆதரவு தருவதே இந்த அரசும் அதன் மூடக் கொள்கைகளும்தாம். பற்றாக்குறையும் கட்டுப்பாடும் கைகோர்த்து நடக்குமிடத்தில் கருப்புப் பணமும் கள்ள மார்க்கெட்டும் கொழிக்கும்.

தொழில் — விவசாய வளர்ச்சியே நாட்டை உய்விக்கும். அதற்கு அநுசரணையாகக் காரியம் செய்யத் தெரியாதவர்கள் நாட்டை ஆள்வதற்கு லாயக்கற்றவர்கள்.



ஏசிசி ஹாட்-ஃபேஸ் வெப்பத்தடை ஃபயர்பிரிக்குகளை அறிமுகப்படுத்துகிறது.
ஹாட்-ஃபேஸ் வெப்பத்தடை ஃபயர்பிரிக்குகள் பொருத்தப்பட்ட அனீலிங் உலைகள்.
உருக்கப்பட்ட உலோகத் தாதுக்கள், உலோகங்கள், கண்ணாடி, எனாமல் முதலியவற்றுடன் தொடர்பற்ற திறந்த உலைபகுதிகளுக்கு உபயோகிக்கலாம். வெப்ப வேலைகளுக்கு உபயோகப்படுத்தப்படும் உலைகள், வெப்பம் மற்றும் குளிர்சாதன உலைகள், மலியபிள் அனீலிங் அடுப்புகள், ஸ்ட்ரெஸ் ரிலீவிங் அடுப்புகள் மற்றும் மட்பாண்ட சூளைகள் இவைகளுக்கு ஏற்றவை.
ஏசிசியின் வெப்பத்தடை ஃபயர்பிரிக்குகள்
■ எரிப்பொருள் செலவு மிச்சம் ■ உலையினுள் சீரான வெப்பம் ■ விரைவில் சூடு பெறுவதால் அதிக உற்பத்தி ■ உலையினுள் வைக்கப்படும் பொருள்களுக்கு சீரான சூட்டு விநியோகம்.
ஏசிசி
தரமான தயாரிப்புகளுக்கு நம்பகமான உத்தரவாதம்
தி அஸோஸியேடட் ஸிமெண்ட் கம்பெனீஸ், லிமிடெட்



நாகை தினகரவிலாஸ் S. T. ராஜனின் குமாரத்தி சௌ. கலோசனா, நாகை (Late) லெக்ஷ்மணய்யர் குமாரன் சிரஞ்சீவி கண்ணுமணி என்கிற ஸௌந்தரராஜன் இவர்கள் விவாஹமும், சௌ. கலோசனாவின் மாமா ஜோலார்பேட்டை T. S. பாலனின் குமாரன் சிரஞ்சீவி ரமணகுமார் என்கிற வெங்கடசுப்ரமணியனுக்கு ப்ரும்மோபதேசமும் 7-7-74 அன்று நாகையில் சிறப்பாக நடைபெற்றன.

வாழ்க தம்பதிகளும், வடுவும்

S. T. ராஜன்



கல்கி

இந்த இதழில்...

ஆனந்த ஆடி 26 ○ ஆகஸ்டு 11, 1974

ஏறுகிறது விலைவாசி, எரிகிறது உள்ளம். இடைக்கால பட்ஜெட் பற்றித் தலையங்கம்:

ஆளத் தெரியாதவர்களின் ஆட்சி!

விரித்துப் படுக்க ஒரு கோணியுடன் மட்டுமே சென்னைக்கு வந்த இளைஞன் தளரா உழைப்பினால் தனவந்தனாக உயர்ந்த அதிசயக் கதை:

கோணியில் உறங்கிய கோமான்!

அதிகாரியிடமிருந்து வரும் டெலிஃபோன் கால்தான். பேசப்படுவதும் காரியாலய விஷயம்தான். ஆயினும் அது காதல் வளர எப்படிக் கை கொடுக்கிறது!

ஜெயிலிருந்து ஒரு டெலிஃபோன் கால்!

எட்டுப் படிப்புப் படித்தோருக்கு உழைக்கும் ஆர்வமில்லை. உழைத்துப் பாடுபடுவோருக்கு எட்டுப் படிப்பில்லை. இக் குறை நீக்கிட முன்வரும் ஒரு நிறுவனம் பற்றிய கட்டுரை:

ஆலை வீரர்களின் வேலைத் திறனுயர.....

காட்டுக் காவலுக்கு நியமித்தால் அவன் கன்னிக்கும் காவலனாக முயல்வதா? கிராமியச் சூழலில் அமைந்த சிறுகதை அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் ரூ. 500 இரண்டாவது பரிசு பெற்றது:

உனக்கானது எனக்கும்....

கருத்தில் புரட்சி; தோற்றத்தில் எழுச்சி!
காதல் நெகிழ்ச்சி; கடிதத்தில் கிளர்ச்சி!

மேலட்டை வண்ணப்படம்: கே. எஸ். ராமானுஜம்

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 30-00	ரூ. 15-00
இதர நாடுகள்	ரூ. 60-00	ரூ. 30-00
இலங்கை	ரூ. 44-00	ரூ. 22-00



அறம் வளர்க்கும் நாயகி

பாரத மக்கள் பெருமிதத்தால் பூரித்துப் போயிருக்கின்றனர்! தமிழகப் பெண்மணிகள் தங்களுக்கே விருது கிடைத்துவிட்டதுபோல் மகிழ்ந்து மெய் சிலிர்க்கின்றனர்!

ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களுக்கு 1974ம் ஆண்டுக்கான ரமான் மக்ஸேஸே விருது கிடைத்திருக்கிறது. ஆசியாவின் நோபல் பரிசாகக் கருதப் படும் விருது இது. அத்துடன் வருகிற பத்தாயிரம் டாலர் சதாசிவம் தம்பதியின் வள்ளன்மை மேன்மேலும் பெருகுவதற்காக, பொன்னுலான பதக்கம் ஸ்ரீமதி எம். எஸ் ஸின் தங்கக் குரலுக்காக, நற்சான்றிதழ் அவரது சாஸ்திரீய சங்கீதத் திறனுக்காக என்று கொள்ளலாம்.

இசையில் இறைவன் சந்நிதானத்துக்கே நம்மை அழைத்துச் செல்லும் எம். எஸ். அது போதாதென்று ஆயிரக்கணக்கான நற்பணிகள் நாட்டில் நடக்க உதவியிருக்கிறார். அதனால் ஜயப்பிரகாசர், அன்னை தெரிஸா, ஆசார்ய விநோபா பாவே ஆகியோர் ஏற்கெனவே பெற்ற இந்த உயர் கௌரவத்தை நான்காவது நபராக இன்று பெறுகிறார். அறம் வளர்க்கும் நாயகியாகத் திகழ்கிறார்.

அவரது எளிமையையும், தன்னலமற்ற சுபாவத்தையும் ஸ்ரீ சதாசிவம் வேடிக்கையாக இப்படி வர்ணிப்பது உண்டு : ''என் மனைவிக்கு ஆயிரத்துக்கும் லட்சத்துக்கும் இடையில் எத்தனை சைபர் வித்தியாசம் என்று

கூடத் தெரியாது!'' செல்வத்தைக் காண்பது பற்றிய சிந்தனையே இன்றிக் கொடுப்பதிலேயே கருத்தாக இருப்பவர்கள் என்ற அளவிலே ஸ்ரீ சதாசிவம் அவர்களுக்கும்கூட அவர் கூறியது பொருந்தும் !

கஸ்தூரிபா நிதிக்காக ஐந்து உதவிக் கச்சேரிகள் நிகழ்த்தியபோது அவரது பொதுநலப் பணிகள் ஆரம்பமானதாகப் பத்திரிகைகள் கூறுகின்றன. ஆனால் அதற்கு முன்பாகவே அவரது முதல் உதவி நமது கல்கிப் பத்திரிகை ஆரம்பமாவதற்குக் கிடைத்தது. தமக்கு அவ்வளவாக விருப்பமில்லாத ஆண் வேடத்தை ஏற்று சாவித்திரி படத்தில் நாரதராகத் தோன்றியது இப்பத்திரிகையைத் தொடங்க அவர் செய்த தியாகம் என்று அமரர் 'கல்கி' அடிக்கடி சொல்வதுண்டு. தியாகம் என்ற வார்த்தையை உச்சரிக்கும்போது அமரரின் குரல் தழுதழுக்கும்.

கல்கிப் பத்திரிகையின் முப்பத்தி நான்காம் ஆண்டுச் சிறப்பிதழ் நேயர்களின் கரங்களை அலங்கரித்த அதே தினத்தில் ஸ்ரீமதி எம். எஸ். விருது பெற்ற செய்தி கிடைத்தது.

பிலிப்பைன்ஸ் நாட்டின் புகழ் பெற்ற ஜனாதிபதியாக விளங்கிய மக்ஸேஸே அவர்களின் பெயரால் வழங்கப்படும் இந்த விருதுடன் இணைந்த வாசகம் பத்து லட்சம் டாலர்களுக்கும் அதிகமாக ஸ்ரீமதி எம். எஸ். நற்பணிகளுக்கு உதவியுள்ளதைக் குறிப்பிடுகிறது. மதுரை மீனாட்சியின் அருளாலும் சதாசிவம் தம்பதியின் இதயத்தில் நீங்காமல் இடம் பெற்றிருக்கும் காஞ்சி ஆசார்யாளின் அனுக்கிரஹத்தாலும் இந்த நற்பணிகள் மேன்மேலும் வளரும்.

விருது கிடைத்த செய்தி வந்ததும் அன்று மாலை ஸ்ரீமதி எம். எஸ். என்ன செய்தார்? வழக்கமான அமைதியுடன் மகள் ஸ்ரீமதி ராதா விசுவநாதனுடன் அமர்ந்து ஓர் இசைத்தட்டுக்காக ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தார் ! அந்த இசைத்தட்டும் ஒரு நன்கொடை, பாரதிய வித்யா பவனுக்காக !

காலம் கடந்த விழிப்புணர்ச்சி!

மக்களின் அடிப்படைத் தேவைகள் விஷயத்தில் கவனக் குறைவாக இருந்துவிட்டுக் கட்டபொம்மன் கோட்டை கட்டிப் பயன் என்ன? பூம்புகார் நகரைப் புனர்நிர்மாணம் செய்வது முதல்வருக்குத் தமிழ்நாட்டின் தொன்மையான பண்பாட்டுச் சிறப்பில் உள்ள பெருமிதத்தை உணர்த்தலாம். ஆனால் அது நல்லாட்சியை வழங்கியதாகாது.

முன்யோசனையின்றி லெவி முறையையும் தானியப் போக்குவரத்துக் கட்டுப்பாடுகளையும் தளர்த்தி விட்டது அரசு. போதிய அளவு தானியக் கொள்முதல் செய்யாமலேயே இந்நடவடிக்கையை மேற்கொண்டது. பலன் இதர மாநிலங்களுக்குக் குறிப்பாகக் கேரளத்துக்கு ஏராளமான அரிசி போய்விட்டது. இங்கே பற்றாக்குறை. இன்று தமிழகம் முழுவதும் அரிசி படி நாலரை ரூபாய் ஐந்து ரூபாய் என்று விற்கிறது.

லாரிகள் வழி மறிக்கப்படுவதும் கடைகளில் ஆர்ப்பாட்ட அராஜகம் நடப்பதும் சகஜமாகி விட்டது. ''சில விஷமிகள் மக்களைத் தூண்டி விடுகிறார்கள்'' என்ற முதல்வரின் கணிப்பு சரியல்ல. மக்கள் அரிசி விலை உயர்வால் ஆத்திரம் அடைந்துள்ளார்கள்.

அதிக விலைக்கு வாங்கி வருவாய் குறைந்தவர்களுக்கு மலிவு விலையில் படிக்குப் பாதியாவது கிடைக்கச் செய்ய அரசு முன் வந்துள்ளது. முதல்வரின் காலம் கடந்த விழிப்புணர்ச்சி! இதனால் அரசுக்கு ஏற்படும் நஷ்டத்தை யார் தாங்கப் போகிறார்கள்? மக்கள் தான் வரிப்பணமாக அழுதாக வேண்டும்.

வியாபாரிகள் பலர் இந்த இக்கட்டான நிலையில் அரசுடன் ஒத்துழைக்கவும் நஷ்டத்துக்குக் கூட விற்கவும் முன்வந்துள்ளார்கள். நஷ்டத்தை மக்களின் வாழ்த்தும் நன்றியும் ஈடு செய்யும்.

ராஜாஜி சிந்தனை

மக்களுக்காக அரசா? அரசுக்காக மக்களா?

குடியரசு என்பது மக்களுக்காக ஏற்பட்டதேயன்றி மக்கள் குடியரசுக்காக அனைத்தையும் தியாகம் செய்யவேண்டும் என்ற கருத்தில் அல்ல.

அதே போல் திட்டம் என்பது மக்களுக்காக ஏற்பட்டதேயன்றி மக்கள் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகச் சகல விதமான கஷ்டங்களையும் அனுபவிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது முறையல்ல.

வாழ்க்கைத்தரம் என்பது எவ்வளவு பணம் நாம் செலவழிக்கிறோம் என்ற கணக்கில் அடங்குகிற விஷயமல்ல. நாம் செலவழிக்கும் பணத்தால் நாம் அடைகிற பலனை, வசதிகளைப் பொருத்ததே வாழ்க்கைத் தரமாகும்.

- 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' ஜனவரி 27, 1962

சிவத்தின் சக்தி: நாராயண சகோதரி

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

பரப்பிரம்மத்தின் சக்திதான் அம்பாள். ஒரு வஸ்துவின் சக்தி அந்த வஸ்துவோடு இரண்டறக் கலந்த விஷயம். வஸ்து இல்லாமல் அந்த சக்தி இல்லை. சக்தி இல்லாவிட்டால் அந்த வஸ்துவும் இல்லை. ஆனபடியால் பிரம்மமேதான் சக்தி. பிரம்மத்தை ஈசுவரன் என்றால் அந்த ஈசுவரனோடு இரண்டறக் கலந்திருக்கிறவள் அம்பாள். புஷ்பத்தில் சுகந்தம் போலவும், பாலில் வெண்மை போலவும், தேனில் மாதுர்யம் போலவும் ஈசுவரனில் பிரிவறத் தோய்ந்திருக்கிறாள் அம்பாள். பரமேசுவரனும் பராசக்தியும் பிரிக்க முடியாமல் ஒன்றாயிருக்கிற ஆதி தம்பதி சகல சிருஷ்டிக்கும் தந்தையும் தாயும் அவர்கள்தாம்.

தாய் வேறு, தந்தை வேறு என்று ஒரேயடியாகப் பிரித்துச் சொல்ல முடியாமல் அம்மையப்பனாக, தாயுமானவராக இருக்கிற ஸ்வரூபம் அது. இரண்டும் இரு ரூபமாக இல்லாமல் ஒன்றாகக் கலந்த இந்த சிவ–சக்தியே அர்த்த நாரீசுவரத் திருக்கோலம். நமக்கு அம்மா, அப்பா என்று இரண்டு ரூபங்கள் அநுக்கிரகத்துக்கு வேண்டியிருக்கின்றன. ஆனால் அவர்கள் வேறு வேறாகப் பிரிந்திருந்தாலும் தத்துவ ரீதியில் சரியாக இல்லை. இதனால்தான் ஈசுவரனும் அம்பாளும் ஒரே சரீரத்தில் ஒரு பாதி அவர், மறு பாதி இவள் என்று அர்த்த நாரீசுவரராக ஆவிர்பவித்திருக்கிறார்கள்.

'சம்பு என்கிற சத்தியம் அருவமானது; அதன் உருவமே நீதான்' (சரீரம் த்வம் சம்போ:) என்று நம் ஆசார்யாள் அம்பாளைப் பார்த்துச் சொல்கிறார். அரூபம் ரூபமானதே அவளது சக்தியால்தான். ஆனாலும் சுத்த ஞான மயமாக இருக்கப்பட்ட அரூபமான பிரம்மம், அதன் அநுக்கிரக ரூபமான அம்பாள் இரண்டையும் ஒரே ரூபத்தில் தந்தையாகவும் தாயாகவும் பார்க்க வேண்டும்போல் நமக்கு ஆசையாக இருக்கிறது. இதற்காகவே இருவரும் சேர்ந்து வலப் பாதி பரமேசுவரனாகவும், இடப் பாதி அம்பாளாகவும் அர்த்தநாரீசுவர ரூபம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பாஸிடிவ், நெகடிவ் என்கிற இரண்டாக ஒரே எலெக்ட்ரிஸிடி இருப்பது போல் ஒரே பரம சத்தியம் அர்த்த நாரீசுவர ரூபம் கொண்டிருக்கிறது.

அர்த்த நாரீசுவரக் கோலத்தைப் பார்க்கிறபோது, பிறப்புக்குக் காரணமான காமனைத் தகனம் செய்த நெற்றிக் கண்ணில் பாதி சம்பந்தம் அம்பாளுக்கு இருக்கிறது. இறப்புக்குக் காரணமான காலனை உதைத்து சம்ஹாரம் பண்ணின இடது காலோ முழுக்கவும் அவளுடையதாக இருக்கிறது. ஜனன மரணச் சூழலிலிருந்து ஜீவனை விடுவிக்கிறவள் அவள்தான்.

சிவமும் சக்தியும் பிரிக்க முடியாதவை என்பதை அறிந்து, ஸ்வாமி அம்பாள் இருவரிடத்திலும் ஒரே போன்ற பக்தி வைக்க வேண்டும். ஒருத்தரை ஒதுக்கி மற்றவரிடம் மட்டும் பக்தி வைத்தால் போதாது என்பார்கள். இரண்டு பேரிடமும் சேர்ந்து அன்பு வைக்கிறபோதுதான், அவர் அவளுடைய பதி, அவள் அவருடைய சக்தி என்கிற ஞானம் நீங்காமல் இருக்கும். இருவரில் ஒருத்தரை ஒதுக்கி விட்டால் இந்த சதி – பதி உறவு மறந்துபோய், பக்தி விபரீதமாகிறது. சூர்ப்பனகை சீதையைத் துவேஷித்து ராமரிடம் மட்டும் வைத்த அன்பும், ராவணன் ராமரைத் துவேஷித்து சீதா தேவியிடம் மட்டும் வைத்த அன்பும் விபரீதமாகிக் காமமாக ஆயிற்று என்று உங்களுக்குத் தெரியும். பலனும் விபரீதமாகவே ஆயிற்று. இப்படி விபரீத பலன்கள் இல்லாமல், பூரண அநுக்கிரகம் பெற வேண்டுமானால், அம்பாளும் ஈசுவரனும் அர்த்தநாரீசுவரராக இருப்பதை எந்நாளும் மறக்காமல் பக்தி செலுத்த வேண்டும். அவர் 'மாதொரு பாகன்', அவள் பாகம் பிரியாள்' என்பதை நினைவு கொண்டு இருவரிடமும் அன்பு வைக்க வேண்டும்.

அர்த்த நாரீசுவர ரூபத்தில் எந்த இடது பக்கம் அம்பாளுடையதாக இருக்கிறதோ, அதுவே சங்கர நாராயண மூர்த்தியில் மகா விஷ்ணுவுடையதாக இருக்கிறது. இதிலிருந்து அம்பாளேதான் மகா விஷ்ணு என்றாகிறது. திருவையாற்றில் உள்ள ஈசுவரனைப் பற்றித் துதிக்கிறபோது, அவருக்கு ஹரியைத் தவிர வேறு பத்தினி இல்லை என்று அப்பர் ஸ்வாமிகள் சொல்கிறார்:

அரியலால் தேவியில்லை
ஐயன் ஐயாறனார்க்கே

அம்பாளும் மகா விஷ்ணுவும் ஒன்றேதான் என்கிற தத்துவத்தையே புராண ரீதியில் சொல்கிறபோது அவளை நாராயண சகோதரி என்கிறோம்.





இப்போது!

நீடித்த அழகு
நவீன நாகரீக வசதி
இரண்டையும் உங்கள்
சமையலறைக்குச் சேர்ப்பது

ஹரால்ட்வேர்



சமைத்தவுடன் பரிமாறும் பாத்திரங்கள் உபயோகிப்பதில் நீங்கள் பெருமையடைவீர்கள்!

ஹரால்ட்வேர்-சமையலறையானாலும் சரி சாப்பாட்டு மேசையானாலும் சரி...ஏற்றமிகு எழில் சேர்க்கும்.
நாகரீக இல்லத்தரசிக்கு உகந்த சமையலறைப் பாத்திரங்களின் சீர் வரிசை

ஹரால்ட்வேர்-கண்ணுக்கு-கட்டுறுதி வாய்ந்தது.
பல்லாண்டுகள் நீடித்து ஒளி சிந்தும் எழில் தோற்றம். கெட்டியான தூய அலுமினியத்தினால் செய்யப்பட்டது.

ஹரால்ட்வேர்-இதில் அதிகப்படி கனமுள்ள அடித்தளம் இருக்கிறது.
எனவே சூடு நன்றாகப் பரவுவதோடு நீண்ட நேரம் சூடாகவே வைத்திருக்கிறது.



ஹரால்ட்வேர்-இதில் ஸ்டாண்டாகவும் பயன்படும் மூடியிருக்கிறது. உங்கள் மேசையில் சூட்டுக்கறை படியாமல் காக்கிறது.
தேவைப்பட்ட போது, மூடியை ஸ்டாண்டாகவும் பயன்படுத்தலாம். **ஹரால்ட்வேர் ரகம்** ஃப்ரையிங் பேன்ஸ், சாஸ்பேன்கள், காஸராால்கள், கெட்டில்கள் பல சைஸ்களில் கிடைக்கும். எல்லாத் தருணத்திற்கும் ஏற்ற பரிசு.

IS:21 ISI SIC
* அலுமினியம் ஐ.எஸ். விதிகளுக் குட்பட்டது

தயாரித்துவிற்பனை செய்வோர்
லாலுபாய் அமிசந்த் பி லி.
225-27 ஜே தாதாஜி ரோடு.
பம்பாய் 400 007

மேலும் விவரமறிய உங்கள் ஹரால்ட்வேர் வியாபாரியை அணுகுக அல்லது ஹரால்ட்வேர் போல்டருக்கு எழுதுக.

தமிழ்நாடு, கேரளா, ஆந்திரப் பிரதேசம், பாண்டிச்சேரி ஆகிய இடங்களுக்கு விநியோகஸ்தர்கள்
போபட் ஜமால் அண்ட் சன்ஸ் ஜமால் பில்டிங் 182, பிராட்வே சென்னை-600 001

Ratan Batra/LA/TM/04-AR



சிவகாமியின் சபதம்

அமரர் கல்கி

இரண்டாம் அத்தியாயம்


யானைப் பாலம்

அந்த வருஷத்தில் ஆனி மாதக் கடைசியிலேயே காவேரியிலும் கொள்ளிடத்திலும் வெள்ளம் வந்து விட்டது. வாதாபிச் சக்கரவர்த்தியும் அவருடைய சைனியமும் இரண்டு வாரம் பிரயாணம் செய்து கொள்ளிடக் கரைக்கு வந்து சேர்ந்தபோது அந்த நதியில் இரு கரையையும் தொட்டுக் கொண்டு தண்ணீர்ப் பிரவாகம் போய்க் கொண்டிருந்தது.

கொள்ளிடத்துக்கு அக்கரையில் சேந்தன் ஜயந்தவர்ம பாண்டியன் தன்னுடைய சைனியத்துடன் தங்கிப் பாசறை அமைத்திருந்தான். அவனோடு கொடும்பாளூர் மாதலக் களப்பாளனும் சேரநாட்டுச் சிற்றரசன் இளஞ்சேரலாதனும் தங்கி யிருந்தனர்.

பாண்டியன், தன் சகோதரியை மாமல்லர் கல்யாணம் செய்துகொள்ள மறுத்ததன் காரணமாகப் பல்லவர்மீது பெரிதும் கோபம் கொண்டிருந்தான். காஞ்சி முற்றுகை ஆரம்பித்த சில தினங்களுக்கெல்லாம் பாண்டிய சைனியம் காவேரிக்கும் கொள்ளிடத்துக்கும் நடுவிலிருந்த பகுதியை அடைந்து விட்டது. பாண்டியனுக்கு அக்காலத்தில்

கப்பம் கட்டிக் கொண்டிருந்த கொடும்பாளூர் மாதவக் களப்பாளனும் சேரன் இளஞ்சேரலாதனும் ஜயந்தவர்மன் விருப்பத்தின்படி தாங்களும் தங்கள் சிறு சைனியங்களுடன் வந்திருந்தனர். அக் காலத்தில் கொள்ளிடத்துக்குத் தெற்கேயிருந்த தமிழ் மன்னர்கள் அனைவரும் பல்லவர்களிடம் விரோதம் கொண்டிருந்தார்கள். எனவே, ஜயந்தவர்மனும் மற்ற இரு குறுநில மன்னர்களும் இச்சமயம் வாதாபிச் சக்கரவர்த்தியுடன் சேர்ந்து கொண்டு பல்லவ வம்சத்தாரிடம் தங்களுக்கிருந்த வர்மத்தைத் தீர்த்துக் கொள்ளச் சித்தமாயிருந்தார்கள். இவர்களுடன், சமீபத்திலேதான் உறையூர்ச் சிம்மாசனம் ஏறியிருந்த பார்த்திப சோழன் மாத்திரம் சேர்ந்து கொள்ளவில்லை. பார்த்திப சோழனும் பல்லவர் ஆதிக்கத்தை வெறுத்தானாயினும் வடநாட்டிலிருந்து படையெடுத்து வந்தவர்களுடன் சேர்ந்து கொள்வதற்கோ, அவர்களுடைய தயவை நாடுவதற்கோ அவனுக்கு மனம் வரவில்லை.



மகேந்திர பல்லவரின் தந்தை சிம்ம விஷ்ணுவின் காலத்திலிருந்து இளைச் சோழ நாடு பல்லவரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என்பதை முன்னமே தெரிந்து கொண்டோ மல்லவா? மற்றப்படி எது எப்படிப் போனாலும், இந்தச் சந்தர்ப்பத்தில் இளைச் சோழ நாட்டைத் தான் கைப்பற்றிப் பாண்டிய இராஜ்யத்துடன் சேர்த்துக் கொள்வதென்று ஜயந்தவர்மன் தீர்மானித்திருந்தான்.

ஆனால், இளைச் சோழ நாட்டு மக்கள் இதைச் சிறிதும் விரும்பவில்லை. அவர்கள் தலைமுறை தலைமுறையாகச் சைவ சமயப் பற்றுள்ளவர்கள். சமீப காலத்தில் திருநாவுக்கரசருடைய மகிமையினால் மகேந்திர பல்லவர் சைவ சமயத்தைத் தழுவியது முதல், சோழ நாட்டு மக்கள் பல்லவ சக்கரவர்த்தியிடம் விசேஷப் பக்தி கொண்டிருந்தார்கள். எனவே, ஜயந்தவர்ம பாண்டிய மன்னன் எதிர்பார்த்தபடி சோழ நாட்டார் அவனை உற்சாகமாக வரவேற்கவில்லை. இதனாலும் பல மாத காலம் கொள்ளிடக் கரையிலேயே காத்துக் கொண்டிருக்க நேர்ந்ததாலும் ஜயந்த வர்மன் எரிச்சல் கொண்டிருந்தான். காஞ்சி நகர் முற்றுகை நெடுங்காலம் நீடித்ததில் வாதாபிச் சக்கரவர்த்தியிடம் அவனுக்கு முன்னமே இருந்த மரியாதை குறைந்து போயிருந்தது. எனவே, கொள்ளிடத்துக்கு அக்கரையில் புலிகேசி வந்துவிட்டது தெரிந்த பிறகும் அவனைப் போய்ப் பார்க்கப் பாண்டியன் எவ்விதப் பிரயத்தனமும் செய்யவில்லை. கொள்ளிடத்தில் பிரவாகம் அதிகமாயிருந்ததைச் சாக்காக வைத்துக் கொண்டு பரிவாரங்களுடன் அக்கரை வருவதற்குத் தன்னிடம் போதிய படகுகள் இல்லையென்று செய்தி அனுப்பினான்.


புலிகேசி அதற்கு மறுமொழியாக, கொள்ளிடத்துக்குப் பாலம் கட்டிக் கடந்து நதியின் தென் கரைக்கு வந்து தானே பாண்டியனைச் சந்திப்பதாகச் சொல்லியனுப்பினான். இதைக்கேட்டபோது, பாண்டியனுக்கு முதலில் வேடிக்கையாகத் தோன்றியது. ''கொள்ளிடத்துக்காவது பாலம் கட்டவாவது! — இதென்ன பைத்தியம்!'' என்று சொல்லிச் சிரித்தான்.

ஆனால், மறுநாள் பாண்டியன் தான் தண்டு இறங்கிய இடத்திலிருந்து கொள்ளிட நதியை நோக்கியபோது ஓர் அதிசயக் காட்சியைக் கண்டான். கொள்ளிடத்துக்கு உண்மையாகவே பாலம் போட்டிருந்தது. சாதாரணப் பாலம் அல்ல; நதியில் யானைகளை வரிசையாக நிறுத்தி வைத்து, அவற்றின் முதுகின் மேல் பலகைகளைக் கோத்து அதிசயமான பாலம் அமைத்திருந்தார்கள்! இந்த அபூர்வமான காட்சியானது பாண்டிய மன்னனுக்கு வாதாபிச் சக்கரவர்த்தியின் மேல் மறுபடியும் மரியாதையை உண்டாக்கிற்று.

அந்த யானைப் பாலத்தின் வழியாகப் புலிகேசி தன்னுடைய முக்கிய பரிவாரங்களுடன் ஆற்றைக் கடந்து வரவே, பாண்டியனும் மற்ற இரு குறுநில மன்னர்களும் அவனுக்குத் தக்க மரியாதை செய்து இராஜோபசாரத்துடன் வரவேற்றார்கள்.

பேரரசர்கள் இருவரும் மூன்று தினங்கள் பரஸ்பரம் அளவளாவி மகிழ்ந்தார்கள். பல்லவர்களுடைய கொட்டத்தை அடக்க வேண்டும் என்பதில் இருவருக்கும் பூரண மன ஒற்றுமை இருந்தது. எனவே, பல்லவ வம்





சந்தை அடியோடு அழித்து விட வேண்டும் என்றும், காஞ்சி நகரம்வரையில் பாண்டிய இராஜ்யத்துடன் சேர்த்து விட வேண்டும் என்றும் காஞ்சிக்கு வடக்கேயுள்ள பகுதியைச் சளுக்க சாம்ராஜ்யத்துடன் சேர்த்து விட வேண்டுமென்றும் அவர்கள் ஏக மனதாக முடிவு செய்தார்கள்.

ஜயந்தவர்ம பாண்டியன் தானும் தன் சைன்யத்துடன் காஞ்சிக்கு அப்போதே புறப்பட்டு வருவதாகச் சொன்னபோது, காஞ்சியைக் கைப்பற்றும் கௌரவத்தைத் தனக்கே விட்டுவிட வேண்டும் என்று புலிகேசி வற்புறுத்தினான். காஞ்சிக் கோட்டை பணிந்ததாகக் கேள்விப்பட்டவுடனே பாண்டியன் அங்கிருந்து கிளம்பிக் காஞ்சிக்கு வரலாமென்றும், இப்போதைக்கு வாதாபிச் சைனியத்துக்கு உணவுப் பொருள் மாத்திரம் கொடுத்து உதவும்படியாகவும் புலிகேசி கூற, பாண்டியனும் அதற்கு இணங்கி, தன் சைனியத்துக்காகச் சேகரித்து வைத்திருந்த உணவுப் பொருள் அவ்வளவையும் சளுக்கப் படைக்குக் கொடுத்துதவ ஒப்புக்கொண்டான்.

மூன்றாம் அத்தியாயம்

உடன்படிக்கை

வாதாபிச் சக்கரவர்த்தியும் பாண்டிய மன்னனும் விரைவில் மனமொத்த சிநேகிதர்களாகி விட்டார்கள். ஜயந்தவர்மன் கொள்ளிடத்து வடகரைக்கு வந்து சில நாட்கள் தன்னுடைய விருந்தாளியா யிருக்க வேண்டு மென்று புலிகேசி கேட்டுக் கொண்டான்.

அவ்விதமே ஜயந்த வர்மன் தன்னுடைய முக்கிய மந்திரி பிரதானிகளுடன் மறுநாள் கொள்ளிடத்தின் வட கரைக்கு வந்தான். புலிகேசி ஆடம்பர இராஜோபசாரங்களுடன் ஜயந்தவர்மனை வரவேற்றதுடன் தன்னுடைய நால்வகைப் படைகளையும் ஜயந்தவர்மனுக்குக் காட்டி, அவன் பிரமிக்கும்படி செய்தான். தடபுடலான விருந்துக்குப் பிறகு வாதாபியின் வில்லாளிகள், வாள் வீரர்கள், மாமல்லர்கள் முதலியோர் அந்தப் பேரரசர்களின் முன்னிலையில் தத்தம் திறமைகளைக் காட்டினார்கள்.

பிறகு வாதாபியின் அரண்மனைக் கவிஞர் சந்தர்ப்பத்துக்கேற்பத் தாம் புனைந்திருந்த புகழ்ச்சிக் கவிதைகளைப் பாடினார். கணக்கற்ற வெண்கொற்றக் குடைகளினாலும், வெண்சாமரங்களினாலும் அலையெறியும் திருப்பாற்கடலைப் போல் விளங்கிய வாதாபியின் சேனா சமுத்திரமானது துங்கபத்திரை நதிக் கரையிலிருந்து பொங்கித் தெற்கு நோக்கி வந்தது பற்றியும் அந்தச் சேனா சமுத்திரத்தைத் தூரத்தில் கண்டதுமே காஞ்சி மகேந்திர பல்லவன் நடுநடுங்கிப் போய்த் தனது சிறு குட்டையை யொத்த படையுடன் காஞ்சிக் கோட்டைக்குள் ஒளிந்து கொண்டது பற்றியும், பிறகு வாதாபிச் சக்கரவர்த்தி அழகிய கயல்மீன்கள் துள்ளி விளையாடும் காவேரி நதியைக் காண ஆவல் கொண்டு தெற்கு நோக்கி வந்தது பற்றியும், காவேரிக் கரையில் மதுரைப் பாண்டிய மன்னனைச் சந்தித்து அளவளாவி மகிழ்ந்தது பற்றியும், வாதாபியின் யானைகள் காவேரியில் வரிசையாக நின்று பாலம் அமைத்த போது காவேரியின் நீரோட்டம் தடைப்பட்டு நின்றது பற்றியும், யானைகளின் மதநீர் நதியில் விழுந்ததனால் பிரவாகம் மேலும் பெருகிக் கரைகளை மோதியது பற்றியும் வர்ணித்திருந்த பாடல்களை வாதாபியின் ராஜகவி பாடியபோது, பாண்டியனும் மற்றச் சிற்றரசர்களும் மது உண்டவர்களைப் போல் மதிமயங்கி நின்றார்கள்.

எல்லாம் முடிந்து ஜயந்தவர்ம பாண்டியன் புலிகேசியிடம் விடைபெற வேண்டிய சமயம் வந்தபோது, ''சத்யாச்ரயா! பல்லவனை முறியடித்துக் காஞ்சியைக் கைப்பற்றிய பிறகு அப்படியே தாங்கள் திரும்பிப் போய்விடக்

கூடாது. மதுரைக்கும் விஜயம் செய்து விட்டுப் போக வேண்டும்!'' என்றான்.

அந்த நாளில் காஞ்சிக்கு அடுத்தபடியாகத் தென்னாட்டில் பிரசித்தமாக விளங்கிய மதுரைமாநகருக்கும் புலிகேசி வந்தால் பாண்டியர்களின் சீர் சிறப்புகளையெல்லாம் காட்டி அவனைப் பிரமிக்கச் செய்யலாம் என்பது ஜயந்தவர்மனுடைய எண்ணம்.

அதைக்கேட்ட புலிகேசி ஒரு பெருமூச்சு விட்டான். ''ஆம், எனக்கு மதுரையையும் பார்க்க வேண்டுமென்ற எண்ணம் வெகு காலமாக உண்டு. காஞ்சியைப் பற்றி எழுதிய பிக்ஷு மதுரையைப்பற்றி எழுதியிருந்தார். ஆனால்...'' என்று புலிகேசி சொல்லி வரும்போதே பாண்டியன் குறுக்கிட்டு, ''புத்த பிக்ஷுவைப் பற்றித் தங்களை நானே கேட்க வேண்டுமென்றிருந்தேன். அவர் எங்கே? தங்களுடன் அவர் இருப்பார் என்றல்லவா எண்ணினேன்?'' என்றான்.

''பிக்ஷுவைப் பற்றித்தானே தகவல் ஒன்றும் தெரியவில்லை. அவரைப் பற்றி நான் தங்களிடம் கேட்க வேண்டுமென்றிருந்தேன். மதுரைக்கு வந்திருந்தார் அல்லவா? அங்கே என்ன நடந்தது? தங்களிடம் என்ன சொல்லி விட்டுக் கிளம்பினார்? எங்கே போவதாகச் சொன்னார்?'' என்று வாதாபி மன்னன் வினவினான்.

பிக்ஷு மதுரைக்கு வந்த சமயம் தன் தந்தை காலமானதும் அதனால் ஏற்பட்ட குழப்பத்தில் பிக்ஷு சிறைப்பட்டதும், தனக்கு முடிசூட்டு நடந்த பிறகு பிக்ஷுவைத் தான் விடுதலை செய்ததும் ஆகிய விவரங்களைக் கூறிவிட்டு ஜயந்தவர்மன் மேலும் சொன்னதாவது: ''பிக்ஷு விடுதலையான உடனேயே வாதாபி சைனியம் காஞ்சியை அணுகி விட்டதா என்று அவர் என்னைக் கேட்டார். 'இல்லை; இன்னும் வட பெண்ணைக் கரையிலேயேதான் இருக்கிறது' என்று நான் தெரிவித்ததும் அவர் பெரிதும் ஆச்சரியமடைந்தார். என்னைச் சைனியத்துடன் கொள்ளிடக் கரைக்கு வந்திருக்கும்படி கூறிவிட்டுத் தாம் முன்னாலே போவதாக அவர் கிளம்பினார். பின்னர், தங்களை வந்து அவர் சந்திக்கவேயில்லையா?''

''இல்லை; அதுதான் மிக்க அதிசயமாயிருக்கிறது. அந்த மூடன் துர்விநீதனால் இவருக்கும் ஏதாவது நேர்ந்து விட்டதோ என்னவோ? ஒன்றுமே தெரியவில்லை. பிக்ஷு இல்லாதது எனக்கு ஒரு கை இல்லாதது மாதிரி இருக்கிறது'' என்றான் புலிகேசி.



இதற்குப் பாண்டியன், ''ஆமாம்; ஒருசில நாள் பழக்கத்திலேயே பிக்ஷுவிடம் எனக்கு மிக்க மதிப்பு ஏற்பட்டு விட்டது. ஆனால், இந்தக் கங்க நாட்டான் எதற்காக இப்படி அவசரமாகச் சென்று அகப்பட்டுக் கொண்டான்? பிக்ஷு என்னிடம் சொன்னது ஒன்று; துர்விநீதன் செய்தது வேறொன்றாகவல்லவா இருக்கிறது? ஒருவேளை மகேந்திர பல்லவன் தப்பி ஓட முயன்றால் நான் கொள்ளிடக் கரையில் நின்று தடுக்க வேண்டுமென்றும், துர்விநீதன் மேற்கு எல்லையில் நின்று தடுக்க ஏற்பாடு செய்திருப்பதாகவும் பிக்ஷு சொன்னார். அப்படியிருக்க, துர்விநீதன் எதற்காக அவசரப்பட்டுக் காஞ்சியை நெருங்கினான்? அதனால் புள்ளலூரில் ஏதோ பிரமாத வெற்றியடைந்து விட்டதாகப் பல்லவன் பறையடித்துக் கொள்ள இடம் கொடுத்து விட்டானே! அதனாலேயல்லவா பல்லவ நாட்டு மக்களும் சோழ நாட்டுக் குடிகளும் கூட மிக்கக் கர்வம் கொண்டிருக்கிறார்கள்!'' என்றான்.

''துர்விநீதன் விஷயம் பெரிய மர்மமாகத்தான் இருக்கிறது. அவன் உயிரோடிருக்கிறானா, செத்துப் போய் விட்டானா என்று கூட நிச்சயமாகத் தெரியவில்லை. அவனைப் பற்றித் தெரிந்தால் பிக்ஷுவைப் பற்றியும் ஏதாவது விவரம் அறியலாம். ஆனால், இந்தத் தரித்திரம் பிடித்த பல்லவ நாட்டுக் கிராமங்களில் யாரை என்ன கேட்டாலும் 'எங்களுக்கு ஒன்றும் தெரியாது' என்கிறார்கள். ஒவ்வொரு சமயம் எனக்கு வருகிற கோபத்தில் பல்லவரின் ஆட்



சிக்கு உட்பட்ட கிராமங்களிலே ஒரு வீடு ஒரு கூரை மிச்சமில்லாமல் எல்லாவற்றையும் கொளுத்தி, பஸ்மீகரம் செய்து விடலாமா என்று தோன்றுகிறது!'' இவ்விதம் புலிகேசி கூறிய போது ஏற்கெனவே கோவைப் பழம் போல் சிவந்திருந்த அவனுடைய கண்களில் அக்கினி ஜ்வாலை வீசிற்று.

''ஆமாம், ஆமாம். நானும் எல்லாம் கேள்விப்பட்டேன். ஏரிகளையெல்லாம் உடைத்து விட்டு இந்த வருஷம் கோடைக்காலத்தில் சாகுபடியே செய்யாமல் பல்லவ நாட்டு மக்கள் இருந்து விட்டார்களாம். எந்தக் கிராமத்துக்குப் போனாலும் பஞ்சப் பாட்டுப் பாடுகிறார்களாம். தானியத்தை ஒளித்து வைத்துக் கொண்டு, 'எங்களுக்கே சாப்பாடு இல்லை; பட்டினி கிடக்கிறோம்' என்று முறையிடுகிறார்களாம். பொல்லாத ஜனங்கள்!'' என்றான் பாண்டியன்.

'' அவர்களுடைய பொல்லாத்தனத்தை அடக்க எனக்கு வழி தெரியும். ஒளித்து வைத்திருக்கும் தானியங்களை எடுத்துக் கொடுக்கும்படி செய்யவும் தெரியும். அதெல்லாம் இப்போது வேண்டாம் என்று பார்த்துக் கொண்டிருக்கிறேன்.''

''இந்தச் சோழ நாட்டுத் திமிர் பிடித்த மக்களுக்கு நானும் ஒரு நாள் பாடம் கற்பிக்க வேண்டும். காஞ்சிக் கோட்டை பிடிபடட்டும் என்றுதான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். இருக்கட்டும்; துர்விநீதனைப் பற்றி யல்லவா கேட்டுக்கொண்டிருந்தீர்கள்? என்னுடைய ஒற்றர்கள் ஏதோ சொன்னதாக ஞாபகம் இருக்கிறது. இதோ விசாரிக்கிறேன்!'' என்று ஜயந்தவர்மன் கூறித் தன்னுடைய ஒற்றர் படைத் தலைவனை வரவழைத்துக் கேட்டான்.

ஒற்றர் தலைவன் கூறியதாவது: ''நம்முடைய சைனியம் காவேரியைத் தாண்டிக் கொள்ளிடத்தை நெருங்கிக்கொண்டிருந்தபோது, புள்ளலூர்ச் சண்டையைப் பற்றிய செய்தி வந்தது. உடனே சிலரை நான் அனுப்பி நிலைமையை விசாரித்து வரச் செய்தேன். புள்ளலூரில் தோல்வி யடைந்து கங்க ராஜா தெற்கு நோக்கி ஓடி வந்தாராம். அவரை மாமல்லர் துரத்தி வந்தாராம். திருப்பாற்கடல் என்னும் பெரிய ஏரி உடைத்துக்கொண்டு மாமல்லரைத் தடை செய்ததாம். இதனால் கங்கராஜா தென்பெண்ணைக்கு இக்கரை வந்து, பாடலிபுரத்துச் சமணர் பள்ளியில் ஒளிந்து கொண்டாராம். பிறகு என்ன நடந்தது என்று தெளிவாகத் தெரியவில்லை. திருக்கோவலூர்க் கோட்டத் தலைவன் சமணப் பள்ளியைத் தாக்கி இடித்துக் கங்க மகாராஜாவைச் சிறைப் பிடித்துக் கொண்டு போனதாகச் சில ஜனங்கள் பேசிக் கொண்டார்களாம். திருக்கோவலூருக்குத் தெற்கேயுள்ள மலைப் பிரதேசத்தில் சிறை வைத்திருப்பதாகவும் வதந்தியாம்.''

பிறகு பேரரசர்கள் இருவரும் கலந்தாலோசித்துப் பின்வரும் திட்டத்தை வகுத்துக் கொண்டார்கள். புலிகேசி காஞ்சிக்குத் திரும்பிச் சென்று கோட்டை முற்றுகையை இன்னும் தீவிரமாக நடத்த வேண்டியது; காஞ்சிக் கோட்டை பணிகிறவரையில், வாதாபி சைனியத்துக்கு வேண்டிய உணவுப் பொருள்களைப் பாண்டிய மன்னன் அனுப்பிக் கொண்டிருக்க வேண்டியது.

கொள்ளிடத்தில் தண்ணீர் குறைந்ததும் பாண்டியன் தன் சைனியத்துடன் நதியைத் தாண்டி முன்னேறி வந்து தென் பெண்ணை நதி வரையில் கைப்பற்றிக் கொள்ள வேண்டியது. திருக்கோவலூர்க் கோட்டத் தலைவனைப் பிடித்துக் கடுமையாகத் தண்டிப்பதுடன் அங்குள்ள மலைப் பிரதேசத்தில் துர்விநீதன் சிறைப்பட்டிருந்தால், அவனை விடுதலை செய்து அனுப்பி வைக்க வேண்டியது.

இந்த உதவிகளையெல்லாம் பாண்டியன் செய்வதற்குக் கைம்மாறாகக் குமரி முனையிலிருந்து தென்பெண்ணை வரை உள்ள பிரதேசத்தின் மகா சக்கரவர்த்தியாக ஜயந்தவர்ம பாண்டியனைப் புலிகேசி அங்கீகரிக்க வேண்டியது.

மேற்கண்டவாறு இரு தரப்புக்கும் திருப்திகரமான உடன்படிக்கையைச் செய்து கொண்ட பிறகு, ஜயந்தவர்ம பாண்டியன் வாதாபிச் சக்கரவர்த்தியிடம் விடைபெற்றுக் கொண்டு பழையபடி கொள்ளிடத்துத் தென் கரை போய்ச் சேர்ந்தான். (தொடரும்)

SWARAJYA was the mouthpiece of Rajaji for many years before his death in December 1972. He tried to instil in the minds of the readers deep devotion to moral values and uncompromosing adherence to truth. After his death, the SWARAJYA has endeavoured to follow the same path and to uphold the same ideals. Mr. K. Santhanam, the present Editor, worked under Rajaji and was his co-worker in the struggle for freedom and was in intimate touch with him till the end. It was at Rajaji's instance that he took up the editorship of the SWARAJYA in April 1971.

The object of the SWARAJYA is to give a rational and objective analysis of current political, economic and social problems of India and to offer constructive criticism of the policies and procedures of the Central and State Governments in relation to them. It was felt that in respect of a big issue, a single article or the opinion of a single individual will not be adequate. It was therefore decided to start a new feature under the heading "Topic of the quarter" from 1st July 1973. Every issue for three months was to contain articles on the selected topic from distinguished specialists and experts in the field.

The fifth and current Topic of the Quarter - July - September 1974 in Swarajya is **"Cultural Development and Integration of India"** and the contributors amongst others are:

Krishna Kripalani
K. Chandrasekharan
Dilip Kumar Roy
James A. Rubin
D. P. Roy Chowdhry
S. Y. Krishnaswami
Raj Kapoor
Harendranath Chattopadhyaya
Dr. V. Raghavan
Dr. P. V. Rajamannar
Elayaraja of Travancore
Vyjayathimala Bali
Dr. Gautham
Rukmini Devi
C. V. Narasimhan
R. K. Narayan
Dr. V. K. Narayana Menon
Ravi Shankar and
Vijay Merchant

ARE YOU READING SWARAJYA REGULARLY?

Rates of subscription:

	Annual	Half Yearly
INDIA	Rs. 20.00	Rs. 10.00
FOREIGN	Rs. 48.00	Rs. 24.00

Single Copy: 40 Paise

SWARAJYA

KALKI BUILDINGS, CHETPUT, MADRAS - 600031



காந்தன்

பெண் ஒன்று கண்டேன்

பெண்ணை அஃறிணைப் பொருளாக மாற்றி விட்டார்கள். மேஜையும் நாற்காலியும் உயிர் பெற்றுக் காதல் புரிவது அடுத்த திரையுலகப் புரட்சியாக இருக்கலாம்!

படித்த பெண்ணை மூத்தவனுக்குக் கல்யாணம் செய்து வைத்து அவனது அட்டகாசம் பொறுக்காமல் படிக்காத பட்டிக்காட்டுப் பெண்ணை இரண்டாவது மகனுக்குக் கல்யாணம் செய்து வைக்க முயன்று தோற்றுப் போன பெற்றோர்களின் கதை!

எம். ஆர். ஆர். வாசு முற்றிலும் மாறுபட்டு, நல்லவனாக நடித்துக் குணச்சித்திர நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார்.

முத்துராமன் மிகவும் அருமையாகப் பாத்திரத்தை உணர்ந்து நடித்திருக்கிறார். அப்பாவுக்குப் பயப்படும் கட்டங்களில் திறமையை மிகவும் இயல்பாக வெளிப்படுத்தியிருக்கிறார்; பிரமீளாவின் நடிப்பு இப்படத்தின் சிறப்பு அம்சம். ஏழை அப்பாவிப் பெண்ணாக வந்து காதலன் வீட்டில் இடம் பிடித்துக் கொண்டபோதும், மாமியார், மாமனார் இருவரிடமும் பணிவாகத் தலை அசைவிலேயே நல்ல பெயர் வாங்கியபோதும் பிரமீளாவின் நடிப்பாற்றல் நன்கு பிரகாசிக்கிறது. எம். ஆர். ஆர். வாசுவின் மனைவியாக வரும் சுகுமாரியின் நடிப்பில் எத்தனை குடும்பப் பாங்கு! ஜுரமாய்க் கிடந்த போது, 'தானே சரியாகிவிடும்' என்று வாஞ்சையோடு மருமகளிடம் சொல்லுகிற 'அப்பாவி'த்தனத்தில்தான் எத்தனை கரிசனம்!

நாகேஷ், ஐ. எஸ். ஆர். இருவரும் வேப்பிலையடித்துப் பேய் ஓட்டியதோடு நின்று விடாமல் வில்லன் வேலைகளும் செய்கின்றனர். ஆனால் வேப்பிலை அடிக்கும் காட்சியில் ஒரே ரகளை! சரியாய் எதுவும் காதில் விழவில்லை! நல்ல வேளை, பிழைத்தோம்!

மௌலியின் கதைக்கு வசனம் எழுதியிருப்பவர் சாரி.

பொதுமக்கள் ரசிக்கக்கூடிய சம்பவங்களாகத் தொகுத்து (பொருந்துகிறதோ இல்லையோ) ஒரு திரைக்கதையைத் தயாரித்துப் படமாக்கி விட்டார்கள். அதனாலேயே ஒரு வேளை சக்கைப் போடு போடலாம்! திரை உலகில் சக்கைக்குத்தானே இன்று மதிப்பு!



உனக்கானது...எனக்கு

சோம.மகாதேவன்

“ஆம்பிள்ளைங்கல்லாம் வளையல் போட்டுக்குங்க. மீசையும்தான் எதுக்கு வச்சுக்கனும்?'' என்று, ஊரே ஒரு மிக்கக் கூடியிருக்கும்போது, காறித் துப்பாத குறையாகக் கேட்டுத்தான் விட்டாள் பாப்பாத்தி!

ஊருக்கே மூதியவரும், முதன்மையானவருமான முத்துச் சிங்கம் பாப்பாத்தியைத் திரும்பிப் பார்த்தார். சாவடியின் மேல் திண்ணையிலிருந்து, தூரத்துப் பார்வையில், அவள் மங்கலாகவே தெரிந்தாள்.

இருந்தாலும் பெண்ணாகப் பிறந்தவளுக்கு இத்தனை துடுக்குத்தனம் ஆகாது. அங்கே— அந்தப் போக்கிரியிடம் என்னென்ன பேசினாளோ... இத்தனைக்கும் இவளை உயிரோடு விட்டிருக்கிறானே அவன்!

''முட்டா மூதி....என்ன ஏதுன்னு கேட்டுக்கிட்டு, ஆக வேண்டியதைச் செய்யிறதுக்குத் தானே.... கூடியிருக்கோம். அதுக்குள்ளே கொடு சூரியாக் கொட்டுறியே'' என்றார் சற்றுக் கோபமாக.

இதைத் தொடர்ந்து, கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது.

''இந்தப் புள்ளே...கேட்குறதிலேயும் அர்த்தமில்லாமலா போச்சு. நாமளுந்தான் ரெண்டு தலை முறையா அந்தக் காவல்காரன் வீட்டுக்குக் கப்பம் கட்டிக்கிட்டு வாரோம்'' என்றார் கீழ்த் திண்ணையில் உட்கார்ந்திருக்கும் மேல வீட்டு வேலாயுதம். இவருக்குப் பத்து ஏக்கருக்கு மேலே பருத்திக் காடும், விவசாயத் தோட்டமும் உண்டு.

''அந்தக் கேகலே விடுதலையானது தான்...அவனுக்கு ரொம்பக் குளிர் விட்டுப் போச்சு. இப்ப... கன்னி கழியாத பொண்ணைத் தன்னந்தனியா வழி மறிச்சுப் பேசுற அளவுக்கு வந்திருக்கான். இதுக்கொரு முடிவு காணலையின்னு... சொன்ன மாதிரி நாமெல்லாம் வளையலைத்தான் போட்டுக்கனும்...'' என்றான் இளவட்டங்களுக்கு மத்தியிலிருந்த கந்தசாமி. இவனே — பாப்பாத்தியைக் கட்டப் போறதா இடையிலே பேச்சும் இருக்கிறது.

''ஊரு மொத்தமும்தான் கூடியிருக்கோம். பேச்சைச் சுருக்கிக்கிட்டு ஒரு முடிவுக்கு வாங்க'' என்றார் எதிர்ச்சாரியிலிருந்த ஒரு கிழவர்.

''இந்தக் காட்டுக் காவலை அவன் கிட்டே யிருந்து மாத்தனும். அதுக்கான வகையைப் பாருங்க'' என்று படபடப்போடுதான் சொன்னார் வேலாயுதம்.



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி
ரூ 500/- இரண்டாவது பரிசு பெறும் சிறுகதை

யோசனையில் சற்றே அமைதி நிலவியது.

''அதைத்தான் செய்யணும். காட்டுக் காவலை ஏத்துக்க யாரு முன்னாலே வாரது? அதைச் சொல்லுங்க'' என்று கேட்டார் முத்துச் சிங்கம்.

வேலாயுதம் பதில் சொல்லவில்லை.

யாருமே பேசவில்லை.

யாரே வலிய வந்து மரணத்தின் பிடியில் சிக்கிக் கொள்வார்கள் !

பாப்பாத்தி பெண்ணாகப் பிறந்துவிட்டாள், இல்லையென்றால் அவளேதான் முன்னாலே வந்து நின்றிருப்பாள்.

அவளது கண்கள் கந்தசாமியைச் சுற்றி வட்டமிட்டன.

அவனும் அவளைப் பார்த்தான். இள இரத்தமல்லவா, பார்வையில் நெஞ்சில் சூடேறியது.

அவன் படபடப்புடன் எழுந்து நின்றான்.

''கட்டுக்காவலை... நானே ஏத்துக்கறேன் ! ஆறிலேயும் சாவு — நூறிலேயும் சாவு. வர்றது வரட்டும்'' என்றான் கொந்தளிப்புடன்.

தொடர்ந்து இள வட்டங்களின் மத்தியிலும் ஓர் எழுச்சி தென்பட்டது.

கந்தசாமியைத் தூக்கி நிறுத்திவிட்டார்கள்.

காட்டுக் காவலுக்கோ அல்லது காவு கொடுக்கவோ, கூடியிருந்துதான் முடிவு செய்தார்கள்.

பாப்பாத்தி — கந்தசாமியையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவனது திரண்ட தோள்கள் மலையத்தனை தெரிந்தன, அவள் கண்களுக்கு!

இங்கொன்றும் —அங்கொன்றுமாகப் பசுமையாகத் தெரியும் விவசாயக் கிணறுகளைத் தவிர, அநேகமாக வானம் பார்த்த கரிசல் நிலங்கள்தான். புன்செய்யில் பெரும்பாலும் பருத்தியே சாகுபடியாகும்.

இந்தப் பருத்திக் காட்டுக்குப் பரம்பரையாகவே காவல் கட்டு உண்டு. காவல் இல்லையென்றாலும், போட்ட முதலுக்கும், உழைத்த உழைப்புக்கும் உண்டான பலன் உருப்படியாக வீடு வந்து சேராது. இந்த வகையில் களவென்று போகாமல், காப்பாத்திக் களம் சேர்ப்பதில், காவல் இருப்பவன் கைகாரனாகவே இருக்க வேண்டும்.

முத்தையாவுக்கு வயது முப்பத்தைந்து இருக்கும். இந்தக் காட்டுக் காவல் தகப்பன் வழி வந்த பட்டயம். இதிலேயே கைகாரனாக வளர்ந்து விட்டவன். இன்றைக்கு, வளர்த்து விட்டவர்களாலேயே மடக்க இயலவில்லை. களவு என்னவோ எள்ளத்தனையும் போகாது. ஆனால் காவல் கட்டுக்கு என்று மட்டுமில்லாமல், நிலத்துக்கு உடையவர்கள் அவன் கேட்கும் போதெல்லாம் கொடுத்துக் கொண்டேயிருக்க வேண்டும். மறுக்கும்போது வம்பு வளரும். அவனுக்கென்ன... பெண்டா... பிள்ளையா?

இடுப்பில் உள்ளங்கை அகலத் தோல் பெல்டுடன், மடி வைத்து வேட்டி கட்டி, முறுக்கிய மீசையோடு, கையிலே நெற்றி மட்டத்துக்குக் கத்தி கம்புடன் முத்தையா வருவதைக் காணும் போதே... பலர் இருந்த இடத்தைவிட்டு நழுவுவார்கள். எதிரில் எதிர்த்து எதுவும் பேசிவிட முடியாது.



முரடன் ! — அதை அப்போதைக்கப்போதே காட்டி விடுவான்.

முத்தையாவின் பேரில் ஊருக்குள்ளே இருந்த புகைச்சல், இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஒன்று திரண்டது. கூடித்தான் திட்டம் வகுத்தார்கள்.

வடக்கே எங்கிருந்தோ — இந்தக் கிராமத்துக்குப் பிழைக்க வந்தவன் செங்காளி. யாருக்கும் அஞ்சாதவனைப் போலத்தான் ஆரம்பத்தில் பேசினான். அவனை, முத்தையாவுக்கு எதிராகக் காவல் கட்டுக்குப் போட்டார்கள்.

முத்தையாவும், ஒரு வாரம் வரையிலும் வாயைத் திறக்காமலே ஊருக்குள் நடமாடித் திரிந்தான். அப்புறம், அந்தச் செங்காளியின் தலையே அந்தப் பக்கம் தெரியவில்லை.

செங்காளியைக் கொன்று, எங்கோ புதைத்துவிட்டதாகக் கிராமத்துப் பொதுவிலே வழக்குத் தொடுத்தார்கள்.

விசாரணையில் அந்தச் செங்காளியைப் பற்றிய விவரம் தெரிய வந்தது.

அவன் ஏற்கனவே கேடியாம். அவன் மீதே இரண்டு வழக்குகள் இருந்தனவாம். அவனுக்கு யார் யாரோ எதிரிகள். ஊரே கூடி நின்று என்ன செய்ய ? முத்தையாவை விடுதலை செய்துவிட்டார்கள்.

தலை நிமிர்ந்து, தன்னந் தனியாகவே ஊருக்குள் நுழைந்து, காட்டுக் காவல் பொறுப்பை அவனாகவே எடுத்துக் கொண்டான். இரகசியமாகத் தனித்தனியாக அவனோடு இணைந்து போனதைத் தவிர யாரால் அவனைத் தடுக்க முடிந்தது?

இன்றைக்குப் பாப்பாத்தி....ஊதி ஊதி இந்த நெருப்பை மூட்டி விட்டிருக்கிறாள். பெண்ணென்றாலும், அன்றாடம் கூலி வேலை செய்து வயிற்றை நனைத்தாலும், சிறு வயதிலிருந்தே இந்தத் துடுக்குத்தனம் அவள் கூடவேதான் இருக்கிறது. ஆண்களை அண்ட விடமாட்டாள். பொதுவாகவே கிராமத்து இள வட்டங்கள் அவளிடம் வாயைக் கொடுக்கவே அஞ்சுவார்கள்.

நடுக் காட்டில்... பாப்பாத்தியை வழி மறித்துப் பேசி, கையைப் பிடித்தானாம் முத்தையா.

பெண் புலியாகத்தான் சீறுகிறாள் !

இரவெல்லாம் பாப்பாத்தி கண்ணுறங்கவேயில்லை. என்னென்னவோ கனவுகள் அவளை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தன.

படுத்திருந்தவள், பொறுமை இழந்தவளாக, எழுந்து கதவை ஒருக்களித்து வைத்து விட்டு வாசலில் ஒட்டுத் திண்ணையின் ஓரமாக முழங்கால்களைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்து விட்டாள்.

உள்ளுக்குள்ளே பொருமல் உச்சியை எட்டும் போதெல்லாம் அவளுக்குக் கந்தசாமியின் நினைவும் கூடவேதான் வருகிறது.

எங்காவது ஊடு தட்டில் சந்தித்துக்கொண்டால், கந்தசாமியிடம்தான் சற்று நின்று பேசுவாள் பாப்பாத்தி. அவன் யார் வம்புக்கும் போக மாட்டான் என்பதில் அவளுக்கொரு நம்பிக்கை.

வீட்டுக்குள்ளிருந்து கிழவி அழைக்கும் குரல் கேட்டது.

''என்ன பாட்டி ?'' என்று கேட்டாள் பாப்பாத்தி அலுப்போடு.

''இப்ப எதுக்கு.... இந்த நேரத்திலே அங்கே போய் உட்கார்ந்திருக்கிறவ'' என்று பாட்டி அதட்டினாள். இந்தக் கிழவி ஒருத்தி தான் இருக்கிறாள், உறவு என்று தட்டிச் சொல்வதற்கு. ஆனால் இந்தப் பேத்தி.... எப்பொழுதுமே பாட்டியின் கைக்குள் அடங்குவதேயில்லை. கிழவி புலம்பித் தவிப்பாள். அவ்வளவுதான் !

''மறுபடியும் தொடங்கிட்டியா ராத்திரி முச்சூடும் சொல்லி அழுதாச்சு...'' என்றாள் பாப்பாத்தி எரிச்சலுடன்.

''ஊரு வம்பிலே தலையைக் கொடுத்துப் போட்டு நிக்கிறியே. உனக்கும் எனக்கும் காணியும் பூமியுமா இருக்கு. களையெடுத்தாக் கஞ்சி. நீ எதுக்குடி முன்னாலே போறே?'' என்று கிழவி மேலும் சொல்லி வந்தது தெளிவாகவே கேட்டது.

''இல்லாதவங்கன்னா சூடு சொரணை இல்லாமப் போகுமா? வழிமறிச்சுக் கையைப் பிடிச்சு இழுத்தாலும் வாயை மூடிக்கிட்டு இருக்கச் சொல்றியா? வர்றது வரட்டும். நீ வேணும்ன்னாலும் பாரு.... அந்த மீசைக்காரனுக்குப் போங்காலம்தான்.... இப்ப வந்திருக்கு'' என்று திண்ணையிலிருந்தபடியே ஆங்காரத்தோடு சொன்னாள் பாப்பாத்தி.

''நாளைக்கு.... காடு கரைக்குத்தான் போக முடியுமா? உன்னைக் கொத்தத்தான் போறான் அந்த முத்தையா!'' என்றாள் கிழவி கவலையுடன்.

''கொத்தட்டும்... நீ பேசாமத்தானே இரு'' என்று அதட்டினாள் பாப்பாத்தி. அது என்னமோ... இவளுக்கு இப்படியொரு வேகம் வந்து கூடியிருக்கிறது.

அதற்கு மேல் கிழவி, உள்ளிருந்து சொல்லிக் கொண்டது, வெளியிலே சரியாகக் கேட்கவில்லை.

பாப்பாத்தி திண்ணையிலே உட்கார்ந்திருந்தாள்.

இன்றைக்கு நேற்று.... நெடுகலும்தான் இவன் இப்படி நையாண்டி செய்துக்கிட்டிருக்கிறான். இதுக்கும் ஒரு முடிவு தெரிய வேண்டாமா ? அவனுக்கு மட்டும் கொம்பா முளைச்சிருக்கு?

முத்தையாவைப் பற்றி நினைக்க நினைக்க அவளுக்குக் கொதிப்புத்தான் மிகுதியாகி வந்தது. இந்தக் கொந்தளிப்பு விளிம்பைத் தட்டும்போது, பொங்கி வரும் பாலில் தண்ணீரைத் தெளித்தது போல், கந்தசாமியின் நினைவும் வந்தது.

விடியற்காலைப் பொழுதின் குளிர்ந்த தென்றல் தழுவிச் செல்லும் போது, குலுங்கும் தோள்களை இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டேயிருக்கலாமே. அந்தக் காவல் கட்டு முத்திரையோடு வந்து நின்றால், எட்டுக் கண் விட்டெறியாதா ?

கந்தசாமியைப் பார்த்து உள் இருப்பதையெல்லாம் கொட்டித் தீர்த்துவிட வேண்டும் என்ற துடிப்பில், கண்ணயர முடியவில்லையே.

அவரும் இப்படித்தான் கண்ணுறக்கம் இல்லாமல் துடித்துக் கொண்டிருப்பாரோ !

பாப்பாத்தி — குனிந்து 'களுக்'கென்று சிரித்து விட்டாள்.



புதுமை குன்றா
பொலிவுடன்
இருங்கள்
CINTHOL
LUXURY
TOILET POWDER
BY
சிந்தால் டாய்லெட் பவுடர் சங்கட
மான உடல் துர்நாற்றத்திலிருந்து
உங்களைப் பாதுகாத்து, அதி-
வெப்பமான தினத்திலும், நாள்
முழுவதும் உங்களைப் புத்துணர்ச்-
சியுடன் வைத்திருக்கிறது.
அதன் அருமையான நறுமணம்
உங்களை விட்டு அகலுவதில்லை.
கோத்ரெஜ் அளிக்கும்
சிந்தால்
Interpub/GSP/12/74 Tam

''என்னம்மா பொண்ணு....நீயாத்தானே சிரிச்சுக்கிறே !'' என்று கேட்டுக் கொண்டே, மங்கிய ஒளியில் முற்றத்தில் வந்து நின்றாள் தாயம்மா. அவளும் — இவளும் ஒத்த வயசு... உற்ற தோழிகள். அதிலும், கந்தசாமியின் வீட்டுக்குப் பக்கத்து வீட்டுக்காரி. தெரிந்து வந்தது போல் இந்த நேரம் வந்து நின்றால் எப்படி இருக்கும் ?

'' வாடியம்மா, வா... உன்னைத்தான் நினைச்சேன். வந்து நிக்கிறியே!'' என்று பூரிப்புடன் சொல்லிக் கொண்டே, பரபரப்புடன் எழுந்து, அவளது தோள்களைப் பற்றிக் கொண்டாள் பாப்பாத்தி.

''ராத்திரி முச்சூடும்.... எனக்குத் தூக்கம் எங்கே வந்திச்சு? அதைத்தான் உடனடியா உங்கிட்டச் சொல்லணும்னு ஓடியாந்தேன்'' என்று சொல்லி நின்றாள்.

பாப்பாத்தியின் மெய் சிலிர்த்தது.

''சொல்லு, என்ன சொன்னாரு?'' என்று ஆவலுடன் கேட்டவள், அவளது கழுத்தைக் கட்டிக் கொண்டு, அப்படியே இழுத்துத் திண்ணையிலேயே நெருக்கமாக உட்கார வைத்துக் கொண்டாள்.

தாயம்மாளுக்கு அவளைப் பார்க்கும்போது சிரிப்புத்தான் வந்தது.

''நீயும் எவ்வளவோ தான் நினைச்சிருக்கே.''

''இதைச் சொல்லத்தான் இந்த நேரத்திலே வந்தியாக்கும். இதை நினைக்கத்தான் நீயும் தூங்காம இருந்தியாக்கும்'' என்று கேட்டாள் பாப்பாத்தி.

''பக்கத்து வீட்டிலே... தகப்பனுக்கும் மகனுக்கும் போராட்டமாத்தான் இருந்திச்சு. கடைசியிலே... மண் குதிரையை நம்பி ஆத்திலே இறங்கின கதையாகிப் போச்சு.....'' என்றாள் தாயம்மா.

''மண் குதிரையா.... யாரு?''

''நீ... பொறுக்கி எடுத்தியே... அவன் தான். காவல் கட்டுக்குப் பயந்து, வடக்கே வண்டியேறிட்டான். இப்ப உன்னை நினைக்கிறப்பத்தான் பாவமா யிருக்கு'' என்று சொல்லிப் பாப்பாத்தியின் முகத்தைத் தொட்டுத் திருப்பினாள் தாயம்மா.

''யாரு சொன்னது? கேலிக்குச் சொல்றியாக்கும்'' என்று அவசரத்துடன் குறுக்கிட்டாள் பாப்பாத்தி.

''விளக்கு வைக்க ஆரம்பிச்ச கிழவன், ஊர் வம்புக்குள்ளே தலையைக் கொடுத்திட்டியே, அந்தக் காலிப் பய உன்னை உயிரோட நடமாடத்தான் விடுவானுன்னு தொடங்கினவன், விடிய விடியப் பேசி, விதைப்பு நின்னு போனாலும் பரவாயில்லே; அடுத்து ஆறு மாசத்துக்கு இந்தப் பக்கமே தலையைக் காட்டாதேன்னு சொல்லி, எங்கேயோ திண்டிவனத்துக்குப் பக்கத்திலே கிழவனோட தங்கச்சி வீடு இருக்காமில்லே, அங்கே அனுப்பி வைக்கப் போட்டான்.....'' என்ற தாயம்மா பாப்பாத்தியின் முகத்தைப் பார்த்து நிறுத்தினாள்.

பாப்பாத்திக்குக் கண்கள் இருண்டு மயக்கம் வருவதுபோல் இருந்தது.

''அவரு எதுவுமே சொல்லலையா?'' என்று கேட்ட குரல் இறங்கிப் போயிற்று.

''பெத்தவன் பிடிவாதமா நிக்கிறப்ப என்ன செய்யறது? சொத்து பத்து அத்தனை

அற்புதக் கதைகளும் அருமையான கதைகளும் !

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் பரிசுபெற்ற அற்புதமான கதைகள் தவிர பின் வரும் அருமையான கதைகள் பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவை வாரம் ஒன்றாக அடுத்து வரும் கல்கி இதழ்களில் இடம் பெறும். ஒவ்வொன்றும் ஒவ்வொரு புதுமையான நோக்கில் அமைந்து தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்குத் துணை புரிந்து நம்மைப் பரவசத்தில் ஆழ்த்துகிறது.

1. சிவப்புச் சட்டை
   டி. முத்துசாமி ''தூன்''
2. நீதான் கதாநாயகி
   மு. கணேசன் ''முருகு முன்னவன்''
3. ஆணி வேர்
   கஸ்தூரி பங்கு
4. உணர்வின் மறு பக்கம்
   எஸ். வி. பார்த்தசாரதி (சாரதி)
5. ஏறிய விஷம்......
   ப. ராமமூர்த்தி
6. தாயுள்ளம்
   ஸ்ரீமதி ஞானம்பாள் ரத்னம் (ஆர்ஜி)
7. பிராயச்சித்தம்
   அன்பு மணி
8. உருவாக்கினார்
   பிரேம் ஆனந்த்
9. அவன் செய்த சிபாரிசு
   பி. ரங்கசாமி (விஜயசாரதி)
10. இன்னும் ஒரு ஜென்மம் !
    பி. ராமமூர்த்தி
11. எங்கப்பா ஓர் எக்ஸென்டிரிக் !
    ஜி. ஜெயராமன் (ஞானமோகனன்)
12. யானை சிறு வெண்மையான பறவை
    பொன்னித்துறைவன்
13. ஒரு மலர் பூக்கிறது !
    விமலா ரமணி
14. உன் தோட்டத்துக் குயில்
    ஏ. கே. பட்டுசாமி
15. பிறவிப்பயன்
    க. எஸ். ஹரிஹரன் (ரேவதி)
16. மயிலாத்தா
    இடைப்பாடி. கமலக்கண்ணன்
17. ஒரு நாள் கழிகிறது !
    தாடா சுப்பிரமணியம்
18. செல்வி கான்வென்டுக்குப் போகிறாள் !
    விகடப்பிரியா
19. கிடைக்காத பாக்கியம்
    எஸ். வி. கிருஷ்ணமூர்த்தி
20. அபலைக்கு வாழ்வு
    திருபாகரன்
21. தேய்ந்த பாதை
    லலிதா
22. விஞ்ஞானியின் காதல் !
    'அங்கன்'

யும் கிழவன் கைக்குள்ளே இருக்கு. ஊர் கூட்டம் நடத்தப்ப கிழவன் வெளியூருக்குப் போயிருந்தான். இருந்திருந்தா அப்பவே கந்தசாமியை வாய் திறக்கவிட்டிருக்கமாட்டான்'' என்று தாயம்மா மேலும் சொன்னாள்.

''ஊரறிய, நாடறிய வீரமாப் பேசி, காவலே ஏத்துக்கிட்டதெல்லாம் எங்க போறதாம்?'' என்று பொருமலுடன் கேட்டாள் பாப்பாத்தி.

''நான் அப்பவே சொல்லலையா? நீதான் வெறியேறிப் போய் நின்னே. ஊரையே கூட்டிப் பஞ்சாயத்து வச்சிட்டே. வரப் போறதை நினைக்கிறப்ப எனக்குப் பயமாத்தான் இருக்கு. அந்த முத்தையா தழும் பேறிப் போனவன். எதுக்கும் துணிஞ்சவன்.''

பாப்பாத்தி ஒளி படர்ந்து வரும் தெருவையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''இதையும் கேட்டுக்கோடியம்மா. எனக்காக முன்னாலே வந்தவன், மஞ்சள் பூசிக்கிட்டு ஊரைவிட்டே ஓடிட்டாலும், எனக்கு வேறே நாதியே இல்லாமப் போனாலும், நானும் துணிஞ்சுதான் குடியிருக்கப் போறேன். நெருங்கி வரட்டும். என்னாலேதான் அவன் கதையும் முடியப் போகுது'' என்று உறுதியான குரலில் சொன்னாள் பாப்பாத்தி.

அப்போது, கிழவியும் தட்டுத் தடுமாறி வாசலுக்கு வந்து விட்டாள்.

குத்துக் குத்தாக, இடுப்பு உயரத்துக்கு மிளகாய்ச் செடிகள். பச்சைக் கம்பளத்தில் பவளங்களைப் பதித்தது போல் கொத்துக் கொத்தாக-மிளகாய்ப் பழங்கள்.

பாப்பாத்தியும் — தாயம்மாளும் மடிகட்டி மிளகாய்ப் பறித்துக் கொண்டிருந்தார்கள். கஞ்சிப் பொழுதுக்குத்தான் வேலையே திரும்.

பாப்பாத்திக்கு வேலையே ஓடவில்லை. தாயம்மாள்தான் வம்படியாக இந்த மந்தைத் தோட்டத்துக்கு இழுத்து வந்து விட்டாள். நாள் கூலியோடு, ஒரு மடிக்கு மிளகாய்ப்பழமும் கிடைக்கும் போது, யாருக்காகவும், எதற்காகவும் பயந்து, வீட்டுக்குள் உட்கார்ந்திருக்க முடியுமா? வயிறு என்று ஒன்று இருக்கிறதே !

ஊருக்குள் வேறு யாரையும் பார்க்கவோ, பேசவோ எரிச்சலாகவும், வெட்கமாகவும் உள்ளபோது, உற்ற தோழி தாயம்மாளை விட்டுப் பிரியவும் முடியவில்லை.

எப்படியெல்லாமோ நினைத்திருக்க, இப்படியொரு வெட்கக்கேட்டையல்லவா உருவாக்கிவிட்டுப் போய்விட்டான் கந்தசாமி. இவன் எட்டிப் பிடித்த கொப்பு — இப்படி, முருங்கையாகவா முறிந்து விழவேண்டும்?

நினைக்க நினைக்கப் பாப்பாத்தியின் உடம்பே சூடேறியது. சோர்வு தட்டியது. மடியில் சேர்த்திருந்த பழங்களைக் கூடையில் கொட்டிவிட்டு, வரப்போரம் மேட்டின் மீது முழங்கால்களைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்து விட்டாள்.

சற்றைக்கெல்லாம், ''ஒரு நிறை நீரலே... அதுக்குள்ளே என்னம்மா வந்திருச்சு உனக்கு?'' என்று கேட்டுக் கொண்டே அவளைத் தேடி வந்து விட்டாள் தாயம்மாள்.

''எனக்கு வேலையே ஓடலே'' என்ற பாப்பாத்தி நெற்றியில் அரும்பியிருந்த வேர்வையை முந்தானையால் துடைத்து விட்டுக் கொண்டாள்.

''உன்னோட சேர்ந்து எனக்குந்தான் ஓடலே. முத்தையாவை நினைக்கிறப்ப நெஞ்சு படபடக்குது'' என்று கள்ளமில்லாமல் சொன்னாள் தாயம்மா.

பாப்பாத்திக்கு முகம் வெந்துவிட்டது.

''நீயும் நானும் கோழிக் குஞ்சா.... கொத்தித் தூக்கிக்கிட்டுப் போறதுக்கு..... இல்லே எங்கேதான் ஓடி ஒளிய முடியும் ? நான் எதுக்கும் தயாராத்தான் இருக்கேன்!'' என்ற பாப்பாத்தி, இடுப்பிலே செருகியிருந்த சூரிக் கத்தியைத் தொட்டுப் பார்த்துக் கொண்டாள்.

இது இருப்பது தாயம்மாளுக்கே தெரியாது.

''அது என்னமோம்மா.... இத்தோடயாவது வாயை அடக்கிக்கிட்டிரு. ஆணைப் பட்டவனே ஒரு பொழுதுக்குள்ளே கண் காணாமப் போயிட்டான். நாம எந்த மூலைக்கு'' என்ற தாயம்மாள், நின்றவாறே சுற்றிலும் பார்த்தாள். பாப்பாத்தி ஏதோ சொன்னது அவள் காதுகளில் விழவில்லை. கிணற்றுப் பக்கம் பார்த்திருந்த அவள் முகம் வெளுத்திருந்தது.

''ஐயையோ...! பாப்பாத்தி.... அவன் தானே வந்துகிட்டிருக்கான்'' என்றாள் குழறிய குரலில்.

''யாரு.... வண்டியேறிப் போனவரா ?'' என்று கேட்டுக் கொண்டே பாப்பாத்தியும் எழுந்தாள்.

''நீ நாசமாய்ப் போக... காவல்காரன் முத்தையா கிணத்து மேட்டிலே யிருந்து இறங்கி வாரான், பாரு !'' என்றாள், தாயம்மா படபடப்புடன்.

பாப்பாத்தியும் திரும்பிப் பார்த்தாள்.

அவனே வந்து கொண்டிருந்தான்.

''அப்படியே செடிக்குள்ளே குந்திக்கோ. தலையைக் காட்டாதே!'' என்று கிசுகிசுத்து விட்டு, மிளகாய்ச் செடிகளுக்குள் பதுங்கிக் கொண்டாள் தாயம்மா.

''எதுக்கு ஒளியணும்? குறி வச்சுத்தானே வாரான்..... வரட்டும். போனாலும் என் உயிரு தனியாப் போகாது'' என்ற பாப்பாத்தி, அவன் வரும் திசை நோக்கியே திரும்பி நின்றாள்.

அவளுக்கு நேராக வரப்பிலிருந்து இறங்கி, செடிகளுக்கிடையே நடந்து வந்தான் முத்தையா.

அவனைப் பார்க்கும்போதே நெஞ்சில் பயம் தோன்றத்தான் செய்தது. காட்டு வழியே, இரவும் பகலும் ஒத்தையாகத் திரிந்து காவல் இருப்பவன், வேறு எப்படி இருப்பான்?

அவன் அருகில் நெருங்கி வந்தபோது பாப்பாத்தி குனிந்து பார்த்தாள். பக்கத்திலே பதுங்கியிருந்த தாயம்மாளைக் காணவில்லை. தலையைத் தூக்காமலே ஓடிவிட்டாள்.

பதற்றத்தை யெல்லாம் உள்ளடக்கிக் கொண்டு, அவனைத் திரும்பிப் பார்க்காமலே நின்றாள்.

செருமிக் கொண்டே அவளுக்கு முன்பாக வந்து, நீண்ட கைத்தடியைத் தரையில் ஊன்றி, இரு கைகளாலும் பிடித்துக்கொண்டு

முன்னால் கவிழ்ந்து, அவளை ஏறிட்டுப் பார்த்தான் முத்தையா.

அவள் திரும்பவில்லை.

''இந்த ஊருக்குள்ளே நீதான் எனக்குப் பொருத்தமானவன்னு நான் நினைச்சது சரியாய்ப் போச்சு'' என்றான் முத்தையா, கொக்கரிப்போடு.

பாப்பாத்தி திரும்பினாள். அவள் விழிகள் கோவைப் பழங்களெனச் சிவந்திருந்தன.

'' உயிரு ஒரு தடவைதான் போகும். போனாப்போகுது''என்றாள் ஆங்காரத்துடன்.

அவன் சிரித்தான்.

''எனக்கு முன்னாலே பயம் தெரியாமல் கோபப்படுறே பாரு. இதுதான் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. பார்த்துக்கிட்டே இருக்கணும் போலத் தோணுது '' என்றான்.

''இந்தக் கத்திக் கம்புக்கும், சிரிப்புக்கும் நான் ஒண்ணும் பயந்துக்க மாட்டேன். இதையும் திண்ணமா நினைச்சுக்கோ '' என்றாள் அவள் குமுறலோடு.

''இந்த ஊருக்குள்ளே.... யாருக்குமே இல்லாத தைரியம், பொண்ணாகப் பிறந்தாலும் உனக்குத்தான் இருக்கு. அதனாலேதான் நீ ஊரையே கூட்டி வழக்குச் சொல்லிட்டாலும் உன்னைத் தேடி வந்திருக்கேன்'' என்று சொல்லி, சற்று முன்னால் நகர்ந்து வந்தான் முத்தையா.

''நீ வழி மறிச்சாலும்.... நானும் உயிருக்குத் துணிஞ்சுதான் வந்திருக்கேன்'' என்று தலை நிமிர்ந்தே சொல்லி நின்றாள் அவள்.

''இது எனக்கு நல்லாத் தெரியும். இந்தத் துணிச்சலை நினைச்சுத்தான் உம் மேலே எனக்கொரு பிடிப்பு ஏற்பட்டுடுச்சு. இதை வைச்சுத்தான் இப்ப நான் ஒரு முடிவுக்கு வந்திருக்கேன்'' என்றான் அவன்.

இந்த அளவுக்கு முத்தையா சாதுவாகப் பேசுவது வியப்பாகவே இருந்தது அவளுக்கு. படபடப்பு சற்று அடங்கியது.

'' என்ன முடிவுக்கு ?'' என்று கேட்டாள் அவன் முகம் பார்த்து.

''போராட்டம்ன்னு வர்றப்ப... இந்தக் காவல் கட்டை எங்கிட்டேயிருந்து யாராலேயும் வாங்கிக்க முடியாது. உன்னாலே மட்டும் தான் முடியும். இந்த வகையிலே நீ ஜெயிச்சிட்டே'' என்றான் அவன்.

இமைகள் படபடக்க அவனை ஏறிட்டுப் பார்த்தாள் பாப்பாத்தி.

அவன் அமைதியாகவே மேலும் சொன்னான். ''பாசம்ங்கிறது என்னன்னு எனக்கும் புரியுது. நீ.... என்னை நினைக்கலேன்னாலும் உனக்குத் தீங்கு செய்யறதுக்கு எனக்கு மனசுஒப்பலே. நீ எப்பவும் கண் கலங்காம இருக்கணும், அதுக்கு என்னாலே முடிஞ்சதைச் செய்யணும்ன்னுதான் தோணுது. நீ... கந்தசாமியைத்தான் கட்டிக்கப் போறேன்னும் தெரிஞ்சுக்கிட்டேன். நீ ஏழை வீட்டுப் பொண்ணு, உங்கிட்டே சீதனமா கொடுக்க என்ன இருக்கு? இந்தக் காட்டுக் காவலை விட்டு உனக்காகவே நான் விலகிக்கிறேன். இதையே உன் கையாலே அவனுக்குச் சீதனமாக் கொடுத்துப் போடு'' என்றான் அவன்.

பாப்பாத்தி அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

பாறையாக இறுகிப் போயிருந்த நெஞ்சில் இப்படியொரு கனிவும் இருக்குமா ?

''சொல்றதெல்லாம் நிசந்தானு......?'' என்று மெய்சிலிர்க்கக் கேட்டாள் அவள்.

அவன் சற்று நேரம் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

'' ராத்திரியெல்லாம் யோசிச்சுத்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கேன். உன்னை நினைச்சு.... உனக்காகத்தான்.... இந்தப் போட்டியிலேயிருந்து விலகிக்கிறேன். ஊருக்குள்ளே எப்படி வேணும்ன்னாலும் பேசிக்கட்டும். ஆனா.... உண்மை என்னன்னு உனக்கு மட்டும் தெரிஞ்சாப் போதும்'' என்ற முத்தையா, கையிலிருந்த தடியை அவளுக்கு முன்பாகப் போட்டு, ''இதான் நம்ம கிராமத்துக் காவல் கட்டுக்கு முத்திரைத் தடி. இதை உன்னாலேதான் எங்கிட்டேயிருந்து எடுத்துக்க முடியும். எடுத்துக்கோ'' என்று சொல்லிவிட்டுத் திரும்பி நடந்தான்.

பாப்பாத்தி சிலையாக நின்று கொண்டிருந்தாள்.

அவன் திரும்பிப் பார்க்கவில்லை.

அவனையே இமையாது பார்த்துக் கொண்டிருந்தவள், குனிந்து, முன்னால் கிடந்த கத்திக் கம்பைக் கையில் எடுத்துக் கொண்டு, ''நில்லுங்க'' என்று குரல் கொடுத்தவாறு அவனை நோக்கிச் சென்றாள் !



பொன்னியின்

உ. மற்ற புனைபெயர்கள்

பன்மையில் ஒருமை : ஒருமையில் பன்மை

ரா. கிருஷ்ணமூர்த்தி முதல் முதலாகப் பூண்ட புனைபெயர் 'அகஸ்தியர்'. அது அவராகப் புனைந்து கொண்டது அல்ல. அவருடைய ஆரம்ப குரு அய்யாசாமி அய்யர் அவருடைய சிறிய உருவத்தைக் குறிக்கும் வகையிலும் பெரிய அறிவுத் திறனைப் பாராட்டும் விதத்திலும் செல்லமாக இட்ட பெயர் அது. அந்தச் செல்லப் பெயரையே அவர் தமது குரு பக்திக்கு எடுத்துக்காட்டாகப் புனைபெயராய்க் கொண்டு, நவசக்தியில் '' காலச் சக்கரம் '', ''காலப் போக்கு'' என்ற பத்திகளில், அரசியல் உடன் கால நிகழ்ச்சிகள் பற்றிக் குறிப்புக்கள் எழுதினார்.


இவ்விதக் குறிப்புக்களைத் தவிர இலக்கிய ஆசையுடனும் சீர்திருத்த நோக்கத்துடனும் சிறுகதைகள் சிலவற்றையும் ''அகஸ்தியர்'' எழுதி நவசக்தியில் வெளியிட்டார். அந்தக் கதைகள் ''சாரதையின் தந்திரம் முதலிய கதைகள்'' என்ற பெயருடன், 1927ல் புத்தக வடிவில் வெளியாயின.

நவசக்தியில் அவர் மேற்கொண்ட இன்னொரு பெயர் ''தமிழ்த் தேனீ''. அந்தத் தேனீ திரட்டிய செய்தித் துளிகளும் நகைச்சுவைத் துளிகளும் ''ஊர் வம்பு'' என்ற பத்தியில் உருண்டோடின. தாமே இந்தத் தமிழ்த் தேனீ என்பதைச் சில ஆண்டுகளுக்குப் பிறகு, ''பொறுமைப்படு'' என்ற தலைப்புடன் ஆனந்த விகடனில் எழுதிய கட்டுரை ஒன்றில், இவ்வாறு அவர் நகைச்சுவையுடன்புலப்படுத்தினார்:

> மற்றொரு சமயம் நான் ரயிலில் ஏறினேன். வண்டியில் இருந்தவர்களில் ஒருவர் எனக்குக் கொஞ்சம் இடம் ஒதுக்கிக் கொடுத்தார். அவரை எனக்கு முன்பின் தெரியாது. அடுத்த ஸ்டேஷனில் நான் இறங்கியபோது அந்த மனிதர் பக்கத்தில் இருந்தவரைப் பார்த்து, ''அவர் யார் தெரியுமா? அவர் தான் தமிழ்த் தேனீ'' என்று கூறியது என் காதில் விழுந்தது. (''தமிழ்த் தேனீ'' என்ற புனை பெயருடன் நான் சில காலம் எழுதியதுண்டு என்னும் குற்றத்தை ஒப்புக் கொண்டு விடுகிறேன்.) இராஜ நடை என்று நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? என் வாணாளில் நான் எப்போதேனும் போலி இராஜ நடை நடந்ததுண்டானால் அந்தச் சமயத்தில் தானிருக்க வேண்டும். அன்று முழுவதும் அந்த மனிதர் யாராயிருக்கலாமென்றும், அவருக்கு எப்படி என்னைத் தெரியுமென்றும் சிந்தித்துக் கொண்டிருந்தேன்.
>
> (ஏட்டிக்குப் போட்டி— கட்டுரைத் தொகுப்பு)



ஆனந்த விகடனுக்கு வெளியேயிருந்து அதற்கு எழுதுகையில் ''கல்கி'' யாக உலவியவர், அதற்கு உள்ளேறியமனம் பெற்றதும், ''ரா.கி.'' என்பதையும் சேர்த்துக் கொண்டார். ''விமோசனம்'' பத்திரிகையிலிருந்து அவருடன் தாவி வந்தபெயர் அது. ''ரா.கி.'' என்பது அவருடையமுழுப் பெயரின் சுருக்கமேயாயினும் ''ராக்கி', என்று சேர்த்துச் சொல்லுகையில், அது ஒரு புனை பெயராக ஒலிக்கிறது. ரா.கி.யை ''ராவன்னுக் கின்னு'' என்று



புதல்வர்

சுந்தா



அவருடைய நெருங்கிய நண்பர்கள் — சொல்லி, நேரிலேயே அவரை அப்படி அந்தக் காலத்தில் கூப்பிட்டார்கள். அவரும் சில நண்பர்களுக்கு எழுதிய கடிதங்களில் ''ராவன்னுக் கினு'' என்று ஒப்பம் இட்டார்.

கரடு முரடான கதர்த் துணியைக் கட்டும் ஒருவர் தம்மைக் கல்கி என்றும், ராக்கி (Rocky) என்றும் சொல்லிக் கொள்வது பொருத்தந்தானே என்று ஒரு கட்டுரையாளர் குறிப்பிட் டிருந் தார்.

ரா. கி. என்ற பெயரில் கட்டுரை களும் கதைகளும் கலந்து வந்தன; அவை அநேகமாய்ப் பிரசாரப் போக் குடையவை. ரா.கி.யே கல்கி என்பதை விரைவிலேயே சாதாரண வாசகர்கள் கண்டு கொண்டார்கள். அவருடைய தனி நடை அ வ ரை க் காட்டிக் கொடுத்தது.

இதே தனி நடை காரணமாய், ''ஆடல் பாடல்'' என்ற தலைப்பின் கீழ் எழுதத் தொடங்கிய ''கர்நாடகம்'' என்ற விமரிசகரும் அவரேதான் என்ப தும் தெரிந்து போயிற்று.

இந்தப் புனைபெயரை, முதன் முத லாகக் கல்கி, காளிதாஸ் என்ற திரைப் படத்தை விமரிசனம் செய்கையில் வைத் துக் கொண்டார். அது பற்றி அவரே சொல்கிறார் :

முதன் முதலாக வெளியான ''காளிதாஸ்'' என்னும் தமிழ் டாக்கியில் கதாநாயகியாக நடித்தவர் இவர்தான். (டி. பி. ராஜலக்ஷ்மி). மேற்படி டாக்கியைப் பார்த்தபோதுதான் அதைப் பற்றி எழுதியே தீரவேண்டும் என்ற ஆவல் அடக்க முடியாமல் எனக்கு ஏற்பட்டு, ''தமிழ்ப் பாட்டி'' என்ற தலைப்புடன் விகட னில் ஒரு கட்டுரை எழுதினேன். எனவே ''ஆடல் பாடல்'' பகுதிக்கும், ''கர்நாடகம்'' என்னும் பெயருக்கும் காரணகர்த்தா இந்த அம்மாளே என்று சொல்ல வேண்டும்.

இந்த மூன்று புனைபெயர்களையும் அவற்றின் புகழுக்கும் செல்வாக்குக் கும் ஏற்ப, கல்கி, கர்நாடகம், ரா.கி. என்பதாகப் பேராசிரியர் அ. சீநிவாச ராகவன் வரிசைப்படுத்தி, ''இருபத் தைந்து ஆண்டுகளுக்கு இம்மூன்று பெயர்களும் இலக்கியத் திரிவேணி யாகத் திகழ்ந்தன'' என்கிறார். மேலும் தொடர்ந்து:

கல்கி என்ற பெயரின் கீழ் கதையும் கற் பனையும் வெள்ளமாகப் பெருகின. கர்நாடகம் என்ற பெயர் தமிழ் நாட்டுக் கலைகளின் அருமைப்பாட்டுக்கு உயிர் தந்த விமர்சன நதியின் பெயராய் அமைந்தது. ரா. கி. என்ற பெயரோ, வாழ்க்கையின் எல்லாத்

★ ''மகா-ள-ள-ஸ்ரீ சாகுநாத் பொது ஜனம் நான்தான்!''

★ தசாவதாரம் எடுத்த ஒரே கல்கி - இளமைத் தோற்றம்.

★ ''மியாவ், மியாவ்'' சர்க்கில்!





துறைகளையும் வருடிப் பார்த்து, சிரிப்பின் வேகத்தால் குறைகளைத் தகர்த்த கட்டுரைப் பேராற்றின் தலைப்பாக நின்றது. இந்தத் திரிவேணி, வாராவாரம் தங்கு தடையின்றிப் பொங்கியது. தமிழனுடைய கற்பனையைத் தூண்டியது. நம்பிக்கையை வளர்த்தது. அறிவைப் பெருக்கியது. இந்த எழுத்து வெள்ளத்தின் முன், தமிழ் பேசும் இனம் தன் பழம் பெருமையை உணர்ந்து ஒன்றுபட்டது. புன்மை இருட்கணம் யாவும் கரைந்தன.

(திருச்சி வானொலி 11–10–'55)

ஆனந்தவிகடன் என்ற பெயருக்குப் பொருத்தமாய், உச்சிக் குடுமி விகடனை உருவாக்கி, உருவகப்படுத்தி, விகடன் பேசுகிற மாதிரியே பல தலையங்கங்களைக் கல்கி எழுதியதால், விகடனையும் அவருடைய புனைபெயர்களில் ஒன்றாய்க் கருதலாம். விகடனுக்கு ஏற்றதொரு வானர நிருபரையும் அவர் படைத்தார். தாமே அந்த நிருபராய் இருந்து அரசியல் உலகில் அந்தரக் கற்பனைப் பிரயாணம் செய்து, நர நிருபர்களுக்கு எட்டாத செய்திகளையும் கிட்டாத பேட்டிகளையும் ''ஸ்கூப்'' அடித்து நகைச்சுவையுடன் திரித்துக் கொடுத்தார். (1933 இறுதியிலிருந்து சுமார் மூன்றாண்டு காலம் ஆர். பார்த்தசாரதி – ''பரதன்'' – ஆனந்த விகடனில் உதவி ஆசிரியராய் இருந்தபோது, அவரிடம் கல்கி இந்த நிருபர் பதவியைத் தாற்காலிகமாக ஒப்படைத்தார். தம்மைப் போலவே அவர் ''அரசியல் நிருபர் சரடு''களை நயமாய்த் திரிப்பதைக் கண்டு மெச்சினார்.)

ஆனந்தவிகடன் தலையங்கங்கள் பலவற்றைக் கல்கி ஒரு குட்டி நாடகமாக அமைத்து எழுதினார். ஆசிரியரின் அறையைக் களமாகக் கொண்ட அந்த நாடகங்களில் பிரதான பாத்திரமான விகடன், வானர நிருபருடன் நாட்டு நடப்பு உலக நடப்பு பற்றி வேடிக்கையாய் உரையாடினார். அல்லது அந்த நிருபரை வாலைச் சுருட்டிக் கொண்டு பக்கத்திலோ மேஜை மீதோ உட்காரச் செய்து விட்டு, கலக நாரதரைப் பிரவேசிக்கச் செய்து அவர் அளக்கும் கதைகளைக் கலக்கி ஆராய்ந்தார். அல்லது ஸ்ரீமான் பொதுஜனம் அவர்களை எதிர் நாற்காலியில் அமர்த்திக் கொண்டு சிக்கலான அரசியல் பிரச்னைகளை அலசினார்.

விகடர், வானர நிருபர், நாரதர், பொதுஜனம் ஆகிய நால்வரையும், தமது மை வண்ணத்தால் கல்கி, உண்மையில் உள்ளவர்கள் போலத் தோன்றச் செய்தார். அந்தத் தோற்றத்தை ஓவியர்கள் மார்கனும் மாலியும் தமது கைவண்ணத்தால் வலுப்படுத்தினார்கள்.

விகடரும் ஸ்ரீமான் பொதுஜனமும் முதன் முதலாக நேருக்கு நேர் சந்தித்த காட்சியை இப்படி வர்ணிக்கிறார் கல்கி:

....வந்தவர் காலியாயிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு விகடன் முகத்தை



★ ''ஒரே ஒரு தேவரின் பெயரைத்தான் எல்லாரும் அலட்சியம் செய்திருக்கிறார்கள். எனக்காகவே ஒதுக்கி வைத்திருக்கிறார்கள் போலிருக்கிறது!''

★ விகடனுடன் விவாதிக்கக் கலக நாரதர் விஜயம்.

★ விகடரும் வானர நிருபரும். (விகடன் புகைப்படங்கள் : முத்துக்குமாரசாமி)



உற்றுப் பார்த்தார். ''விகடன் விகடன் என்கிறீர்களே, நீர்தானா?''

''ஆமாம், அடியேன்தான்.''

''முகத்தைப் பார்த்தாலே தெரிகிறது.''

விகடனுக்குத் தன் முகத்தைக் கண்ணாடியில் பார்க்க வேண்டும் என்ற ஆசை பலமாக ஏற்பட்டது.

''நான் யார் தெரிகிறதா?''

''ஊம்... ஊம்... பார்த்த ஞாபகமாயிருக்கு... நீங்கள்தானே....?''

''ஆமாம்...நீரும் மற்றப் பத்திரிகாசிரியர்களும் அடிக்கடி குறிப்பிடுகிறீர்களே, அந்த மகாராஜஸ்ரீ சாக்ஷாத் பொதுஜனம் நான் தான்.''

விகடன் தாவிச் சென்று அவருடைய கழுத்தைக் கட்டிக் கொண்டு, ''ஐயா! உம்மைப் பார்க்க வேண்டும் என்று தவித்துக் கொண்டிருந்தேன். அதற்குள் நீரே புறப்பட்டு வந்து விட்டீர்'' என்றார்.

''ஆமாம் விகடரே! ஆனால் அப்படி என்னைப் பேட்டி காண வேண்டுமென்ற ஆசை உமக்குத் தீவிரமாக ஏற்பட்டதன் காரணம் என்ன?''

''என்னவா? முதலாவது, 'பொதுஜனம்' 'பொதுஜனம்' என்று எல்லோரும் சொல்கிறோமே, எழுதுகிறோமே, அப்படி ஒருவர் உண்மையில் உண்டா என்று தெரிந்துகொள்ள விரும்பினேன். இரண்டாவது, உம்மை மட்டும் கண்டுபிடித்து ஸ்நேகம் செய்துகொண்டு விட்டால், அப்புறம் சர்க்காராவது வேறு அரசியல் கட்சியாவது, 'பொதுஜனம்' என்ற பேச்சை எடுக்கும்போது, எனக்குத் தெரியும், 'இதுதான் மகாராஜஸ்ரீ பொதுஜனத்தின் அபிப்பிராயம்' என்று ஒரு போடு—இல்லை மன்னிக்கவும் — ஒரு அடி அடிக்கலாம் அல்லவா?''

ஆனந்தவிகடன் 10—8—33

பொதுஜனத்தை நேரில் கண்ட அதே ஆண்டில், ஒரே ஒரு புனைபெயரை ஒரே ஒரு தரம் மட்டும் ஒரே ஒரு கட்டுரைக்காக வைத்துக் கொண்டார். அந்தப் புனைபெயர் — ''ஒரு பிராம்மண இளைஞன்''; கட்டுரையின் தலைப்பு — ''பிராம்மணர் வருங்காலம்''. பிராம்மணர்களுக்குத் துணிந்து எச்சரிக்கை விடுப்பதாய் அமைந்த அந்தக் கட்டுரையிலிருந்து மூன்று பாராக்களைப் பார்ப்போம்:

தமிழ் நாட்டின் பிராம்மண சமூகம் வருங்காலத்தில் நல்ல பெயருடன், மற்ற சமூகங்களின் சிநேகத்தைப் பெற்றுச் செல்வாக்குடன் வாழ்வதா, அல்லது அபகீர்த்தியையே ஆஸ்தியாகக் கொண்டு மற்ற சமூகங்களினால் தூஷிக்கப்பட்டுச் செல்வாக்கிழந்து திண்டாடுவதா? வைதிகப் பிராமணத் தலைவர்கள் என்போர் தற்சமயம் நடத்தி வரும் காரியங்களைக் கவனித்ததிலிருந்து இந்தக் கேள்வி என் மனத்தில் எழுந்தது. தீண்டாமை விலக்கு இயக்கத்தை எதிர்க்கும் வைதிகத் தலைவர்கள் தேசத்துக்கும் ஹிந்து சமூகத்துக்கும் தீங்கு புரிவதுடன், பிராம்மண சாதிக்கும் பெருந் தீங்கு இழைத்து வருகிறார்களென்று எனக்குத் தோன்றுகிறது....

வாழ்க்கைப் போராட்டம் மிகுந்திருக்கும் இக்காலத்தில் பிராம்மணன் கண்ணியமான எந்தத் தொழிலையும் செய்வதற்குச் சித்தமாயிருக்க வேண்டும். அப்போதுதான் அவன் ஜீவிக்கக் கூடும். ஆனால் இம்மாதிரி, நம் சொந்த நலத்துக்குரிய காரியத்தில் சாஸ்திர விதிகளை அடியோடு கைவிட்டிருக்கும் நாம், பழைய காலத்தில் மற்ற சாதியாரால் பிராமணருக்கு அளிக்கப்பட்ட மரியாதையை எதிர்பார்க்க முடியுமா? இந்தக் காலத்தில் பிராமணர்கள் பொதுஜன மரியாதை பெற வேண்டுமானால் அதற்கு வழி வேறு.

''எத்தொழிலைச் செய்தாலும், ஏதவத்தைப் பட்டாலும், முத்தர் மனமிருக்கும் மோனத்தே'' என்பது போல, பிராமணன் ஜீவனோபாயத்துக்காக எந்தத் தொழிலைச் செய்தாலும், சத்தியம், தயை, பக்தி, பரோபகாரம், நல்லொழுக்கம் முதலியவைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம்தான் மற்ற ஜனங்களிடம் மரியாதை பெற முடியும். அவ்வாறின்றி, சொந்த நன்மையைப் பொறுத்த வரையில் சாஸ்திர விதிகளை உதறித் தள்ளிவிட்டு, ''ஆனாலும் நான் பிராம்மணன், உயர்ந்த சாதி, எனக்கு மரியாதை செய்'' என்று கேட்பதனால் விளைவது என்ன? மற்ற ஜனங்களின் அவமதிப்பும் துவேஷமும்தான்.

(ஆனந்த விகடன் 15—1—33)

''ஒரு பிராம்மண இளைஞன்'' எழுதிய இந்தக் கட்டுரை எத்தனை பிராமண இளைஞர்களின் மனத்தை மாற்றியது,



பின்னி வழங்கும் டெரீன் கலந்த,
அணியத் தூண்டும் துணிவகைகள்
நீங்கள் விரும்பும் தோற்றம் தந்திட
துணை புரிகின்றன. குறிப்பாக, நினைவில்
நிற்கும் நிகழ்ச்சிகளில்.

நாங்கள் பெருமளவில் மாறிவிட்டோம்—
உங்களைப் போலவே!

பின்னி TERENE® இழைந்தது

®இது கா:பியின் பதிவுபெற்ற ட்ரேட்மார்க்

எத்தனை வைதிகப் பிராமணர்களை அனுதாபத்துடனே ஆத்திரத்துடனே சிந்திக்க வைத்தது என்பதற்குப் புள்ளிக் கணக்குச் சொல்ல இயலாது. ஆனால் அதன் தாக்கம் வெகுவாகவும் பரவலாகவும் இருந்தது என்பதை, அப்போது இருபது வயது இளைஞனாய் இருந்த இந்த நூலாசிரியன் நன்கு அறிவான். இதே போல் படிப்போர் மனத்தில் மாற்றத்தையோ கிளர்ச்சியையோ தோற்றுவிக்கக்கூடியதான கட்டுரைகளையும் கதைகளையும் எத்தனையோ எழுதினார் கல்கி. குறிப்பிட்ட அந்தக் கட்டுரையைக் கல்கியாகவோ ரா.கி.யாகவோ அல்லாமல், ஒரு பிராமண இளைஞனாக எழுதியதால் அது ஒரு தனி வேகமும் வலிமையும் பெற்றது.

கல்கியின் எழுத்து வன்மையைப் பாராட்டி வாசனும், வாசனின் செயலாற்றலை வியந்து கல்கியும், தத்தம் நண்பர்களிடம் பேசுகையில் ''யம காதகர்!'' என்று சொல்வதுண்டு. அந்த யமனையே ஒரு சமயம் தமது புனைபெயராகச் சூட்டிக்கொண்டு உடன் கால நிகழ்ச்சிகள் சிலவற்றைக் கேலிக்கு உள்ளாக்கிக் ''கொன்று'' தள்ளினார், கல்கி. அந்தப் பொல்லாத பெயரைப் பற்றியே முதல் கட்டுரையில் அவர் எழுதினார்:

ஏற்கனவே தெய்வங்களின் பெயர்களையெல்லாம் மனுஷர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ரிஷிகளின் பெயர்களையெல்லாம் எழுத்தாளர்கள் சூட்டிக் கொண்டுவிட்டார்கள். அவதாரங்களின் பெயர்களும் அப்படியே. இனிமேல் வரப்போகிற பத்தாவது அவதாரத்தின் பெயரைக்கூட ஒருவர் அபகரித்துக் கொண்டு விட்டார்.

ஆனால், பாவம், ஒரே ஒரு தேவரின் பெயரைத்தான் எல்லோரும் அலட்சியம் செய்திருக்கிறார்கள். யமன்! எவ்வளவு கருக்கமாகவும், சொல்வதற்கு எவ்வளவு சுலபமாகவும் இருக்கிறது! இந்தப் பெயரை ஏன் இதுவரையில் யாரும் வைத்துக் கொள்ளவில்லை? எனக்காகவே ஒதுக்கி வைத்திருக்கிறார்கள் போலிருக்கிறது!...

(ஆ. வி. 1–1–,39)

1941 வருடப் பிறப்பன்று ஆனந்த விகடனை விட்டுக் கல்கி விலகும்படியாய் நேர்ந்தது. அப்படி விலகியதற்கு நேர் எட்டாம் மாதம் கல்கியின் கல்கிப் பத்திரிகை பிறந்தது.

பழைய பத்திரிகையிலிருந்து புகழ் மிக்க தமது திரிவேணிப் பெயர்களைச் சொந்தப் பத்திரிகைக்குக் கல்கி கூட்டி வந்தார். அவற்றில் கர்நாடகத்துடன் '' ஆடல் பாடல் '' தலைப்பையும் கொண்டு வந்தார். புதிய பத்திரிகையின் தலையங்கங்களில் விகடன் தலை காட்ட முடியாதாகையால் அவனை விலக்கி விட்டார். விகடனை விலக்கினாலும் விகடத்தை விலக்கவில்லைதான்; ஆனாலும் குறைத்துக் கொண்டார். நாரதருக்கும் விடை கொடுத்துவிட்டார். தாம் பிரியமாய்ப் பேணி வளர்த்த வானர திருபரை, வேறோர் உருவில் கல்கியின் பக்கங்களில் ரகளை பண்ண விடலாம் என்று எண்ணியோ என்னவோ, ''லாங்கூலன்'' (வாலன்) என்ற புனைபெயரைப் படைத்திட்டார். ஆனால் அந்த லாங்கூலனைப் படமாய் வரைகையில், அது பழைய வானர திருபரை நினைவூட்டும் என்பதால்போலும் அவனை அருவமாகவே வைத்திருந்து.

சில சிறுகதைகளை மட்டுமே புனையச் செய்து விட்டு, வாலைச் சுருட்டிக் கொண்டு போகச் செய்தார்.

வேறொரு பிராணி கல்கிக்குத் தற்செயலாக அகப்பட்டது. — அலுவலகத்தில் வளைய வந்து கொண்டிருந்த ஒரு கறுப்புப் பூனை. பிரிட்டனில் யுத்த காலப் பிரதம மந்திரியாக இருந்த சர்ச்சிலின் முகத்தை அந்தப் பூனையின் முகம் நினைவூட்டியதால், அதற்குச் சர்ச்சில் என்றே கல்கி பெயரிட்டு அதைச் சிறிது காலம் தமது தலையங்கங்களில் ''மியாவ், மியாவ்'' என்று கத்திக் கொண்டு திரிய விட்டார்.

பொதுஜனம் பொதுவானவர் என்ற காரணத்தால் அவரை மட்டும் அவ்வப்போது வந்து போகச் செய்தார். பழைய யமனைச் சற்றே எட்டிப் பார்க்கச் செய்துவிட்டு, அவனுடைய லோகத்துக்கே அனுப்பி வைத்தார்.

கல்கிப் பத்திரிகையின் ஆரம்ப இதழ்களில் ''குகன்'' என்ற ஒருவர் குழந்தைக் கதைகள் எழுதினார். கல்கி ஆசிரியரேதான் அந்தக் கதைப் படகுக்காரர் என்பது வாசகர்களுக்குத் தெரியவில்லை. ஏனெனில் அசல் குழந்தை எழுத்தாளர்களின் பாணியில் அவர் அந்தக் கதைகளை எழுதியிருந்தார். ஆனால் ''தமிழ் மகன்'' என்பவர் சினிமா நீளக் கட்டுப்பாடு பற்றிய விவாதக் கட்டுரைகளை எழுதியபோது, அவற்றின் நடை கல்கியை இனம் காட்டி விட்டது. அந்த விவாதத்தில் கலந்து கொண்டவர்கள் கல்கியையே பெயர் சொல்லித் தாக்கினார்கள்.

குகனின் கதைகள், தமது குழந்தைகளுக்குக் கல்கி அவ்வப்போது இட்டுக் கட்டிச் சொன்னவை. மகளை ஒரு புறமும் மகனை ஒருபுறமும் அணைத்துக் கொண்டு ஊஞ்சலில் ஆடிக் கொண்டே கல்கி கதை சொல்வது வழக்கம்.

தம் குழந்தைகளின் கல்வி பற்றி அவர் கொண்ட கவலைதான், பின்னர் ''திருமகளும் கலைமகளும்'' என்ற நூலில் அடங்கிய கட்டுரைகளை எழுதத் தூண்டியது எனலாம். அந்தக் கட்டுரைகளுக்கென ''பெற்றோன்'' என்ற புனைபெயரைக் கல்கி வைத்துக் கொண்டார். 25—4—48 கல்கி இதழிலிருந்து வெளியான அந்தக் கட்டுரைத் தொடருக்கு அப்போது அவர் கொடுத்த தலைப்பு, ''எத்தனை நாள் இந்தக் கொடுமை?''


கடைசியாக அவருடைய 'விவசாயி' என்ற புனைபெயரைக் கவனிப்போம். நன்செய், புன்செய்கள் நிறைந்த கிராமம் ஒன்றில் நிலபுலன்களில் அக்கறை கொண்ட குடும்பத்தில் பிறந்த கிருஷ்ணமூர்த்தி, விவசாயத்தில் ஈடுபாடு கொண்டதில் வியப்பில்லை. அவரே தாம்பரத்துக்கு மேற்கே பெருங்களத்தூரில் முப்பத்து மூன்று ஏக்கரா நிலம் வாங்கி, அதைப் பண்படுத்திக் கனிப்பண்ணையாகவும் மலர்த் தோட்டமாகவும் பராமரித்தார். ''விவசாயி'' என்ற புனைபெயர் முதல் முதலாக 1948 பிப்ரவரி மாதம் 29ம் தேதியக் கல்கி இதழில் வெளியாயிற்று. உணவுப் பற்றாக்குறையை ஒழிப்பதற்காக நாட்டில் தீவிர முயற்சிகள் அன்றும் நடந்தன.


அதே ஆண்டில் தமது புனைபெயர்ப் பட்டியல் ஒன்றை ''திரை உலகம்'' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் கல்கி கொடுத்தார்: ''தும்பியாக இருந்து தமிழ்த் தேனீயாக மாறி ரீங்காரம் செய்து கடைசியில் கல்கியானேன். எனக்குக் கர்நாடகம், லாங்கூலன், அகஸ்தியர், ரா. கி., யமன், விவசாயி, பெற்றோன் என்ற புனைபெயர்களும் உண்டு.''

குகனையும் தமிழ் மகனையும் ஏனோ அந்தப் பட்டியலில் சேர்க்க மறந்துவிட்டார்! இன்னும் எத்தனையை மறந்துவிட்டாரோ? அவருடைய பட்டியலின் படி பார்த்தாலும் பத்துப் புனைபெயர்கள் ஆகின்றன. ஒரே கல்கியின் தசாவதாரம்! இத்தனை புனைபெயர்களை வேறெந்த எழுத்தாளரும் கொண்டதில்லை.

தேனீக்கு முன்னால் தும்பியாய் இருந்ததாக அந்தப் பட்டியலில் குறிப்பிட்டிருந்ததைக் கண்டு, நவசக்தியின் பழைய இதழ்களில் தேடியதில் அது அகப்படவேயில்லை. பார்க்கக் கிடைக்காத இதழ்களுடன் அது மறைந்து போயிற்றோ என்னவோ! ஆயினும் பின்னர், ஆனந்தவிகடனைத் தொடக்கத்திலிருந்து பார்வையிட்ட போது, 1929-ம் வருடத்து இதழ்கள் சிலவற்றில் அந்தச் சின்னஞ் சிறு தும்பி ''சின்னஞ் சிறு தமாஷ்'' செய்த வண்ணம் பறந்து கொண்டிருப்பதைக் காண முடிந்தது.

அகஸ்தியர் என்ற பெயரைத் தமது அபிமானச் சீடனுக்குச் சூட்டிய அய்யாசாமி அய்யர் ''அவன் நல்ல பேர் எடுப்பான்'' என்று அடிக்கடி கிராமத்துக்காரர்களிடம் சொல்லுவாராம். அவருடைய வாக்கு எப்படிப் பலித்தது! சின்னஞ் சிறு தமாஷ் எழுதிய சிறு தும்பி முதல் பேரிலக்கியம் படைத்த பேராசிரியர் கல்கிவரை பேரும் புகழும் எப்படிப் பெருகின! (தொடரும்)


தனி ஒருவனுக்குச் சிலை இல்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்!
எடுத்ததெற்கெல்லாம் சிலை வைக்கும் நமது அரசு இப்படி எல்லாம் சிலை வைத்தால் என்ன?
ஃபுட் போர்ட் டிராவலுக்குச் சிலை
குடி மகனுக்கு ஒரு சிலை
ரூபாய்க்கு 3 படி
பசுமைப் புரட்சிக்குச் சிலை
சிலை திருடுபவனுக்கும் ஒரு சிலை
யோகாசனக் கலைஞருக்கு ஒரு சிலை



● வீட்டு வசதி விஞ்ஞானத்துக்கு ஒரு சர்வதேசச் சங்கம். அமெரிக்காவில் இச் சங்கத்துக்கு விஜயம் செய்தார் வி. ஜி. பி. (வலது கோடி).

கோணியிலே உறங்கிய கோமான்!



● ஒரு பிரீஃபாப் வீடு.

ஓர் ஏழைக் குடும்பத்தில் மூத்த பிள்ளையாகப் பிறந்திருந்த அந்தச் சிறுவன் நெல்லைச் சீமையிலே ஒரு கடையிலே வேலை பார்த்து வந்தான். நாளடைவில் அந்தக் கடையை நூற்றைம்பது ரூபாய்க்கு விலை பேசி மாதத் தவணைகளில் பணத்தைக் கொடுப்பதாக ஒப்பந்தம் செய்துகொண்டான். சிறுவனின் உழைப்பும் அதிர்ஷ்டமும் சேர்ந்து கொள்ளவே வியாபாரம் செழித்தது. வியாபாரம் வளுத்ததைக் கண்ணுற்ற பழைய கடை முதலாளி சிறுவன் கடையில் இல்லாத சமயம் பார்த்துக் கடையை ஆக்கிரமித்துக்கொண்டு விட்டார்! அந்தப் பிஞ்சு உள்ளம் இந்த அநீதியை எண்ணி எண்ணி ஏங்கியது! வறுமையில் உழன்ற கிராமத்து மக்கள் சிறுவனுக்காக அனுதாபப்பட்டார்களேயொழிய வேறு எந்த வகையிலும் உதவி செய்ய முடியவில்லை. கிராமத்தில் ஒரு கிழவி அன்போடு ஈந்த இருபத்தைந்து ரூபாயில் பட்டணத்துக்கு ஓர் அரை டிக்கெட் வாங்கிக் கொண்டு ரயிலேறினான் அந்தப் பன்னிரண்டு வயதுச் சிறுவன். முப்பது மைல் தொலைவில் இருந்த ரயிலடிக்கு வந்துசேர, வாழை இலைக் கட்டுக்கள் ஏற்றிச் சென்ற கட்டை வண்டியில் ஒரு நாள் முழுதும் பயணம் செய்ய வேண்டியிருந்ததாம்!


பட்டணத்துக்கு வந்து சேர்ந்த பிறகும் வாழ்க்கை பெரும் போராட்டமாகவே அமைந்தது. சிறுவனுக்கு! ஒரு கோணிப் பை மட்டும் சிறுவனின் ஆஸ்தி! கோடையிலே கோணிச்சாக்கை விரித்து அதன் மீது படுத்துறங்குவானும்; குளிர் காலத்தில் அதே கோணிக்குள் முடங்கிப் படுத்து விடுவானும். இளமையில் வறுமையின் கொடுமைகளை அனுபவத்தில் உணர்ந்திருந்த அச்சிறுவன், இன்று உழைப்பால் உயர்ந்துள்ள நிலையில், 'எல்லாரும் எல்லாம் பெற வேண்டும்' 'ஏழை மக்களும் நடுத்தர வர்க்கத்தினரும் வாழ வசதியாகப் புறநகர்ப் பகுதியில் லட்சம் வீடுகள் கட்டித் தர வேண்டும்' என்று எண்ணுவதில் வியப்பேது? ஆம்! அன்று வாழ்வைத் தேடிச் சென்னைக்கு வந்த சிறுவன்தான் இன்று மிகப் பிரபலமடைந்து விளங்கும் 'வி.ஜி.பி.' நிறுவனங்களின் உரிமையாளர்களுள் மூத்தவர் திரு வி.ஜி. பன்னீர்தாஸ். அன்று தவணை முறையில் கிராமத்துக் கடையை வாங்கும் முயற்சியில் தோல்வி கண்ட பன்னீர்தாஸ், தவணை முறை வியாபாரத்தைத் தென்னாட்டிலே முதன் முதலாகத் தோற்றுவித்த பெருமைக்குரியவர். சென்னை நகரில் மட்டுமின்றித் தமிழ் நாட்டில் பல இடங்களில் 'வி.ஜி.பி.'யின் கிளைகள் படர்ந்து தழைத்துள்ளன. அன்று சலவை சோப் ஏஜன்ஸி எடுத்து வீடு வீடாகக் கொண்டு போய் விற்பனை செய்த வி.ஜி.பி. இன்று நகரில் கண் கவர் வனப்புள்ள பல 'ஷோரும்'களை அமைத்து டிரான்ஸிஸ்டர் ரேடியோ முதல் குளிர்பதன சாதனங்கள் வரையில் பல்வேறு பொருட்களை விற்பனை செய்து வருகிறார். நரிக் குறவர்களிலிருந்து நாகரிக நங்கையர் வரை பத்து லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் இவரது சுலபத் தவணை முறையில் பொருட்கள் வாங்கிப் பயனடைந்துள்ளனர்.



தவணை முறை வியாபாரம் இவரை எப்படிக் கவர்ந்தது?

1952—53ல் சைதாப்பேட்டையில் ஒரு பெட்டிக் கடை வைத்துப் பத்திரிகைகள் விற்

பணி செய்து வந்தார், திரு பன்னீர்தாஸ். வீடு வீடாக நடந்து போய்ச் செய்தித் தாள்களை காலை மாலை இரு வேளைகளும் கொடுக்க வேண்டும். அதோடு, தென் சென்னைப் பகுதிக்குக் குறுக்கெழுத்துப் போட்டி ஏஜண்டாகவும் இருந்தார். மேசை மீது வைக்கக்கூடிய சிறிய கடிகாரங்களை விற்பனை செய்ய எண்ணினார், வி.ஜி.பி. ஆனால் ரூ. 16 மதிப்புள்ள கடிகாரத்தை விற்பனை செய்வது எளிதாக இல்லை. சிறு தவணைகளில் பணம் பெற்றுக் கொள்ளுவதாகக் கூறிச் சில கடிகாரங்களை



● கொத்தனார் வேண்டாம்; தச்சனும் வேண்டாம்! ப்ரீஃபாப் வீட்டின் பாகங்கள் வந்து சேர்ந்து விட்டன. இனி இணைத்து விடாக்கிக் கொள்ள வேண்டியதுதான்.

விற்றார். பின்னர் கைக் கடிகாரம், சைக்கிள் முதலிய பொருட்களையும் இவ்விதமே தவணை முறையில் விற்பனை செய்யலானார். ஒரு வானொலிப் பெட்டியை வாங்கி ஒரு நாள் முழுதும் அதனை உபயோகித்துப் பார்த்த



● "அதாவது இதன் தாத்பர்யம் என்னவென்றால்..." ப்ரீஃபாப் வீடுகள் பற்றிய அறிவை அனுபவ பூர்வமாக நேரில் பெறுகிறார் வி. ஜி. பி.

பின்னர் திரு ஞானப்பிரகாசம் என்பவருக்கு அதனை விற்றார். தொடர்ந்து ரேடியோ விற்பனையில் அவர் ஈடுபட விரும்பினாரெனினும் மூலதனம் போட வழியில்லாததால் அம் முயற்சியைக் கைவிட்டு, ரேடியோ வாங்க விரும்பியவர்களை விற்பனையாளர்களிடம் அழைத்துச் சென்று அவர்களுக்கு ரேடியோ வாங்கிக் கொடுத்துவிட்டுத் தமக்குரிய 'கமிஷன்' தொகையை விற்பனையாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்வார். இவ்விதம் அன்று தொடங்கிய ரேடியோ விற்பனையில் வி.ஜி.பி. நிறுவனம் இன்று முதலிடம் பெற்றுத் திகழ்கிறது. சைக்கிள், தையல் இயந்திரம் போன்ற பொருட்களை அதிக அளவு விற்பனை செய்து வருகிற இந்நிறுவனம்; சிறந்த — ஷோ—ரூம் அமைப்புக்கெனவும், அதிகமான ரேடியோ தையல் இயந்திரங்களை விற்றதற்காகவும் பல அகில இந்தியப் பரிசுகளைப் பெற்றுள்ளது. குறுக்கெழுத்துப் போட்டி ஏஜண்டாக இருந்தபொழுது திரு பன்னீர் தாஸின் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு சம்பவம் நெஞ்சை நெகிழச் செய்யும்.

"என் குழந்தையைப் பெருச்சாளி கடித்து விட்டது. தங்கசாலைத் தெருவிலுள்ள ஒரு மருத்துவரிடம் சிகிச்சை நடந்து வந்தது. சைதாப்பேட்டையிலிருந்து மின்சார ரயிலில் ஏறிக் குழந்தையை டவுனுக்கு எடுத்துச் செல்லுவோம். அன்று, குறுக்கெழுத்துப் போட்டிக்கென வாடிக்கையாளர்கள் செலுத்தியிருந்த இரண்டரை ரூபாயைக் கம்பெனியில் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டிய கடைசி நாள். அந்த இரண்டரை ரூபாய்க்கு எனக்குக் கிடைக்கக்கூடிய கமிஷன் ஐந்தணா! எனினும் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையைக் காப்பாற்றியாக வேண்டுமே என்பதற்காகக் குழந்தையை மருத்துவரிடம் எடுத்துச் செல்லும் பொறுப்பினை என் மனைவியிடம் ஒப்படைத்துவிட்டு நான் அந்த இரண்டரை ரூபாயுடன் கம்பெனிக்குக் கிளம்பிவிட்டேன். இரவு எட்டு மணிக்கு நான் அலுவலை முடித்துக் கொண்டு வீடு திரும்பியபோது என் மனைவி மருத்துவ மனையிலிருந்து வீடு திரும்பியிருந்தாள் — இறந்துவிட்ட என் குழந்தையின் சடலத்துடன்! டாக்ஸியில்





"நான் சொல்லித் தருகிற சரித்திர பாடத்தைக் கவனிக்காமல் என்ன எழுதிட்டிருக்கே?"
"சுய சரித்திரம்!"

வரப் பணம் இல்லாததால் குழந்தையின் உடலைச் சுமந்து கொண்டு என் மனைவி மின் ரயிலில் வீடு திரும்ப நேர்ந்தது!'' பன்னீர் தாஸின் தொழில் நேர்மைக்கும் நாணயத்துக்கும் இச்சோக நிகழ்ச்சி ஓர் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது அல்லவா?

அண்மையில் மியாமியில் நிகழ்ந்த வீட்டு வசதி மாநாட்டின் அமைப்பின் பேரில் தம்பி செல்வராஜுடன் சென்று வந்துள்ள திரு பன்னீர்தாஸ் கூறுகிறார்: ''அமெரிக்கா தொழில் துறையில் அடைந்துள்ள வியத்தகு முன்னேற்றம் சிறு குழந்தைக்குக்கூடத் தெரியும். 'இது எவ்வாறு நிகழ்ந்தது?' என்பது தான் சிந்தனைக்குரியது. அமெரிக்கக் கிராமம் ஒன்றுக்கு நான் விஜயம் செய்தபோது ஒரு கிராமவாசியிடம் இது பற்றிக் கேட்டேன். அவர் 'இந்நாட்டில் யாராவது கூட்டம் போட்டுத் தெருத் தெருவாகப் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டீர்களா?' என்று என்னிடம் திருப்பிக் கேட்டார். அமெரிக்கத் தொழிலாளி எட்டு மணி நேரம் கடுமையாக உழைக்கிறான். உழைப்பு நேரத்தில் அவன் வீண் பேச்சு, வம்புகளில் ஈடுபடுவதேயில்லை. பகலில் உழைப்பு நேரத்தில் தூங்குவது அங்கு சட்டப்படி குற்றமாகும்.''

அருகிலிருந்த திரு செல்வராஜ் கூறுகிறார்: ''கனடாவில் நாங்கள் ஒரு தொழிற்சாலைக்குப் போயிருந்தோம். வீடு கட்டுவதற்கான, ப்ரீ ஃபேப்ரிகேஷன் தொழிற்சாலை அது. 'நீங்கள் வந்திருக்கிறீர்கள் என்பதற்காகத் தொழிலாளிகள் யாரும் இங்கு வேலையை நிறுத்த மாட்டார்கள். அவரவர்கள் பல பொருட்களை இங்குமங்கும் எடுத்துச் செல்வார்கள். நீங்கள்தாம் கவனத்துடன் சென்று சுற்றிப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும் போது எங்காவது இடித்துக் கொண்டு விட்டாலோ, காயம் பட்டுவிட்டாலோ — தொழிற்சாலை நிர்வாகம் அதற்குப் பொறுப்பேற்காது' என்று எச்சரித்து விட்டார். அமெரிக்காவிலும் கனடாவிலும் 'ப்ரீஃபேப்ரிகேடட்' வீடுகள் மிக சகஜம். அதாவது முன் கூட்டியே திட்டமிட்டுத் தனித் தனிப் பாகங்களாகத் தயாரித்து இணைக்கப்படும் வீடுகள். வீடுகளுக்கான ஜன்னல்கள், கதவுகள் அனைத்தும் ஒரே அளவுள்ளவை. ஒரு வீட்டில் ஒரு ஜன்னல் பழுதடைந்தால் சூப்பர் மார்க்கெட்டுக்குப் போய் ஒரு ஜன்னல் வாங்கி வந்து நாமே அதைப் பொருத்திவிடலாம். தச்சவேலைக்காரர்களையும், கொத்தனார்களையும் தேடிப் போக வேண்டியதில்லை!''

'நீங்கள் லட்சம் வீடுகள் கட்டும் மாபெரும் திட்டத்தைத் தொடங்கியிருக்கிறீர்களாமே?' என்று கேட்டதற்குத் திரு பன்னீர்தாஸ் கூறுகிறார்:

'' அது எப்படியும் பத்து ஆண்டுக் காலத்தில் நிறைவேறும் என்று உறுதியாக நம்புகிறேன். மேலை நாடுகள் போன்று இங்கும் 'ப்ரீஃபாப்' வீடுகள் கட்டத் தேவையான பாகங்களைத் தயாரிக்கவிருக்கிறோம். வண்டலூரில் எங்கள் தொழிற்சாலை இயங்க ஆரம்பித்ததும் இத்திட்டம் வேகமாகச் செயல்பட ஆரம்பிக்கும். அமெரிக்கத் தொழில் நுட்ப உதவி இதற்குக் கிடைக்கும். யந்திர சாதனங்கள் விரைவிலேயே வந்துவிடும். மூன்று 'மாடல்'களில் வீடுகள் கட்ட முடிவு செய்துள்ளோம். லட்சம் வீடுகளையும் நாங்களே உடனிருந்து கட்டி முடிக்க வேண்டும் என்ற அவசியம்கூட இல்லை. தேவையான அடிப்படை அறிவை அளித்துச் சாதனங்களையும் கொடுத்து அவரவர்களே கட்டிக் கொள்ளவும் வசதி செய்வோம்!''

''ப்ரீஃபேப்' வீடுகளில் உள்ள விசேஷ வசதிகள் என்னென்ன?''

''குறுகிய காலத்தில் கட்டி முடிக்கலாம் என்பது தவிர, விலையும் குறைவாக இருக்கும். கூரை மெல்லியதாக அமைந்தது. நெருப்புப் பிடிக்குமோ திருடர்கள் உட்புகுந்துவிடுவார்களோ என்ற பயமில்லை. மிக்க உறுதியானவை. நாலு மாடிக் கட்டடங்கள்வரை சுலபமாகக் கட்டலாம். ஆஸ்பத்திரிகள், பள்ளிகளுக்கும் இம்முறை பெரிதும் பயன்படும். இம்மாதிரியான ஐயாயிரம் வீடுகளை ஹவாய்க்குக் கப்பலில் ஏற்றி அனுப்பியிருக்கிறார்கள், அமெரிக்கர்கள். அவர்கள் ஒரே தொழிற்சாலையில் வீட்டுக்கான எல்லாப் பாகங்களையும் தயாரித்து விடுவதில்லை. ஒவ்வொரு தொழிற்சாலையிலும் சிற்சில பாகங்களை மட்டுமே தயாரிக்கிறார்கள். இதனால் உற்பத்தியின் அளவும் வேகமும் அதிகரிக்கிறது. நம் நாட்டில் உள்ளது போன்று நகரங்களில் மட்டுமே அங்கு தொழிற்சாலைகள் அமைந்திருக்கவில்லை. பரவலாக நாடெங்கிலும் உள்ளன. நம் நாட்டில் கிராமங்களில் இருப்போரிடம் பணம் முடங்கிக் கிடக்கிறது. இலாபகரமாக அப்பணம் முதலீடு செய்யப்படவில்லை. கிராமங்களில் சிறு தொழில்கள் தொடங்கினால் முடங்கிக் கிடக்கும் பணம் வெளிவரும். நாட்டில் தொழில் வளம் பெருகும். நகரங்களில் மக்கள் தொகை குறையும்'' என்கிறார் திரு பன்னீர்தாஸ்.


தம்பியர் திரு சந்தோஷமும், திரு செல்வராஜும் திரு பன்னீர்தாஸ் எடுத்த காரியம் யாவிலும் கைகொடுத்து ஒற்றுமையுடன் உழைத்து வருகின்றனர்.

— 'ஆர்.பி.'

அவள் எழிலின் ரகசியம்

ஐடெக்ஸ்

அழகு சாதனங்கள்



ARAVIND LABORATORIES
MADRAS-33



வாலிப மிடுக்கோட வாழுங்க ஆனந்தமா!

நீஞ்சற வயசுலே ஒஞ்சு கிடப்பாங்களா? மூச்சுத் திணறினவனுக்கு முகூர்த்தம் போச்சு. உங்களுக்கென்ன? 'தம்' இல்லாமப் போகுமா. விரலே அசைச்சா வீரியம் துள்ளிவரும்: வெள்ளிக் காசுக் கணக்கா இந்தாங்க ஒகாஸா. இந்தக் காலத்து டானிக் மாத்திரை. நாளுங்க கிழவனாலும் நாடி தளராத தெம்புக்கு: ஒகாஸா. சளிக்காம பல காலம் சிலம்பம் வீசி வாழலாம். ஜமாயுங்க—மேளதாளத்தோட.


வல்லவராய் வாழ்வதற்கே


ஒகாஸா

ஹார்மோ-பார்மா லிமிடெட், லண்டன்-பெர்லின் தயாரிப்பு.

ஆண்களுக்கு வெள்ளி நிற மாத்திரை— எல்லா முக்கிய மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்

OKASA CO.PVT.LTD., 12K. Gunbow Street, P. B. No. 396, Bombay-400001




THE MOST WONDERFUL IDEAS GROW WITH COTTON
TEXTURES
wool-feel...gay silky...cool lineny...
natural-only as cotton
Century-FOR 100% COTTON TEXTILES
THE CENTURY SPG. & MFG. CO. LTD., Bombay 400 025
Adroit-CM-539-P

ஆலை வீரர்களின் வேலைத்திறன் உயர...

பாரத நாட்டில் பரவலாக ஒரு குறை காணப்படுகிறது. பொறி இயலில் பட்டம் பெற்றிருப்பவர்களுக்குக் கையில் கத்தி பிடித்து வேலை செய்யவோ கரணை பிடித்துச் சிமின்ட் பூசவோ வராது. கையில் கத்தி பிடித்துக் கரணை பிடித்து வேலை செய்பவர்களுக்குப் பொறி இயலின் நுட்பம் தெரியாது.

இந்நிலையில் ஓரளவு பள்ளிப் படிப்பும், நேர்முக அநுபவமும் பெற்றுத் திறமையின் காரணமாக ஒரு தொழிற்கூடத்தில் மேஸ்திரி போர்மனாக உயர்ந்து விட்டவர்களுக்கு இன்னும் கொஞ்சம் பயிற்சி அளித்து பொறி இயல் நுட்பங்களும் போதித்தால் தொழிற்கூடத்தின் உற்பத்தி மேலும் பெருகும்; தொழிற்கூட நிர்வாகமும் ஒழுங்குறும். இந்த நோக்குடன் பெங்களூரில் ஃபோர்மேன் பயிற்சிக் கழகம் மூன்று ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது.

இதில் மூன்று அரசாங்கங்களின் பங்கு உள்ளது. கர்நாடக மாநில அரசு 52 ஏக்கரா பரப்புள்ள நிலத்தையும் குடிதண்ணீர் வசதி, சாலைகள் முதலியனவும் அளித்துள்ளது.

மத்திய அரசு கட்டிடங்கள், புத்தக சாலைகள், உள்நாட்டு யந்திரங்கள் போன்ற சில வகைகளில் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் அளித்துள்ளது.

மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த பேடன் உர்ட்டன்பெர்க் என்ற ராஜ்ய அரசு மிக நுட்பமான யந்திரக் கருவிகள், 13 ஜெர்மன் ஆசிரியர்களின் சம்பளம், 24 இந்திய பொறி இயல் ஆசிரியர்கள் ஜெர்மனிக்குச் சென்று பயிற்சி பெற்ற காலத்தில் வழங்கிய உபகாரச் சம்பளம் ஆகிய வகைகளில் 95 லட்சரூபாய் செலவழித்துள்ளது.

இப்படி மூன்று அரசாங்கங்களின் ஒத்துழைப்புடன் 1971ம் ஆண்டு நவம்பர் 21ந் தேதி தொடங்கப்பெற்ற இப்பயிற்சிக் கழகத்தில் இதுவரை — அதாவது இம்மூன்று ஆண்டுகளில் — சுமார் 750 பேர் பயிற்சி பெற்றுச் சென்றிருக்கிறார்கள்.

இந்தக் கழகத்தில் ஓராண்டுப் பயிற்சி, பொறி இயல் டிப்ளமோ பெற்றவர்களுக்கு ஈராண்டுப் பயிற்சி. இவை தவிர இரண்டு வாரம் முதல் நான்கு வாரம் வரையில் நீடிக்கக்கூடிய — ஏதோ ஒரு துறையில் - தீவிரப் பயிற்சி என்றெல்லாம் அவரவர் தொழில் அநுபவம் கல்வித் தரம் ஆகியவற்றின் அடிப்படையில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

சர்க்கார் துறைத் தொழிற்கூடங்களிலும் தனியார் துறைத் தொழிற்கூடங்களிலும் வேலை செய்பவர்களுக்கு அவர்கள் வேலைத் திறமையைப் பெருக்கிக் கொள்ள இக்கழகம் நல்ல வாய்ப்பளிக்கிறது.




வெல்டிங், மில்லிங், பிளாஸ்டிக் கருவிகள் தயாரித்தல், பொருட்களின் தரத்தைப் பரிசோதித்தல், ஹீட் டிரீட்மெண்ட் போன்ற பல துறைகளில் நல்ல அநுபவம் பெற முடியும். பொதுத் துறை நிர்வாகத்தினரும் தனியார் துறை நிர்வாகத்தினரும் தங்கள் திறமை மிக்க தொழிலாளர்களை இங்கு அனுப்பிப் பயிற்சி பெறச் செய்தால் தங்கள் தொழில் சிறக்கக் காண்பார்கள்.

சென்ற மூன்று ஆண்டுகளாகப் பயிற்சி அளித்து வந்த ஜெர்மானிய பொறி இயல் நிபுணர்கள் தங்கள் பணி முடிந்து தற்போது தங்கள் நாட்டுக்குத் திரும்புகின்றனர்.

இந்தக் கழகத்தை இதுவரையில் மேற்கு ஜெர்மானிய பேடன் உர்ட்டன்பர்க் மாநில அரசு நிர்வகித்து வந்தது. இனி இந்திய அரசாங்கமே நிர்வகிக்கும். மேற்கு ஜெர்மானிய மந்திரி திரு எம்.டி. ஹாக்ஸ்டெட்டர் இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாகிய திரு சுகவர சந்திரா (வேலை வாய்ப்பு—தொழிலாளர் துறை டைரக்டர்) அவர்களிடம் சென்ற ஜூலை 8ந் தேதி கழகத்தை ஒப்படைத்து விட்டார். இந்த வைபவத்துக்குக் கர்நாடக அரசின் தொழிலாளர் நல மந்திரி திரு எஸ். எம். யாஹ்யா தலைமை வகித்தார்.

தென்மேற்கு ஆசியப் பகுதியிலேயே இத்தகையதொரு தொழிற் பயிற்சிக் கூடம் கிடையாது என்று புகழ் பெற்ற இந்தக் கழகத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டியது இந்தியத் தொழில் துறையினரின் கடமையாகும். — எஸ். வி. எஸ்.


உங்கள்
குடும்பத்திற்கு
ஏற்றது
மிகச்சிறந்ததே!


COLGATE
DENTAL CREAM

திருடர்கள்



• ர.சு.நல்லபெருமாள் •

3. நீதிமன்றத்தில் நாடகம்!

சாட்சிக் கூண்டில் நின்ற வேலம்மாளின் அழுகையைப் பற்றி ஜூனியர் சம்பத் 'நடிப்பு' என்றானல்லவா? அதைக் குறித்து "ஜட்ஜிடம் அனுதாபத்தைப் பெற வழி" என்று முணுமுணுத்தார் ஆவுடையப்ப பிள்ளை.

வேலம்மாளைப் பார்த்து முனுசாமி கேட்டார்: "ஆண்கள் துணை உனக்கு உண்டா?"

"இடையாது. நானும் என் அம்மாவும் தாம்" என்றாள் வேலம்மாள்.

"வீட்டுக்காரர்....?"

"மலேயாவில் வியாபாரம் செய்யறாங்க."

"கூண்டில் நிற்கிறானே குற்றவாளி குருசாமி, அவனை உனக்குத் தெரியுமா?"

"பக்கத்து வீட்டுக்காரன்."

"என்ன தொழில் பார்க்கிறான்?"

"சும்மாதான் இருக்கிறான். ஒரு வேலையும் இடையாது."

"இவனுடைய அப்பா என்ன செய்கிறார்?"

இந்தக் கேள்வியை முனுசாமி கேட்டதும் ஆவுடையப்ப பிள்ளை ஆட்சேபித்தார்.

"யுவர் ஆனர்! இந்தக் கேள்வி அனாவசியமானது. இந்த வழக்குக்குச் சம்பந்தமில்லாதது. தேவை யில்லாதது" என்றார்.

"நோ யுவர் ஆனர் ... இவனுடைய தந்தையின் செல்வாக்கு இவனுக்கு இந்த மாதிரி குற்றம் புரியத் தைரியமளித்தது என்பதைக் காட்டத்தான்" என்றார் முனுசாமி.

"யுவர் ஆனர்! நான் இதைப் பலமாக ஆட்சேபிக்கிறேன். குற்றம் புரிந்தவனுடைய தந்தையைப் பற்றியும் அவருடைய தொழிலைப் பற்றியும் இங்கு பேசப்படுவது பொருத்தமற்றது. இந்த வழக்குக்கும், குற்றவாளியின் தந்தைக்கும் சம்பந்தமே இல்லை" என்று ஆட்சேபித்தார் ஆவுடையப்ப பிள்ளை.

"யுவர் ஆனர்! குற்றவாளி வேலையற்றுத் திரிபவன். இவனுக்கு இப்படி ஒரு குற்றத்தைப் புரியும் தைரியமும், தெம்பும் வர ஏதாவதொரு பக்கபலம் இருந்துதானே ஆக வேண்டும்" என்றார் முனுசாமி.

"ஓ, என் நண்பர், இந்தக் குற்றத்துக்குக் காரணமே குற்றவாளியின் தந்தைதான் என்று வாதிப்பார் போலிருக்கிறதே!" என்று கோபமாகச் சொன்னார், ஆவுடையப்ப பிள்ளை.

"வேலை இல்லாமல் இருக்கிறான் என்ற காரணமே குற்றம் புரியத் தூண்டப் போதுமானதாயிற்றே" என்றார் நீதிபதி.

"இருந்தாலும், குற்றவாளிக்கு இவ்வளவு பெரிய குற்றத்தைப் புரியத் தைரியம் கொடுத்தது சூழ்நிலைதான், யுவர் ஆனர்" என்றார் முனுசாமி.

"என்ன சூழ்நிலை...? பக்கத்து வீட்டில் முதலாவது சாட்சி குடியிருப்பதா?" என்று நீதிபதி கேட்டதும், எல்லாரும் சிரித்தார்கள்.

"நோ யுவர் ஆனர், குற்றவாளியின் தந்தையின் செல்வாக்கு" என்று முனுசாமி கூறியதும் ஆவுடையப்பபிள்ளை பலத்த குரலில் ஆக்ஷேபித்தார்.

"என்னுடைய வாதம் என்னவென்றால், இந்த வழக்கே அரசியல் காரணத்தால் ஏற்பட்டதுதான். அரசியலில் புகழும் செல்வாக்கும் பெற்றுள்ள நேர்மையாளர் ஒருவருடைய பெயரை இங்கே இழுத்து மாசுபடுத்துவதை நான் பலமாக ஆக்ஷேபிக்கிறேன்."

"மகனுடைய செயலால் ஏற்படாத அவமானம் வழக்கினால் ஏற்பட்டு விடப் போகிறதா?" என்றார் முனுசாமி.

"மகன் குற்றவாளியா, இல்லையா என்பதே இன்னும் நிருபணமாகவில்லையே?" என்றார் ஆவுடையப்பபிள்ளை, அழுத்தமாக.

"மிஸ்டர் ஆவுடையப்பபிள்ளை! உங்களுடைய ஆக்ஷேபணையை ஏற்றுக் கொண்டேன்" என்று கூறிவிட்டு முனுசாமியைப் பார்த்து மேற்கொண்டு கேள்வி கேட்கப் பணித்தார், நீதிபதி நாககந்தரம்.

வக்கீல் கருணாகரன் பொருமினார். நீதிமன்றத்தில் குற்றவாளியின் தந்தையான ரகுபதி நாயுடுவின் பெயரைக் குறிப்பிட்டுப் பல கேள்விகளை கேட்டு அவருடைய மானத்தை வாங்க வேண்டுமென்று போட்டிருந்த அவருடைய திட்டம் நிறைவேறவில்லை. கருணாகரனுக்கு நீதிபதியின் மீது கோபம் எழுந்தது.

"நம்முடைய வக்கீலைக் கேள்வி கேட்க விட மாட்டார் போலிருக்கிறதே" என்று போலீஸ் இன்ஸ்பெக்டர், மெதுவாகக் கருணாகரனிடம் சொன்னார்.

"இந்த மாதிரி ஆசாமிகளெல்லாம் ஜட்ஜாக வந்தால் இப்படித்தான்" என்றார் கருணாகரன், எரிச்சலுடன்.

"ரகுபதி நாயுடுவைப் பற்றி ஒரு கேள்வி கூடக் கேட்க ஜட்ஜ் அனுமதிக்கவில்லையே?"

"வக்கீல்களை அவர்கள் போக்கில் வழக்கு நடத்த இவர் அனுமதிப்பதே இல்லை.. ரொம்ப மோசம்!"

"இவர் மீது உங்கள் வக்கீல் சங்கத்தில் கண்டனத் தீர்மானம் போடப் போவதாகப் பேச்சு இருந்ததே?"

"நாளைக்குப் போடப் போகிறோம். தீர்மானத்தை ஹைகோர்ட்டுக்கும் அனுப்பப் போகிறோம். அப்போதுதான் இந்த ஜட்ஜ் நம்மைப் புரிந்து கொள்ளப் போகிறார்!"



இவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருந்த போது, நீதிமன்ற அறைக்குள் சலசலப்புத் தோன்றவே, அதைக் கவனிக்கத் தொடங்கினார்கள்.

சாட்சிக் கூண்டில் வேலம்மாள் விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள்.

''ம் ... சொல்லு ... அழாமல் சொல்லு'' என்றார் முனுசாமி.

''வேலம்மாளின் அழுகை அதிகரித்தது.

''அப்புறம் ...? நீ தோட்டத்துக்கு வந்தாய். இவன் மண் சுவருக்கு மறுபக்கம் இருந்து எட்டிப் பார்த்தான். பிறகு ... பிறகு ...?'' தொடர்ந்து சொல்லும்படி முனுசாமி தூண்டினார். வேலம்மாள், ''சுவர் ஏறிக் குதித்து வந்து..'' என்று கூறி விட்டுக் குலுங்கக் குலுங்க அழத் தொடங்கிவிட்டாள்.

நீதிபதிக்கு எரிச்சலும் கோபமும் தோன்றின. வேண்டுமென்றே அழுது ஒரு துயரச் சூழ்நிலையை உருவாக்குகிறான் என்று நினைத்துப் பொறுமையை இழந்தார்.

''இந்தாம்மா..... இப்படி அழுதால் ஒன்றும் நடக்காது. நடந்ததைத் தெளிவாகச் சொல்லு. இல்லையென்றால், கொஞ்ச நேரம் அழுது முடித்து விட்டுப் பிறகு சொல்லு'' என்றார் நீதிபதி. அவருடைய குரலில் தொனித்த கோபத்தைப் புரிந்து கொண்ட வேலம்மாள், பரபரப்புடன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''என்ன சார், ஓரேயடியாக அழுகிறாளே!'' என்றார், முனுசாமி, இரகசியமாகக் கருணாகரனைப் பார்த்து.

''லேசாக அழச் சொன்னேன். கேள்வி கேட்கும்போது பற்களைக் காட்டிக் கொண்டு நிற்காதே, கவலையோடு இருப்பதுபோலிரு, கொஞ்சம் அழுது கொள் என்று சொல்லி வைத்தேன். இவள் ஒவ்வொரு கேள்விக்கும் அழுது தொலைக்கிறாள்'' என்றார் கருணாகரன்.

''அப்புறம் சொல்லு...'' என்று வேலம்மாளைத் துரிதப்படுத்தினார், நீதிபதி.

''சுவர் ஏறிக் குதித்து வந்து, என்னைக் கெடுத்து விட்டான்'' என்று கூறி முகத்தை மூடிக் கொண்டாள், வேலம்மாள். அவள் அழுகிறாளா அல்லது வெட்கத்தினால் முகத்தை மூடியிருக்கிறாளா என்பது தெரியவில்லை.

''விவரமாகச் சொல்லு ... கெடுத்தான் என்றால் எப்படி....?'' முனுசாமி கேட்டார். முகத்திலிருந்து கையை எடுத்து விட்டுக் குழப்பத்துடன் முனுசாமியைப் பார்த்தாள் வேலம்மாள். என்ன பதில் சொல்வது என்று புரியாமல் திகைத்தபடி நின்றாள்.

நீதிபதி குறுக்கிட்டு, ''சரி, சரி அவள்தான் சொல்லி விட்டாளே. இதற்கு மேல் விவரிக்க வேண்டுமா?'' என்றார் சிரித்துக்கொண்டே.

முனுசாமி விடவில்லை. கேள்வி கேட்டார்: ''இந்தாம்மா, கெடுத்து விட்டான் என்று மட்டும் சொன்னால் போதாது. எந்தப் பக்கமாக வந்தான்? உன்னோடு பேசினானா? முதலில் எப்படி முயற்சி செய்தான்?''

இந்தச் சமயத்தில் ஆவுடையப்ப பிள்ளை எழுந்திருந்தார்.

''யுவர் ஆனர்! நண்பர் சாட்சியைப் பயமுறுத்துவது மாதிரி இருக்கிறது. அவள் கூறி முடித்து விட்டாள். மீண்டும் மீண்டும் விவரம் கேட்க வேண்டிய அவசியமில்லை'' என்றார்.

''விவரம தேவை, யுவர் ஆனர்!'' என்று கூறி விட்டு வேலம்மாளைப் பார்த்து, ''இந்தாம்மா! குருசாமி, சுவர் ஏறிக் குதித்து வந்தான்... வந்தவன் கடைசி வரை நின்று கொண்டேவா இருந்தான் ...?'' என்று எரிச்சலோடு கேட்டுவிட்டு முறைத்துப் பார்த்தார் முனுசாமி. வேலம்மாள், சற்று யோசித்தாள். பிறகு ''இல்லீங்க, என்னைப் பிடித்துக் கீழே தள்ளினான்'' என்றாள்.

''ஆ ... அதைச் சொல்லு ... கீழே என்றால் எங்கே?'' என்று கேட்டார் முனுசாமி, உற்சாகத்துடன்.

''நான் இதை ஆட்சேபிக்கிறேன் யுவர் ஆனர். கீழே தள்ளியதாகக் கூறிய பிறகு கேள்வியைத் தொடர்வது சாட்சியை 'லீட்' பண்ணுவதாகும்'' என்றார் ஆவுடையப்ப பிள்ளை.

''கீழே என்றால் எங்கே என்று தெரிய வேண்டாமா? கீழே கட்டாந்தரையிலா இல்லையென்றால், கட்டிலிலா, மெத்தையிலா?'' என்று தமிழில் முனுசாமி கேட்டார்.

''தொழுவத்தில் ஏது சார் கட்டிலும் மெத்தையும்?'' என்று தமிழிலேயே கேட்டார் நீதிபதி.

முனுசாமி சொன்னதன் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட வேலம்மாள், ''வைக்கோல் பரப்பு மீது தள்ளினான்'' என்று படபடப்புடன் கூறினாள்.

ஆவுடையப்ப பிள்ள பலத்த குரலில் ஆக்ஷேபித்தார்.

''இந்தக் கேள்வியையும், பதிலையும் நான் ஆக்ஷேபிக்கிறேன் யுவர் ஆனர்! இந்தப் பதிலைக் கீழ்கோர்ட்டில் இவள் சொல்லவில்லை'' என்றார்.

''கீழ்க் கோர்ட்டில் விட்டுப் போயிருக்கும். அதைப் பற்றிக் கீழ்கோர்ட்டில் கேட்டிருக்க மாட்டார்கள், இவளும் பதில் சொல்லியிருக்க மாட்டாள்'' என்றார் முனுசாமி.

''நோ ... நோ... இந்த வைக்கோல் போர்க் கதை, இப்போது உண்டாக்கப் பட்டது, யுவர் ஆனர்! என்னுடைய ஆக்ஷேபணையை நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லையென்றால், என்னுடைய ஆக்ஷேபணை என்ன என்பதை நீங்கள் குறித்துக் கொள்ள வேண்டும்'' என்றார் ஆவுடையப்பபிள்ளை. நீதிபதி, தலையை அசைத்து ''ஆக்ஷேபணையைக் குறித்துக் கொண்டேன்'' என்றார்.

ஆவுடையப்பபிள்ளை, அமைதியாக உட்கார்ந்தார்.

''வைக்கோல் போர் விஷயம் புதிதாயிருக்கிறதே'' என்று கேட்டான், ஜூனியர் சம்பத்.

''டாக்டரின் பரிசோதனையில் அவளுடைய உடம்பில் வேறு காயங்கள் ஏதும் இல்லை என்றிருக்கிறது. தரையில் தள்ளிப் பலாத்காரம் செய்திருந்தால், முதுகுப் பக்கத்தில் சிராய்ப்பாவது இருக்க வேண்டும். அதற்காகத்தான் வைக்கோல் போர் மீது தள்ளினான் என்று கூறப்படுகிறது'' என்றார் ஆவுடையப்பபிள்ளை.


''சார்! உண்மையிலேயே வைக்கோல் போர் அவள் வீட்டில் இருக்கிறதா? மாடு வளர்ப்பதாகத் தெரியவில்லையே?'' என்று இரகசியமாகக் கேட்டான், ஜூனியர் சம்பத்.

''பொறு ... நான் குறுக்கு விசாரணை செய்யும் போது பார்த்துக் கொள்ளலாம்'' என்றார் பிள்ளை.

4. வாழ்க்கை லட்சியம்

சம்பத்தும் நளினியும் சாப்பிடுவதற்காக ஆவுடையப்ப பிள்ளையின் அலுவலகத்துக்குச் சென்றார்கள். நீதிமன்றத்துக்குப் பக்கத்துத் தெருவில் ஆவுடையப்ப பிள்ளையின் அலுவலகம் இருந்தது. தினமும் மத்தியானம் நளினிக்கு அவளுடைய வீட்டிலிருந்து சாப்பாடு வந்துவிடும். சம்பத், கான்டீனில் சாப்பிட்டுக் கொள்வது வழக்கம். சில நாட்களில் நளினி அவனைத் தன்னோடு சாப்பிடக் கூப்பிடுவாள். தினமும் அவள் சாப்பிடக் கூப்பிட்டால் நன்றாக இருக்குமே என்று ஏங்குவான் சம்பத். அவளோடு சேர்ந்து சாப்பிடுவதில் உள்ள இனிமையை ரசிப்பது மட்டுமல்ல, அன்று அவன் கான்டீனுக்குச் செலவழிக்கவும் வேண்டியிருக்காது!

எத்தனையோ முறைகள் இருவரும் ஹோட்டலுக்குச் சென்று விருந்துண்டிருக்கிறார்கள். அப்போதெல்லாம் சாப்பாட்டுக்கான பணத்தைத் தானே கொடுப்பதாகச் சொல்லி, பர்ஸைப் பையிலிருந்து எடுப்பான், சம்பத். அது ஒரு நடிப்புத்தான். அவனுடைய பர்ஸில் கூடிப்போனால் ஒரு ரூபாய் அல்லது இரண்டு ரூபாய்க்கு மேல் ஒருநாளும் இருக்காது. ஹோட்டல் பில்லோ நான்கு ரூபாய்க்கு மேல் ஆகியிருக்கும். அவனே கொடுக்கட்டும் என்று நளினி சும்மா இருந்து விட்டால், அவனுடைய மானம் போய்விடும். ஆனால்



இன்றுவரையில் அப்படி ஓர் இக்கட்டான நிலைக்கு அவனை அவள் ஆளாக்கவில்லை. அவளே முந்திக் கொண்டு பில்லுக்குப் பணத்தைக் கொடுத்து விடுவாள்.

''ஒரு நாள் கூட என்னைக் கொடுக்க விட மாட்டாய் போலிருக்கிறதே!'' என்று அங்கலாய்ப்பான்.

''அதனால் என்ன? தினமுமா இப்படிச் சேர்ந்து சாப்பிடுகிறோம்?'' என்பாள் நளினி.

நளினியின் தந்தை கஜேந்திரா மில்லின் அதிபர். அவருக்கு இரண்டே புத்திரிகள். நளினி இளையவள். வேறு ஆண் வாரிசு கிடையாது. ஒரு பெரிய பணக்காரரின் மகளோடு பழகும் வாய்ப்புக் கிடைத்ததை எண்ணிச் சம்பத் பெருமைப்பட்டுக் கொண்டான். அவனுக்கு அப்படி ஒரு வாய்ப்புக் கிடைத்ததில் மற்றப் பிரம்மச்சாரிவக்கீல்களுக்குப் பொறாமையும் கூட. அவர்கள் இருவரையும் காதலர்கள் என்றுகூட மற்றவர்கள் பேசத் தொடங்கி விட்டார்கள். அந்தப் பேச்சு, சம்பத்துக்கு உற்சாகத்தையும் தெம்பையும் அளித்தன. அவனுக்கு அவளைக் காதலிப்பதில் ஆட்சேபனை ஒன்றும் இல்லை. சிரித்துப் பேசுகிறான், அவளுக்காக ஹோட்டல் பில்லுக்குப் பணம் கொடுக்கிறான். நெருக்கமாகவே பழகுகிறான். ஆனால் காதலுக்கு இவை மட்டும் போதுமா? சில சமயங்களில் இரவில் ஒன்பது மணி வரையில் கூட ஆவுடையப்ப பிள்ளையின் அலுவலகத்தில் இருவரும் வழக்கு விஷயமாகச் சேர்ந்து படிக்கவும் எழுதவும் நேரும்போது, அவனுக்கு உடலில் பரபரப்புத் தோன்றும். பார்வையில் ஒருவிதக் கிறக்கம் தோன்ற அவளைப் பார்ப்பான். அவளோ படிப்பிலேயே கவனமாக இருந்தாளே தவிர, அவனுடைய தவிப்பையோ, பார்வையின் அர்த்தத்தையோ, புரிந்து கொண்டதாகக் காட்டிக் கொள்ளவே இல்லை. சில வேளைகளில் இருவரும் அருகருகே அமர்ந்திருந்தபோது ஏற்பட்ட ஸ்பரிசத்தைக்கூட அவள் இலட்சியம் செய்யவில்லை.

சம்பத் இரண்டு ஆண்டுகளாக ஆவுடையப்ப பிள்ளையிடம் ஜூனியராகப் பணியாற்றுகிறான். நளினி ஜூனியராகச் சேர்ந்து ஆறு மாதங்கள் இருக்கும். முதலில் நளினியைப் பற்றி அவன் அதிகமாக அக்கறை காட்டவில்லை. அவன் அக்கறை காட்டுமளவுக்கு அவளிடம் அபரிதமான அழகோ, கவர்ச்சியோ இல்லை. கறுப்பு நிறம். ஆனால் கட்டு உடல். உடை உடுத்தும் பாணியில்தான் கவர்ச்சியாகவும் நாகரிகமாகவும் தோற்றமளித்தாள். முதலில் அவளிடம் அலட்சியமாக இருந்த சம்பத், ஒருசில நாட்களில் அவள்மீது அக்கறை காட்டத் தொடங்கினான். அவன் அவள்மீது அக்கறை கொள்ள—காதலிக்கக் கூட — அவளைவிட அவளுடைய பணம் மிகவும் தூண்டியது.

சம்பத் கவர்ச்சியுடைய ஆணழகன். அவனை எவளும் இலகுவில் காதலித்து விடுவாள். அவனுடைய கலகலப்பான பேச்சும், கவர்ச்சியான உருவமும், போதை ஊட்டும் பார்வையும் அவனோடு படித்த பல மாணவிகளைக் கவர்ந்ததில் வியப்பில்லை. பலர் சட்டக் கல்லூரியில் அவனிடம் வலிய வந்து நட்புக் கொள்ள முயன்றபோது, அந்தச் சந்தர்ப்பங்களை அவன் நழுவ விட்டதேயில்லை. அவனிடம் போற்ற வேண்டியது என்னவென்றால், எவளோடு பழக நேர்ந்தாலும் தன்னுடைய பணத்துக்கு மட்டும் நஷ்டம் வராமல் காத்துக் கொள்ளும் திறமையைத்தான். கேவலம் இந்த நட்புக்காகப் பணத்தை இழக்க அவன் மனம் இடம் கொடுத்ததேயில்லை. எத்தனையோ சிநேகிதிகளிடம் கடனாகப் பணம் வாங்கியிருக்கிறான். திருப்பிக் கொடுத்துவிடப் போவதாக அடிக்கடி பயமுறுத்தியிருக்கிறான். அவன் வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடக் கூடாதே என்றுதான்அவனுடைய சிநேகிதிகள் பதறினார்கள். சட்டக் கல்லூரியை விட்டு அவன் ஊர் திரும்பியவுடன், சிநேகிதிகளையும் மறந்து விட்டான். அவர்களுடைய தொடர்பை என்றும் நீடித்துக் கொண்டிருக்கும் அளவுக்கு அவன் வசதி படைத்தவனுமல்ல, முட்டாளும் அல்ல. பாவம், அவனுடைய திருட்டுத்தனத்தைப் புரிந்துகொள்ளாத சில சிநேகிதிகள், இன்னும் அவனை நினைத்து ஏங்கிக் கொண்டிருக்கின்றனர். வலியக் கிடைத்த சந்தர்ப்பங்களைப் பொழுது போக்காகப் பயன்படுத்திக் கொண்டானே தவிர, எந்தப் பெண்ணையும் அவன் காதலித்ததும் இல்லை, பெண் மோகம் கொண்டு திரிந்ததும் இல்லை.


வாழ்க்கையில் அவனுடைய ஒரே குறிக்கோள், எவ்விதத்திலாவது பெரிய பணக்காரனாகி, காரும் பங்களாவுமாகப் பகட்டுடன் வாழ்க்கை நடத்த வேண்டும் என்பதுதான். ஆனால் அது எப்படி என்பதுதான் தெரியாமல் தத்தளித்துக் கொண்டிருந்தான்.

நடுத்தர வகுப்புக் குடும்பத்தில் ஐந்தாவது பிள்ளையாகப் பிறந்த சம்பத், எவ்வளவோ சங்கடங்களுக்கும் வறுமைக்கும் இடையே சட்டம் படித்து முடித்தான். சட்டத் தொழிலில் வாரி வாரிப் பணத்தை அள்ளலாம் என்றுதான் நினைத்திருந்தான். ஆனால் ஆவுடையப்ப பிள்ளையிடம் ஜூனியராக நீதிமன்றத்துக்குப் போகத் தொடங்கியதும் தன்னுடைய தவற்றை உணர்ந்தான். அவனைப் போன்ற எத்தனையோ இளம் வழக்கறிஞர்கள் ஒரு ரூபாய்க்கும் இரண்டு ரூபாய்க்கும் நோட்டீஸ் எழுதியதையும் இதுகூடக் கிடைக்காமல் ஒரு நேர வடைக்கும் காப்பிக்கும் கூட 'பெயில்' எடுக்க ஆஜர் ஆனதையும் கண்டபோது அதிர்ந்து விட்டான். நீதிமன்றத்தைச் சுற்றியிருந்த மாமரங்களின் நிழல்களில் சில ஏழை வழக்கறிஞர்கள் கடலை மிட்டாயைத் தின்று தண்ணீர் குடித்து வயிற்றை நிரப்பும் பரிதாபத்தைப் பார்த்தபோது தன்னுடைய நிலையும் அப்படி ஆகிவிடுமோ என்ற பயத்தில் உடல் நடுங்கினான்.

ஆவுடையப்ப பிள்ளை, அவனுக்கு மாதம் நானூறு ரூபாய்க்குக் குறையாமல் வரும்படி கிடைக்கும்படியாகப் பார்த்துக் கொண்டார். ஆரம்பத்தில் இருநூறு ரூபாய்தான் கிடைத்தது. இப்போது ஒரு வருஷமாக நானூறுக்குக் குறையாமல் கிடைக்கிறது. கேவலம் இந்த நானூறு ரூபாயா சம்பத்துடைய லட்சியம்? ஆனால் இந்த அளவுகூட வரும்படி இல்லாத

பஜாஜ் லைட்டிங் போட்டி

ரூ. 50,000 மதிப்புள்ள பரிசுகள் பெறுங்கள்.



Hymos SE-189 TAM

இங்கே வெட்டுக

நீங்கள் செய்யவேண்டியது:

- கீழ்க்கண்ட ஆறு வாக்கியங்கள் சரியா தப்பா என்று தீர்மானித்து, பக்கத்திலுள்ள கட்டத்தில் இவ்வாறு ✓ குறி இடவும்.
- பஜாஜ் லைட்டிங் பற்றி 10 வார்த்தைகளுக்கு மேற்படாமல் ஆங்கிலம் அல்லது இந்தியில் மட்டுமே ஒரு விளம்பர வாக்கியம் (slogan) எழுதுக.
- முழு நுழைவுத் தாளை அனுப்பவேண்டிய முகவரி: 'பஜாஜ் லைட்டிங் போட்டி', தபால் பை எண் 10153, பம்பாய்-400 001.
- உங்கள் நுழைவுத் தாள் எங்களுக்குக் கிடைத்ததும், பஜாஜ் லைட்டிங் பொருட்களுக்கான 10% கழிவுக் கூப்பன் உங்களுக்கு அனுப்பப்படும்.

நுழைவுக் கட்டணம் இல்லை
பங்குபெறும் ஒவ்வொருவருக்கும் பஜாஜ் லைட்டிங் பொருட்களுக்கான 10% கழிவுக் கூப்பன்!

வாக்கியங்கள்	சரி	தப்பு
1. கடைகளில் ப்ளூரஸெண்ட் ட்யூபுகளைக் காட்டிலும் சாதாரண பல்புகளே அதிக சிக்கனமானவை.		
2. பஜாஜ் பல்புகளும் ப்ளூரஸெண்ட் ட்யூபுகளும் உலகின் சிறந்த லாம்புகளுக்கு ஈடானவை.		
3. 230V மெயின்ஸ் சப்ளையில் 230V பல்ப உபயோகித்தாலே அதிகபட்ச திறனைப் பெறலாம்.		
4. பஜாஜ் நைட் லாம்பு ஒரு மணி நேரம் எரிந்தால் ஜீரோ பவர் செலவழிக்கிறது.		
5. உட்புறம் வெண் பூச்சு கொண்ட பஜாஜ் லாம்புக்கு 'மில்கி ஒயிட்' என்று பெயர்.		
6. பஜாஜ், லைட்டிங் துறையில் மட்டுமே ஈடுபட்டுள்ளார்கள்.		

ஆங்கிலம் அல்லது இந்தியில் மட்டுமே விளம்பர வாக்கியம் எழுதுக

கொட்டை எழுத்துக்களில் தெளிவாக எழுதுக:

பெயர் ---

முகவரி ---

ஆண்/பெண் ------------------ வயது ------------------

பரிசுகள்:

- 2 முதல் பரிசுகள்—பஜாஜ் ஸ்கூட்டர்
- 4 2-வது பரிசுகள்—பஜாஜ் குக்கிங் ரேஞ்ச்
- 20 3-வது பரிசுகள்—பஜாஜ் பஹார் டீலக்ஸ் டேபிள் ஃபேன்
- 100 ஆறுதல் பரிசுகள்—பஜாஜ் டீலக்ஸ் பிரெஷர் குக்கர் 5.5 லிட்.
- 600 பஜாஜ் நைட் லைட் லாம்புகள்—முதலில் கிடைத்த 600 நுழைவுத் தாள்களுக்கு

விதிகள்:

- பஜாஜ் எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட்டின் ஊழியர்கள், வியாபாரிகள், அவர்களது விளம்பர ஏஜென்ஸிகள் மற்றும் உறவினர்கள் நீங்கலாக இந்தியாவிலுள்ள அனைவரும் இப் போட்டியில் பங்கு பெறலாம்.
- ஒரு நபர் ஒரு நுழைவுத் தாள் மட்டுமே அனுப்ப உரிமை உண்டு.
- தபாலில் தவறிய, சேதமான அல்லது தாமதித்த நுழைவுத் தாள்களுக்கு நாம் பொறுப்பேற்க முடியாது.
- சிறந்த வாக்கியத்தைத் தேர்ந்தெடுப்பதில் நீதிபதிகளின் தீர்ப்பே முடிவானது. [illegible]
- வெற்றி பெற்றவர்கள் தபாலில் அறிவிக்கப்படுவர்.

முடிவு தேதி: 31 அக்டோபர் 1974

பஜாஜ் -1938 முதல் ஒளித் துறையில் ஒப்பற்றவர்கள்

வக்கீல்களைப் பார்த்தபோது ஓரளவு மனச் சாந்தி கிட்டியது. ஆவுடையப்ப பிள்ளை மாதிரி மாதம் நாலாயிரம் ரூபாய்க்குக் குறையாமல் வரும்படி வரக்கூடிய அளவுக்குத் தனக்கு யோகம் வராவிட்டாலும், குறைந்தது ஆயிரம் ரூபாயாவது சம்பாத்தியம் செய்யவில்லையென்றால், இந்த வக்கீல் தொழிலுக்குத்தான் என்ன மதிப்பு என்று எண்ணிக் கொண்டான். சில மாதங்களில் சம்பத்துக்கு ஐந்நூறு ரூபாய்கூடக்கிடைக்கும். அதெல்லாம் அவனைத் திருப்திப்படுத்தப் போதாது.

இந்தச் சமயத்தில்தான் நளினி ஆவுடையப்ப பிள்ளையிடம் ஜூனியராகச் சேர்ந்தாள். அவளுடைய கறுப்பு நிறத்தை கண்டதும், சம்பத் முகத்தைச் சுளித்தான். ஆனால் அவள் சிரிக்கும்போது கொஞ்சம் கவர்ச்சியாக இருப்பது போலத் தோன்றியது. ஆரம்பத்தில் அலட்சியமாக இருந்தவன், அவள் காரில் வந்து இறங்கியதையும், பர்ஸில் எப்போதும் நிறையப் பணம் வைத்திருந்ததையும் காண நேரிட்டபோது, அவள்மீது அக்கறை காட்டத் தொடங்கினான். அவள் ஒரு தொழிலதிபரின் மகள் என்பதை அறிந்தபிறகு மிகுந்த அக்கறையோடு வழக்குமன்ற நடைமுறைகளையும், சட்ட நுணுக்கங்களையும் அவளுக்குக் கற்றுக் கொடுத்தான்.

அவள் நீதிமன்றத்துக்கு வருவது வெறும் பொழுதுபோக்குக்குத்தான். ஆனால் சம்பத்துக்கு அது வாழ்க்கைப் பிரச்னை.

அல்லும் பகலும் பாடுபட்டும் மாதம் நாநூறு ரூபாய்க்கு மேல் வரும்படி வரவில்லையே என்று தவித்துக் கொண்டிருந்த சம்பத்தின் மனத்தில் பளிச்சென்று ஓர் எண்ணம் உதித்தது. ஒரே நாளில் திடீரென்று பணக்காரனாகிவிடும் திட்டம் அவனுள் உருவாகியது. கார், பங்களா, படாடோப வாழ்க்கை எல்லாமே கிடைத்துவிடும். கேவலம் கொலைகாரனும் திருடனும் கொடுக்கும் பணத்தைக் கொண்டுதான் வாழ வேண்டும் என்னும் நிர்ப்பந்தம் இருக்காது. காரில் போய் நீதிமன்றத்தில் இறங்கும்போது மற்ற வக்கீல்கள் பொறாமையால் விழி பிதுங்கத் தன்னை எப்படிப் பார்ப்பார்கள் என்பதைக் கற்பனை செய்தபோது, அவன் மனம் ஆனந்தத்தால் துள்ளியது. ஆனால் தன்னுடைய திட்டம் நிறைவேறுமா என்ற சந்தேகம் மனத்தை அரித்துக் கொண்டிருந்தது. நளினியை மணந்து கொள்வது என்பதுதான் அவனுடைய திட்டம். ஆனால் அவள் சம்மதிப்பாளா? ஜாதியைப் பொறுத்த வரையில் எந்தத் தடையும் இல்லை. ஆனால் அந்தஸ்து....!

தனக்குள்ள தகுதிகளைப் பற்றி எண்ணிப் பார்த்தான். — நல்ல அழகு இருக்கிறது. பிறகு....பிறகு...? வேறென்ன இருக்கிறது? இதற்கு மேல் தனக்கு என்ன தகுதி இருக்கிறது என்பதைப் பற்றி எண்ணி எண்ணிப் பார்த்தான். ஒன்றும் புலப்படவில்லை. வருமானம்? சே, மாதம் நாநூறு ரூபாய்! இதைக் கேட்டாலே ஒருவனும் பெண் தரமாட்டான். ஆவுடையப்ப பிள்ளையின் ஜூனியராக இருப்பது ஒரு தகுதிதான். ஆனால் இதனால் அவனுடைய தொழில் தரம் உயர்ந்து, வருமானம் அதிகரிப்பதற்குள் கிழவனாகிவிடுவானே?

தன்னுடைய தகுதி இன்மையை எண்ணித் தன்மீதே கோபம் கொண்டான்.

பணத்தின் மீது அவன் எவ்வளவு தூரம் அக்கறையும் வெறியும் கொண்டிருந்தான் என்பதை ஆவுடையப்ப பிள்ளை ஒரு நாள் உணர்ந்தபோது திகைத்தார்.

ஒரு நாள் வழக்கு விஷயமாக ஆவுடையப்ப பிள்ளையைத் தேடி ஒருவன் வந்தான். கஞ்சா வைத்திருந்ததாக அவனுடைய தம்பியைப் போலீஸார் பிடித்துக்கொண்டு போய் விட்டார்கள் என்றும், அவனை பெயிலில் வெளியே விட ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கூறினான். அது எளிய காரியமாதலால் அவனைச் சம்பத்திடம் அனுப்பினார்.

சம்பத், வழக்கு விவரம் முழுவதையும் கேட்டுக் கொண்டு, 'பெயில்' விண்ணப்பம் ஒன்றும் எழுதி முடித்தான். வந்தவன் சம்பத்திடம் பத்து ரூபாய் நோட்டை நீட்டினான். அதைக் கண்டதும் சம்பத்தின் கண்கள் கோபத்தால் சிவந்தன.

"என்ன...?"

"சாமி, நீங்கதான் தயவு பண்ணணும். இப்போது பத்து ரூபாய் வச்சுக்குங்க. பிறகு ஐந்து ரூபாய் தருகிறேன்" என்றான்.



மறதி மன்னர்கள்!

சர் வால்டர் ஸ்காட்டுக்குக் கொஞ்சங்கூட ஞாபக சக்தியே கிடையாதாம். கவி பைரன் எழுதினார் என்று நினைத்துக்கொண்டு, சில கவிதைகளை அவர் மிகவும் புகழ்ந்து பேசியிருக்கிறாராம் - அவைகளை இயற்றியது தாமேதான் என்பதை மறந்தவராக!

டாக்டர் ஆடம் ஸ்மித் ஒரு தடவை டீ போட்டுக் கொண்டிருந்தார். இரு ரொட்டித் துண்டுகளையெடுத்து மறந்து போய்த் தேநீர்ப் பாத்திரத்துக்குள் போட்டுக் கொதிக்க வைத்துக் குவளையில் ஊற்றி அருந்தினார். தம்மோடு இருந்தவர்களை நோக்கி, "வாழ்க்கையிலேயே இவ்வளவு மோசமான டீ நான் அருந்தியதேயில்லை!" என்று சொன்னார். பாவம்! அவர் டீ போடுவதற்குப் பதிலாக ரொட்டித் துண்டுகளை வேக வைத்துக் குடித்திருக்கிறார் என்பது அவர்கள் சொன்னபிறகுதான் அவருக்குத் தெரியுமாம்!

புகழ்பெற்ற திரைப்பட இயக்குநர் சர் கேரல் ரீட் ஒருமுறை ஆழமான நீருக்குள் இறங்கி ஒரு படத்தை இயக்கிக்கொண்டிருந்தார். அவர் உதவியாளர் கத்தினார்: "ஐயோ...உங்கள் வாட்ச் நனைகிறது!" அவர் உடனே, "ரொம்ப நன்றி" என்றவராக, அதைக் கழற்றி ஏற்கெனவே தொப்பலாய் நனைந்திருந்த பாக்கெட்டுக்குள் 'பத்திரமாக' வைத்துக்கொண்டார்!

- நன்றி: 'மீரர்' - உதகை நா. மனோகரன்


[நீங்கள் ஒரு ஞாபகமறதிக்காரரா? ஞாபக மறதியாக நீங்கள் செய்த ஒரு சிரிப்புக்குரிய காரியத்தை எழுதி அனுப்புங்களேன்! எல்லாரும் படித்து ரசிக்கலாம்! ஆ-ர்.]

ஒரு ஜோக்!

உலகப் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க இந்தியா யோசனை கூறியிருக்கிறது.

-ரேடியோ தலைப்புச் செய்தி (6-7-74)


தவளை தரும் உதவி!



"யானை குழியில் விழும்போது தவளைகூடப் பின்னாலிருந்து உதை ஓர் கொடுக்கும்!"

- வங்காளப் பழமொழி

சத்தியத்துக்கும் பெயர்போன அசோக சக்கரம் ரூபாய் நோட்டில் இருக்கிறது. ஆனால் 30 பைசா மதிப்புள்ள அந்த நோட்டை எதற்கு அசத்தியமாக ஒரு ரூபாய் என்று சொல்ல வேண்டும்? - லயன்



இந்தியா அணுவெடிச் சோதனை நடத்தியதற்கு 'நிவாஜு' பத்திரிகை போட்டிருந்த கார்ட்டூன்! -பாபு

"பத்துக்கும் ஐந்துக்கும் இங்கே பெயில் எடுக்கிற வழக்கமில்லை" என்றான் சம்பத், எரிச்சலுடன்.

"இதற்கு முன்னே ஒரு பெயிலுக்கு மேலத் தெரு வக்கீலுக்குப் பத்து ரூபாய் தான் கொடுத்தேன்..."

இதைக் கேட்டதும் சம்பத், எழுதியிருந்த விண்ணப்பத்தாளைச் சுக்குநூறாகக் கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டான்.

"இந்தாய்யா, கோர்ட்டுப்பக்கம் போனால் மாமரத்தடியிலே கடலை மிட்டாய் தின்று கொண்டு எவனாவது ஒரு வக்கீல் நிற்பான். அவனைப் போய்ப் பிடி. இரண்டு ரூபாய்க்குக் கூட பெயில் எடுக்க வருவான் போய்யா... போ!" என்று விரட்டினான்.

அந்த ஆசாமி அதிர்ந்து விட்டான். முகத்தைத் தொங்க விட்டுக் கொண்டே வெளியேறினான்.

"பெயில் எடுக்க வந்து விட்டான். பெயில் எடுக்க ஐம்பது ரூபாய்கூடக் கொடுக்க வக்கில்லை என்றால், ஏன் கஞ்சா வியாபாரம் பண்ணுகிறார்கள்?" — இரைந்தான் சம்பத்.

இவ்வளவையும் கேட்டுக் கொண்டு உள் பக்கத்து அறையில் அமர்ந்திருந்த ஆவுடையப்ப பிள்ளை, எழுந்து வெளியே வந்தார்.

"என்ன சம்பத், ஆளைவிரட்டி விட்டாய்?" என்றார்.

"பின்னே என்ன ஸார்; இந்த ஆபீஸுக்கு வந்துவிட்டுப் பத்து ரூபாயை நீட்டுகிறான்" என்றான் சம்பத், கோபத்துடன்.

"பாவம், பணம் இல்லையோ, என்னவோ?"

"அதற்கு நாமா பழி?"

"வந்த கட்சிக்காரனை விட்டுவிடக் கூடாதப்பா. நீ இளம் வயசு. தொழிலுக்குப் புதிது."

"சார்! நமக்கும் தரம் உண்டு. நம்முடைய ஆபீஸில் பத்து ரூபாய்க்கும் பெயில் எடுக்கப் போவோம் என்று வெளியே தெரிந்தால் நமக்குத்தானே கேவலம்?"

"அது சரி, அதற்காக மாமரத்தடியில் கடலை மிட்டாய் தின்கிறவர்களை ஏன் வம்புக்கு இழுக்கிறாய்?" என்று விசனத்துடன் கேட்டுச் சிரித்தார்.

"அந்த மாதிரிச் சிலர் இருக்கப் போய்த் தான் இந்தத் தொழிலே இவ்வளவு சீரழிந்து விட்டது" என்றான் சம்பத் படபடப்புடன்.

"பாவம், அவர்களுடைய அதிர்ஷ்டம் அப்படி" என்றார் ஆவுடையப்ப பிள்ளை அனுதாபத்துடன்.

"இப்படி ஐந்தும், பத்தும் வாங்கினால், என்றைக்கு சார், சம்பாத்தியம் பண்ணுவது; வக்கீல் தொழிலை நடத்தி ஐந்து ஆண்டுகளுக்குள் ஒரு கார் வாங்கும் தகுதி இல்லை என்றால், இது தொழிலா சார்?" என்று வேதனையோடு சம்பத் கூறியதைக் கேட்டு ஆவுடையப்ப பிள்ளை சிரித்தார். சம்பத்தினுடைய ஆசையை எண்ணி வியந்தார்.

சம்பத்தினுடைய ஆசையில் தவறு ஒன்றும் இல்லை. ஆனால் அது நிறைவேறுவது எப்படி? இப்போது நிறைவேறும் சந்தர்ப்பம் கிடைத்திருப்பதாக எண்ணினான் சம்பத். நளினி அவனுக்குக் கிடைத்து விட்டால், எல்லாம் கிடைத்துவிடும். அவளை எப்படி அடைவது? அவளோடு பேசுகிறான், சிரிக்கிறான், அவளுக்காகப் பணம்கூடச் செலவழிக்கிறான். அவளை விரும்புகிறானா இல்லையா என்பதை மட்டும் கண்டுபிடிக்க முடியவில்லை.

அவள் அவனை விரும்பும்படி செய்ய அவன் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தான். பெண்களோடு பழகி, அவர்களுடைய அபிமானத்தைப் பெறும் கலையில் அவனுக்குத் தேர்ச்சி உண்டு என்றாலும், அவனுடைய முயற்சி எதுவும் நளினியிடம் பலிக்கவில்லை என்று தான் நினைத்தான். ஒருவேளை மனத்தில் உள்ள எண்ணங்களை வெளியே தெரியாதபடி மறைத்துக் கொண்டிருக்கிறாளோ என்றுகூடச் சந்தேகப்பட்டான். ஒன்று நிச்சயமாகத் தெரிந்தது. அவனை அவள் வெறுக்கவில்லை. அவனுடைய பேச்சையும் நட்பையும் அவள் விரும்பினாள். சில சமயம் அவன் ஏதாவதொரு சாக்கில் அவளைத் தீண்டியபோது கூட அவள், கோபமோ, வெறுப்போ அடைந்ததில்லை. ஆனால் அவன் எதிர்பார்த்தது இவற்றுக்கெல்லாம் மேலான ஒருவித நெருக்கத்தை. அவளை அவன் மணக்க விரும்பும் அளவுக்கு அவள் மனம் அவன்பால் ஈடுபட வேண்டும். அதற்கு என்ன செய்வது? அதைப் பற்றித் தான் சிந்தித்துக் குழம்பிக் கொண்டிருந்தான் சம்பத். (தொடரும்)

"அம்மா! சிப்பாய்ப் பொம்மை வாங்கித் தா, அம்மா!"

அம்மா அவன் சொன்ன சின்னப் பொம்மையைப் பார்த்தாள். அதன் உடையில் உள்ள கம்பீரமும் அது நின்ற தோரணையும் உள்ள மிடுக்கும், அதன் பார்வையில் உள்ள வீரமும் அவளையே மயங்க வைத்தன. 'நவராத்திரி கொலுவுக்கு இருந்துவிட்டுப் போகட்டும்!' என்று அதை வாங்கி விட்டாள்.

பொம்மை வீட்டுக்கு வந்த பின், சீனுவின் பெரும் பொழுது அந்தப் பொம்மையுடனே கழிந்தது. அறைக் கதவைத் தாழிட்டுக் கொண்டு அதே போல் உடை உடுத்திக் கண்ணாடி முன்னால் போய் நிற்பான். தன்னையும் பொம்மையையும் மாறி மாறிப் பார்த்துக் கொள்ளுவான். அதைப் போலவே மிடுக்காக நிற்க முயல்வான். அதைப் போலவே பார்வையில் வீரத்தைத் தேக்க முயல்வான்.

"அம்மா! நான் பெரியவனாகப் போனப்புறம் சிப்பாயாகத்தான் ஆகப் போகிறேன்" என்று தன் மனத்தாசையை அவளிடமே கூறி மகிழ்வான் சீனு.

குஞ்சு விளையாட்டு!

ராம. வீழிநாதன்

குண்டு வெடித்து இரு சிறுவர்கள் சாவு

நாகபுரி, ஜுலை, 2— பந்து என்று நினைத்து சிறுவர்கள் விளையாடிய பொருள், திடீரென்று வெடித்தது. இதில் இரு சிறுவர்கள் மாண்டனர். மற்றொருவன் படுகாயமடைந்தான்.

2

"அம்மா! சினிமாப் பார்க்கக் காசு கொடுத்தால்தான் ஆச்சு! இல்லா விட்டால் சாப்பிட மாட்டேன்!"

செல்லாயியின் செல்லப் பிள்ளை முத்து அடம் பிடித்தான்.

"இப்படி அடம் பிடித்தால் நான் என்ன செய்வது? வயிற்றை வாடவிடக் கூடாது. இப்போ நீ சாப்பிட்டுடு. அப்பா வந்ததும் காசு கேட்டு வாங்கிக்கிட்டுக் குஷாலா சினிமா போயிட்டு வா. நான் வேண்டாங்கலே!" என்றாள் செல்லாயி.

செல்லாயியும் அவள் கணவன் மாரியப்பனும் எத்தனையோ வேண்டிப் பெற்ற மகன் முத்து. அதனால் பெற்றோர்களிடம் அவனுக்குச் சலுகை அதிகம். அதைப் பயன்படுத்திக் கொண்டு அடம் பிடித்துக் கொண்டான். அவனைச் சமாதானப்படுத்துவது செல்லாயிக்கு முடியாத காரியம் ஆகிவிட்டது. விசித்தபடியே சாப்பிடாமல் தூங்கி விட்டான் முத்து. தூங்கினாலும் விசிப்பு மட்டும் நிற்கவில்லை.

மாரியப்பன் வீட்டுக்கு வந்தபொழுது இரவு பத்து மணி. முத்து உணவு அருந்தாமல் தூங்கிவிட்டதைக் கேட்டு மனம் வருந்தினான்.

மாரியப்பனின் தொழில் ரிக்ஷா இழுப்பது. எத்தனையோ வேலைகளுக்கு முயன்றும் கிடைக்காமற் போகவே, எந்தத் தொழிலும் ஈனம் இல்லை என்று எண்ணி இந்தத் தொழிலை மேற்கொண்டான்.

"குழந்தை கேட்டால் கொடுத்திருக்கக் கூடாதா? அவன் மனத்தை உடைப்பானேன்?" என்றான் செல்லாயியிடம்.

"நல்ல சினிமாவாயிருந்து பார்க்கணும். கண்டது — கெட்டதுகளைப் பார்த்துக் கெட்டுப் போகக் கூடாதே! அதனால் நீங்கள் வந்ததும் உங்களையே அழைத்துக் கொண்டு போகச் சொல்லணும்னு இருந்தேன்!" என்றாள் அவள்.

மாரியப்பனுக்கு மனம் கேட்கவில்லை. முத்துவை எழுப்பிக் கையில் காசை வைத்து அவன் நாளை சினிமா பார்க்கலாம் என்றும் ஆனால் இந்தச் சினிமாவைத்தான் பார்க்கலாம் என்று ஒரு குறிப்பிட்ட படத்தைப் பற்றிக் கூறிச் சாப்பிட வைத்தபின்தான் அவனுக்கு மனச்சுமை இறங்கினாற்போல் இருந்தது.

3

பள்ளியில் சீனுவைச் சந்தித்த பொழுது முத்து வாய் எல்லாம் பல்லாகச் சொன்னான்: "நேற்று நாம் பேசிக் கொண்டபடி இன்று

சினிமா போகலாமடா! ஆகாத்தியம் பண்ணி அப்பாவிடமிருந்து சினிமாவுக்குக் காசு வாங்கி வந்துவிட்டேன். ஆனால் அவர் சொல்கிற சினிமாவில் அடி — தடி கிடையாதடா!''

''போடா, போ! பணம் வாங்கிக் கொண்டு வந்துவிட்டாய் அல்லவா? நாம் நம்ம விருப்பத்துக்குச்



சினிமாவுக்குப் போவோம், கவலைப்படாதே!'' என்றான் சீனு.

சீனுவும் முத்துவும் ஒரே வகுப்பு மாணவர்கள். இருவருடைய பொருளாதார நிலையில் ஏற்றத் தாழ்வு இருந்தாலும் சிறுவர்களின் நட்பு ஏற்றத் தாழ்வு பார்ப்பதில்லையே!

அன்று சீனு போட்ட திட்டப்படியே சண்டைப் படம் பார்த்தார்கள்.

அந்தக் கதையில் போர்வீரன் கதாநாயகன். ஆனால் கதைக்குத் தேவையில்லாத வில்லனும் உண்டு. மக்களை மகிழ்விப்பதற்கென்று அடி — தடி, கும்மாங் குத்து, வாள் வீச்சு, துப்பாக்கிச் சூடு எல்லாவற்றையுமே புகுத்திப் 'போர்' அடித்திருந்தார்கள்.

சீனுவுக்குப் போர்வீரனின் வீரத்தைப் பார்ப்பதில் ஏக ஆர்வம். அதற்கு மாறாக முத்துவுக்கு வில்லன் கொடுத்த அடிகளிலும் உதைகளிலும் அலாதி பிரேமை.

''டுஷிங்! டுஷிங்!' 'என்ன வாள் வீச்சு!'— அக மகிழ்ந்து போனான் முத்து. கையையும் காலையும் ஆட்டிக் கொண்டு வாட்போர் புரிபவனைப் போல் பாவனை செய்து கொண்டே வீட்டுக்கு வந்தவன், ''அம்மா! நானும் வாள் வீசக் கற்றுக் கொள்ளப் போகிறேன். குத்துச் சண்டை கற்றுக் கொள்ளப் போகிறேன். அப்புறம் படத்தில் வில்லனாக 'ஆக்ட்' பண்ணப் போகிறேன். பார்க்கிறவங்களெல்லாம் கைதட்டுவாங்க, விசில் அடிப்பாங்க. பெரிய தமாஷாயிருக்கும்'' என்று ஆசையை வெளியிட்டான். அது மட்டும் அல்ல; தான் பார்த்ததை அப்படியே நடித்தும் காட்டினான்.

செல்லாயிக்கு ஒரே மகிழ்ச்சி. தன் மகன் ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் பெரிய நடிகனாகி விடுவான். கார் வரும், பெரிய பங்களா இருக்கும். ஆனந்தமான வாழ்க்கை வாழலாம் என்றெல்லாம் கனவு கண்டாள்.

4

மாறிமாறி இருவரும் வீட்டிலே ஏமாற்றியும் பொய் சொல்லியும் பணம் பண்ணினார்கள். பல சண்டை சினிமாக்களைப் பார்த்தார்கள்.

''சீனு! நீ சிப்பாய் ஆக ஆசைப்படுகிறாய். நான் சினிமா நடிகனாக ஆசைப்படுகிறேன். இரண்டு பேருக்குமே சண்டை போடத் தெரிந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. நாம் இருவரும் சண்டை போடக் கற்றுக் கொண்டால் என்ன?'' என்று கேட்டான் முத்து.

''வேண்டாமடா ! சண்டை நம் சிநேகத்துக்குச் சத்துருவாகப் போய்விடுமடா !'' என்றான் சீனு.

''அதெல்லாம் ஆகாதடா. விளையாட்டுக் குத்தானே சண்டை போடுகிறோம்!'' என்றான் முத்து.

கட்டிப் புரள்வதில் தொடங்கிய அந்தச் சண்டை வாள் போர் வரைக்கும் முன்னேறியது.

வாளுக்கு இருவரும் எங்கே போவார்கள்? சீனு வீட்டில் யாருக்கும் தெரியாமல் எவர் சில்வர் தோசை திருப்பியை எடுத்துக் கொண்டான். முத்து தன் வீட்டில் கிடந்த துருப் பிடித்த சூரிக் கத்தியை எடுத்துக் கொண்டான்.

இருவரும் தாங்கள் தேடிப் பிடித்திருந்த இரகசிய இடத்துக்குச் சென்றனர். அநுபவமற்ற கரங்கள் எப்படியெல்லாமோ தோசை திருப்பியையும் கத்தியையும் வைத்துக் கொண்டு விளையாடின. விளையாட்டு சூடு பிடித்த பொழுது விளையாட்டு என்பது மறந்து விட்டது.

தோசை திருப்பியால் சீனு வேகமாகக் குத்திவிட்டான். காயம் படும் என்று தெரிந்திருந்தால், அவன் அப்படிச் செய்திருக்கமாட்டான். விளையாட்டு மும்முரத்தில் அது மறந்து விட்டது. முத்துவின் நெற்றியிலிருந்து ரத்தம் பீறிட்டுக் கொண்டு வரவே, சீனு அயர்ந்துவிட்டான். தன் நெற்றியிலிருந்து ரத்தம் வழிவதைக் கண்ட முத்துவுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. சீனு தன்னை வேண்டுமென்றே குத்தி விட்டதாகத் தீர்மானித்துத் துருப் பிடித்த சூரிக் கத்தியால் தோசை திருப்பிப் பிடித்திருந்த சீனுவின் கையில் ஓங்கி ஒரு போடு போட்டுவிட்டான்.

இரண்டு பேரும் ரத்த பலி வாங்கிக் கொண்ட பின்னர்தான் சுய உணர்வு பெற்றனர்.

''மன்னித்துவிடு, சீனு ! இனி நாம் விளையாட்டுக்குக்கூடக் கத்தி எடுக்க வேண்டாம். உனக்கும் எனக்கும் ஏற்பட்டிருப்பது சின்னக் காயம்தான். வீட்டில் ஏதாவது சொல்லிச் சமாளித்துக் கொள்ளுவோம். நீயும் நானும் சண்டை போட்டுக் கொண்டதாகக் காட்டிக் கொள்ள வேண்டாம் !'' என்றான் முத்து.

சீனுவுக்கு அவன் சொல்வது சரியாகவே பட்டது. இருந்தாலும் முத்துவின் நெற்றியில் வழிந்த ரத்தத்தைப் பார்த்துக் கிலி பிடித்துக் கொண்டது. என்ன ஆகுமோ, ஏது ஆகுமோ என்று அஞ்சியவனும் வீட்டுக்கு வந்தவன் விளக்குப் போடாமலே அறைக்குள் பூனை போல் நுழைந்தான். ஆசையோடு வாங்கி வைத்திருந்த சிப்பாயின் பொம்மை அவன் காலில் இடறி உருண்டது.

விளக்கைப் போட்டுப் பார்த்தான். அது கை ஒடிந்து கால் ஒடிந்து போய்க் கிடந்தது.

'வேணும், நல்லா வேணும், இந்தச் சிப்பாய்ப் பொம்மைக்கு! இதனால்தானே கத்திச் சண்டைக்கு ஆசை வந்து முத்துவைக் காயப்படுத்திவிட்டேன். பாவம், அவனுக்கு எத்தனை பெரிய காயம் !' என்று எண்ணினான்.

ஓசை கேட்டு அங்கே வந்த அவன் அம்மா உடைந்த பொம்மையைக் கண்டு, ஆத்திரம் தீர, ''அட, கடன்காரா ! ஒரு சாமானையும் உனக்கு உருப்படியாக வைச்சிக்கத் தெரியலையேடா !'' என்று திட்டித் தீர்த்தாள். அவனிடம் கோபித்துக் கொண்டு சாப்பிடாமலே படுத்தவன்தான் சீனு.

இரவு என்னவெல்லாமோ பயங்கரக் கனவுகள் முத்துவைப் பற்றி. '' நான் குத்தவில்லையம்மா! இனிமேல் குத்தமாட்டேன், அம்மா !'' என்று உள்ளப் பொருமலை உளறிக் கொட்டினான்.

''என்னடா, பேத்தறே ?'' என்று கேட்டு அவன் அம்மா தொட்டுப் பார்த்தாள். உடம்பு நெருப்பாகக் கொதித்தது. பொழுது விடிந்து டாக்டரிடம் காட்டலாம் என்று எண்ணினாள். பொழுது விடிவதற்குள் அவன் உடம்பு அதிகமாகிவிட்டது.

5

'சீனு எவ்வளவு நல்லவன்? ஏதோ தவறிப் போய் நெற்றியிலே குத்திவிட்டான் தோசை திருப்பியினால். அதற்காகக் கத்தியினால் அவன் கையைக் காயப்படுத்தி விட்டேனே, இது நியாயமா?' என்று எண்ணிய முத்துவுக்கு அவன் பார்த்த படங்களில் ஒன்று நினைவு வந்தது. 'துருப் பிடித்த தகரம் காலில் ஏறியதனால் ஒரு பையன் எப்படி வில்லாக வளைந்து துடித்துச் செத்தான் அந்தப் படத்தில்?' அந்தக் காட்சி கண் முன் தோன்றவே துடிதுடித்துப் போனான். என் கத்தி துருப் பிடித்த கத்தியாயிற்றே ! சீனுவுக்கும் அது மாதிரி ஆகிவிட்டால்...? நினைத்த பொழுது நெஞ்சை என்னவோ செய்தது. இனி மட்டமான சினிமாக்களைப் பார்ப்பதில்லை. சினிமாவில் நடிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டு இந்த மாதிரிக் காரியங்களில் இறங்குவதும் இல்லை என்று உறுதி பூண்டான்.

இரண்டு நாட்களாகியும் சீனு பள்ளிக்கூடம் வராமற் போகவே, முத்துவுக்குக் கவலையாகிவிட்டது. அவன் வீட்டுக்குப் போய்ப் பார்த்து வரலாம் என்று புறப்பட்டான். இருவரும் பள்ளிக்கூடத்தில் நெருங்கிப் பழகினாலும், ஒருவர் வீட்டுக்கு ஒருவர் அதிகம் போனதில்லை. ஆனால் வீடு இருக்கும் இடம் தெரியும்.


முத்து போனபொழுது வாசலில் ஒரே கூட்டம். சிலர் பேசிக் கொண்டிருந்தார்கள். 'கடைசி வரைக்கும் முத்து எப்படி இருக்கிறான், முத்து எப்படி இருக்கிறான்?' என்று கேட்டுக் கொண்டேயிருந்தான். யார் அந்த முத்துவோ தெரியவில்லை '' என்று அவர்கள் சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்டான். அவனுக்கு அழுகை அழுகையாக வந்தது.

'' 'அட, கடன்காரா ! ஒரு சாமானையும் உனக்கு உருப்படியாக வச்சிக்கத் தெரியலையேடா !' என்று சொன்னேனே பாவி ! உன்னைப் போன்ற அற்புதமான பொருளை இந்தக் கடன்காரிக்கு வச்சிக்கத் தெரியலையேடா !'' என்று சீனுவின் அம்மா அழுது புலம்பிக் கொண்டிருந்ததைக் கேட்ட முத்து சீனுவின் சடலத்தைப் பார்க்கவே கூசினான். தன்னால்தானே சீனுவுக்கு இந்தக் கதி என்று எண்ணியவனின் கண்களை இருட்டிக்கொண்டு வந்தது.

தேநீரின் பல சுவைகளும் மிளிர்ந்து மணப்பது



ஒரு கோப்பை லிப்டன் ஹிமாலயன் கோல்டன் டஸ்ட் டீயிலே!



பல்வேறு தேநீர் ரசிகர்களைத் திருப்திப்படுத்த வேண்டுமா? எல்லோரும் விரும்பும் லிப்டன் ஹிமாலயன் கோல்டன் டஸ்ட் வகை அளியுங்கள். சிறப்பான சுவையும், செறிவும் மிளிர்ந்து மணப்பது. சிக்கனமானதும் கூட.

லிப்டன் ஹிமாலயன் கோல்டன் டஸ்ட் மனதை மகிழ்விக்கும் தேநீர்

LHGC-13 TAM



நம்மைச் சுற்றி

மகனே! நீ வாழ்க!

பி.வி.ஆர்.

எனக்கு நீண்ட காலமாகத் தெரிந்த ஒருவர். படித்தவர். வசதி படைத்தவர். அவர் ஒவ்வோர் ஆண்டும் தமது பெற்றோருடைய சிராத்த தினங்களில் செலுத்தும் கவனத்தையும் சிரத்தையையும் பார்க்கும்போது சிரிப்பை விட அவர்மீது அனுதாபம் தான் உண்டாகிறது. இருபத்தி நாலு வயதில் கல்யாணமானதிலிருந்து அம்மாவையும் அப்பாவையும் பறிகொடுத்த ஐம்பதாவது வயது வரை பெற்றோர்களுடன் சேர்ந்து வாழ்ந்ததில்லை. பேரக் குழந்தைகளைக் கொஞ்ச வேண்டும் என்று வந்த அம்மாவை ஒரு வாரம் கூட வைத்துக் கொள்ளவில்லை. தில்லிக்குத் தங்கை வீட்டுக்கு அனுப்பினார். வெய்யிலிலும் குளிரிலும் அவள் அவதிப்பட்டுக் கடைசியில் யமுனைக் கரையிலேயே சாம்பலானாள். கொள்ளியை அள்ளிப் போடக் கூடப் பிள்ளையால் சமயத்தில் செல்ல முடியவில்லை. தகப்பனார் தரித்திரத்திலேயே உழன்றவர், கடனிலேயே பெரும் பகுதியைக் கழித்தவர். பிள்ளையைப் பாடுபட்டுப் படிக்க வைத்து, ஒரு பெரிய மனிதரின் காலைப் பிடித்து ஒரு கம்பெனியில் வேலையையும் வாங்கிக் கொடுத்தார். இந்த உதவியை மூன்றும் மனிதன் ஒருவனுக்குச் செய்திருந்தால் கூட அவருடைய நெஞ்சு வேகும். நன்றி கெட்ட பிள்ளைக்குச் செய்தார். அவன் அப்பனுக்கு மாதா மாதம் பணம்கூட அனுப்பவில்லை. ஒரு சின்ன ஊரில் ஒரு ஜவுளிக் கடையில் ஐம்பது ரூபாய் சம்பளத்துக்குக் கணக்கு எழுதிக்கொண்டே வந்து அவர் கடைசியில் காவிரிக் கரையில் சாம்பலானார்.


ஐம்பது வயதில் என் நண்பருக்கு இருக்க வீடு, அனுபவிக்க கார், பிரிஜ், பொழுது போக கிளப், கொஞ்ச அல்சேஷியன் எல்லாம் இருந்தன. ஆனால் பெற்றவர்களை மறந்து எல்லாம் அனுபவித்தார். மனைவிகூடக் கொஞ்சம் மனிதத் தன்மையுடன் இருந்ததாகக் கேள்வி. அவருடைய குழந்தைகள் தாய் வழிப் பாட்டி, தாத்தாவுடன் உறவாடுகிறார்கள். இந்தப் புண்ணியவானுடைய வீட்டு ஹாலில் அம்மா அப்பாவின் படங்கள் பிரம்மாண்டமாகத் தொங்குகின்றன. சிராத்தங்கள் சம்பிரமமாக நடக்கின்றன. சாஸ்திரிகளுக்குக் கொடுக்கும் [illegible], தட்சணைகளில் ஒரு சிறு பங்கையாவது நண்பர் அப்பாவுக்கு அவர் உயிரோடு இருந்த போது கொடுத்திருந்தால் போதும், அவர் பூரித்துப் போயிருப்பார். அவர் இருக்கும்போது அவரை உதாசீனம் செய்து விட்டு, மறைந்த பின் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்ளும் என் நண்பரைக் கண்டால் பரிதாபம்தான் உண்டாகிறது.

என் நண்பரைப் போல் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். வயதுக் காலத்தில் அம்மா அப்பாவின் வயிறும் மனமும் குளிரச் செய்யாதவன், அவர்களுடைய ஞாபகார்த்தத்துக்காக என்ன செய்தால் தான் என்ன? ரோட்டரி கிளப், லயன்ஸ் என்று பெருமைப் பட்டுக் கொண்டு, கெட்ட பணத்தை 'டொனேஷன்' என்ற பெயரில் வழங்கும் வள்ளல்கள் பெற்றவர்களை அலட்சியம் செய்வது, ஈரமற்ற நெஞ்சின் வெடிப்புக்கள். வாழும் உயிர்களின் மீது இல்லாத அக்கறையும் வாஞ்சையும் அவர்களின் ஆத்மாக்கள்மீது வெள்ளமாக வழிவதைப் பார்க்கும்போது, என் நண்பரைப் போன்றவர்களுக்கு என்ன கதி காத்திருக்கிறது என்பதை என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. அவன் செய்கிற சிராத்தம் செய்த பாவத்துக்கு மன்னிப்பாகவும் தோன்றவில்லை.


ஆனால் ஒன்று. என்னதான் பெற்ற பிள்ளை உதாசீனம் செய்து நடுத் தெருவில் நிறுத்தி வைத்தாலும் பெற்ற வயிறும், தூக்கிய தோளும் அவனை இந்த உலகிலும் சரி, அந்த உலகிலும் சரி, சபிப்பதில்லை.






ஒவ்வொரு
Complan
Glaxo
Complan
ECONOMY PACK
Complan
Glaxo
Complan

CHGC.1.216 TM


நாளும் உங்கள் உடலுக்குத் தேவை
23 அத்தியாவசியமான ஊட்டச்
சத்துக்கள்.
இதர உணவுப் பானங்கள் இவற்றிலே
எத்தனை தருகிறது என்று பாருங்கள்!
காம்ப்ளான்
23 ஊட்டச்
சத்துக்களையும் தருகிறது.
குறிப்பைப் படியுங்கள்.
புரதம்
திசுக்களையும் செல்களையும்
உருவாக்க, பாதுகாக்க
லிப்பிடுகள்
பொங்கிப் பெருகும்
சக்திக்கே.
கார்போஹைட்ரேட்
சக்தி மிகுந்த உடல்
வலிமைக்கே.
கால்ஷியம்
ஆரோக்கியமான பற்கள்,
எலும்புகளுக்கு
பாஸ்பரஸ்
உடல் சுரப்பிகள், பற்கள்,
எலும்புகளுக்கு
சோடியம்
இரத்தம் சுற்றுமுறையில்
செயலாற்ற.
குளோரைடு (Cl வடிவில்)
தசை இயக்கத்திற்கு.
பிடிப்புக்களைத் தவிர்க்கும்.
பொட்டாஷியம்
மனத் தளர்ச்சி, தசை அயர்ச்சி
எதிர்த்துப் போராட.
இரும்புச் சத்து
ஆரோக்கியமான இரத்தத்திற்கே
அயோடின்
தைராய்டு சுரப்பி
தாமாக இயங்க.
வைட்டமின் ஏ
ஆரோக்கியமான கண்களுக்கு.
வைட்டமின் பி1
வளர்ச்சி, உறுதியான நரம்புகள்; 'பெரி-பெரி' நோய்
பீடிக்காதிருக்க.
ரிபோஃப்ளேவின்
ஆரோக்கியமான வாய்,
நாக்கு, உதடுகள்,
கண்களுக்கு.
நிக்கோடினமைடு
ஒளிமிக்க ஆரோக்கியமான
சருமத்திற்கே.
கால்ஷியம் பென்டோதெனேட்
நரம்புகளையும் தசைகளையும்
வலுப்படுத்த
கோலின்
கல்லீரல் ஆரோக்கியமாக இயங்க.
பைரிடாக்ஸின் (B6)
தசைகளை இயைப்பாற்ற
வைட்டமின் பி12
இரத்த சோகை பீடிக்காதிருக்க.
ஃபாலிக் அமிலம்
புதிய இரத்த செல்களை
உருவாக்க உறுதுணை.
வைட்டமின் சி
நோயெதிர்ப்புச் சக்தியைப்
பெருக்கி, ஸ்கர்வி நோய் வராதிருக்க.
வைட்டமின் டி
உறுதியான பற்கள்,
எலும்புகளுக்கு.
வைட்டமின் ஈ
கரு வளர்ச்சிக்கு.
வைட்டமின் கே
இரத்தம் இயற்கையான
முறையில் உறைய உதவும்.
இதர சிறுசிறு பொருட்கள்
வைட்டமின்களை உடல்
உறிஞ்சிக் கொள்ளவும்
சுரப்பிகள் நன்கு
இயங்கவும் உதவும்.
உலகெங்கும்காம்ப்ளான் பருகும் இலட்சக்கணக்காேரில் வளரும் குழந்தைகள் உண்டு. சுறுசுறுப்பான இல்லத்தரசிகள், பரபரப்புடன் இயங்கும் அலுவலர்கள், கருத்தரித்த தாய்மார்கள், பாலூட்டும் அன்னையர், வயது முதிர்ந்தோர், விளையாட்டு வீரர்கள், பருமன் குறைப்போர் எனப் பலப்பல வகையினர் உண்டு. எளிதில் ஜீரணிக்கக் கூடிய காம்ப்ளான், டாக்டர்கள் சிபாரிசு செய்வது. வயிற்றுப்புண், வயிற்றுப் போக்கு, இரத்தபேதி, ஃப்ளு ஜுரம், பல்நோய் உள்ளவர்கள் கூட ஜீரணிக்கத் தக்கது. ஆரோக்கியமான சுவைமிகு பானம் தயாரிக்க, டப்பாவின் மீதுள்ள குறிப்பைப் பின்பற்றவும்.
பருகுவீர் காம்ப்ளான்®
பரிபூரண உணவு
போஷாக்குப் பற்றுக்குறையிலிருந்து
பாதுகாக்கவே.
உலகெங்கும்
உபயோகிக்கப்
படுவது—
க்ளாக்ஸோ
ஆராய்ச்சியில்
உருவானது.

கீழேயிருந்து ஒரு 'டெலிபோன் கால்'

சாருகேசி



[மாடியில், ரகுபதி மும்முரமாக ஷூக் களுக்குப் பாலிஷ் போட்டுக் கொண் டிருக்கிறான். கீழேயிருந்து தடதட வென்று படியேறிப் பாலு மாடிக்கு வருகிறான்.]

பாலு: மாமா! உங்களுக்கு போன் வந் திருக்கிறது. யாரோ சபாபதியாம். அவசர மாகக் கூப்பிடுகிறார்.

ரகுபதி (ஷூவைக் கீழே போட்டுவிட்டு): அதற்கு ஏன் இப்படி மூச்சு இரைக்க ஓடி வருகிறே? கீழேயிருந்து ஒரு குரல் கொடுக்கக் கூடாது?

பாலு: கீழேயிருந்து கூப்பிட்டால் உங் களுக்குக் காது கேட்காதாமே?

ரகுபதி: ஹௌஸெட்? நானென்ன செவிடா?

பாலு: அக்காதான் சொன்னாள். நீங்கள் டெலிபோனில் பேசும்போதெல்லாம் 'சரியா கக் கேட்கவில்லை, உரக்கப் பேசு' என்கிறீர்க ளாமே?

ரகுபதி: ஓகோ, அப்படியா? கீழே உன் அக்காவின் இருபத்திநாலு மணி நேர தையல் மெஷின் ஓசை, மோட்டார் பம்பின் பின்னணி இசை இரண்டும் சேர்ந்து கொண் டால் போனில் பேசுவது வெகு அழகாகக் கேட்கும் பார்!

[கீழே இறங்கிப் போகிறான் பாலுவுடன்]

ரகுபதி (போனைக் காதில் வைத்துக் கொண்டு): ஹலோ, ரகுபதி ஹியர். என்ன சமாசாரம்?

சபாபதி: ரகுவா? என்னப்பா, ஸ்டேட் மெண்ட்ஸ் எல்லாம் தயாரா? இன்னிக்கு ஆபீசுக்கு வரும்போது கட்டாயம் கொண்டு வந்துவிடு. எம். டி. டெல்லிக் குப் போறாராம். அதுக்கு முன்னாலே கையெழுத்தாகணுமாம்.

ரகுபதி: எல்லாம் கிட்டத்தட்ட தயார் சார். நீங்க ஒரு தடவை பார்த் துட்டா டைப்பிஸ்டிடம் கொடுத்து விடலாம்.

சபாபதி: அப்போ, ஆபீசில் பார்ப்போம். ஓகே?

ரகுபதி: ஓகே சார்!

[போனை வைத்துவிட்டுத் திரும்புகிறான். பாலுவின் அக்கா சாருமதி கையில் ஒரு சோளியை வைத்துக் கொண்டு தையல் இயந்திரத்தி னருகே நிற்கிறாள்.]

சாரு: ஆபீஸ் சமா சாரம் பேச ஒரு டெலி போன் கால்! நீங்கள் ஆபீஸ் நேரத்தில் என்ன தான் செய்வீர்களோ?

ரகுபதி: ஆபீஸ் நேரத் தில் எல்லோரும் சுற்றி உட்கார்ந்து கொண்டு



கொட்டைப் பாக்கு வெட்டிக் கொண்டிருப்போம்! வேடிக்கையாயிருக்கே உங்கள் கேள்வி. ஆபீஸ் வேலைகளைக் கவனிக்கத்தானே உங்கள் அப்பாவுக்கு ஒரு போன் வைத்துக் கொடுத்திருக்கிறார்கள் ஆபீசில். ஆபீஸ் சமாசாரமா என்று கேட்டு விட்டீர்களே? ஹூம்...

சாரு: சரி. ஆபீசில் நீங்கள் ரொம்பத்தான் வெட்டி முறிக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம்...

ரகுபதி: நான் வேலை பார்ப்பது விறகுத் தொட்டியில் இல்லை மிஸ் சாருமதி! டயமண்ட் கெமிகல் கார்ப்பரேஷனிலாக்கும்!

சாரு (சிரித்தபடி): வெரிகுட்! உங்கள் ஆபீசில் சொல்லி மேலே ஒரு போன் வைத்துத் தரச் சொல்லக் கூடாதோ? இருபத்து நாலு மணி நேரமும் நீங்களும் உங்கள் அக்கவுண்டெண்டும் ஆபீஸ் சமாசாரம் பேசலாமே!

[சாருமதியின் தகப்பனார் ஜகந்நாதன் வருகிறார்; சாருமதி மெல்ல உள்ளே நழுவுகிறாள். ரகுபதி படிகளில் ஏறுகிறான்.]

2

[மறுநாள் காலை. கீழேயிருந்து சாருமதி மேலே வருகிறாள். கையில் ஒரு ஷூ பிரஷ். ரகுபதியின் தகப்பனார் நாராயணசாமி பேப்பர் வாசித்துக் கொண்டிருக்கிறார்.]

சாரு: சார்....மாமா...

நாரா (பேப்பரைத் தாழ்த்தி): யாரு, சாருவா? என்னம்மா, ரகுபதிக்கு ஏதாவது போன் காலா?

சாரு: இல்லே சார்... இந்த ஷூ பிரஷ்ஷை நேற்றைக்குக் கீழேயே விட்டு விட்டார் போன் பேச வந்தபோது...

நாரா: அடேடே, அப்படியா? (உள்ளே திரும்பி) டே ரகு... அவன் ஏதானும் ஸ்டேட்மெண்டில் மூழ்கியிருப்பான். நீயே உள்ளே போய்க் கொடுத்துவிடேன்!





[கூடத்தில் ரகுபதி ஒரு மேசை மேல் ஏறி நின்றபடி ஃப்யூஸ் ஆன ட்யூப் லைட்டைக் கழற்றிக் கொண்டிருக்கிறான்.]

சாரு: மிஸ்டர்... ஷூ பாலிஷ்...

ரகுபதி (கீழே பார்க்காமல்): ஷூ பாலிஷெல்லாம் புதன்கிழமையும் ஞாயிற்றுக் கிழமையும்தான். புதன் பாலிஷ் நேற்றே ஓவர்....

சாரு: நானொன்றும் உங்கள் ஷூ பாலிஷ் பண்ணித் தர வரவில்லை. உங்கள் பிரஷ்ஷைக் கீழே விட்டு விட்டீர்கள் நேற்று.

ரகுபதி (வேண்டுமென்றே, திகைத்தமாதிரி பாவனையில்): ஓகோ, நீங்களா? சாரி... பிரஷ்ஷை அங்கேயே வராந்தாவில் போட்டிருக்கலாமே! தாங்க்ஸ்உங்களுக்கு. (கழற்றிய ட்யூப் லைட்டை அவளிடம் நீட்டி) இதைக் கொஞ்சம் பிடியுங்கள். மெல்ல... பத்திரம்.. பத்திரம்...

சாரு: ஐய, கொடுங்களேன் தைரியமாக! அடடடா... ப்யூஸான லைட்டுக்கு எத்தனை

தடவை பத்திரம் பத்திரம் என்று சொல்லு கிறீர்கள்!

ரகுபதி: ப்யூஸானதுதான் அம்மணி. கீழே விழுந்து உடைந்தால் உங்கள் மாமியார் வந்து பொறுக்கிச் சுத்தம் செய்வாளா? (நாக்கைக் கடித்துக் கொண்டு) சாரி...வெரி சாரி.....

[ரகுவின் அம்மா பார்வதியின் குரல் சமையலறையிலிருந்து வருகிறது.]

பார்: என்னடா ரகு! ட்யூப் லைட்டை மேலே போட்டாயா? இல்லை கீழே போட்டாயா? எத்தனை நேரம் அதற்கு? குளித்துச் சாப்பிட உட்கார நேரம் ஆகவில்லை உனக்கு?

சாரு: (புதிய ட்யூபை எடுத்து அவன் கையில் கொடுத்துவிட்டு, சிரித்துக்கொண்டே) சீக்கிரம்... சீக்கிரம். ஒரு விளக்கைப் போட எத்தனை நேரம் உங்களுக்கு! குளித்துவிட்டுச் சாப்பிட உட்கார நேரம் ஆகவில்லை உங்களுக்கு?

ரகுபதி: ரொம்பத்தான் விரட்டாதீர்கள்! அப்புறம் அம்மாவைக் கூப்பிட்டு விடுவேன்!

சாரு: ஐயையோ... நான் போறேன்! (ஓடுகிறாள்.)

3

[காலை வேளை. ஆபீஸிலிருந்து திரும்பிய ரகுபதி நாவல் ஒன்றை வைத்துக் கொண்டு உட்காருகிறான். கீழேயிருந்து பாலு ஓடி வருகிறான்.]

பாலு: மாமா! அக்கா கீழே வரச் சொன்னாள்....

ரகுபதி: என்னடா இது! எதற்காம்?

பாலு: போன் கால் வரும்போல் இருக்காம். (கீழே ஓடுகிறான்.)

ரகுபதி (சிரித்துக் கொண்டே): மழை வரும்போல் இருக்காம் என்கிற மாதிரி யல்லவா சொல்லிவிட்டுப் போகிறான்!

[கீழே போகிறான். சாருமதி சோபாவின் பின்னால் நின்று கொண்டிருக்கிறாள்.]

ரகுபதி: என்ன மேடம்! என்னை ஒரு நாவல்கூட நிம்மதியாகப் படிக்க விடமாட்டீர்கள் போலிருக்கிறதே! (சுற்று முற்றும் பார்த்து) ஆமாம், அப்பா அம்மா எங்கே?

சாரு: அப்பா ஏதோ மீட்டிங்குக்குப் போனார். அம்மா நேற்றுத்தான் ஹைதரா பாத்துக்குப் போனாள். அண்ணா தந்தி கொடுத்திருந்தான்; மன்னிக்கு உடம்பு சரி யில்லையாம்.

ரகுபதி: சரி சரி சொல்லு. வாட்'ஸ் த மாட்டர்?

சாரு: அப்பா அடுத்த வாரம் ரிடைய ராகிறார். அப்புறம்... அப்புறம்... டெலி போனைக் கொண்டு போய் விடுவார்கள். ஆபீசில் வைத்துக் கொடுத்த போன்.

ரகுபதி: போகட்டுமே? டெலிபோன் காரர்கள் அதை எடுத்துக் கொண்டு போகிற போது 'போனால் போகட்டும் போடா' பாட னுமா?

சாரு: ஸ்டாப் யுவர் ஜோக்ஸ். பீ சீரியஸ். அப்புறம்...(வெட்கத்துடன் தலையைக் கவிழ்த் துக் கொள்கிறாள்.)

ரகுபதி: அப்புறம் என்ன? டெலிபோன் மேஜை காலி. அவ்வளவுதானே? ஒரு ப்ளவர் வாஸ் வாங்கி வைத்து விட்டால் போகிறது. இதற்கா என்னைக் கீழே வரவழைத்தாய்?

சாரு (பொய்க் கோபத்துடன்): நானொன் றும் சொல்ல மாட்டேன்.

ரகுபதி: சொல்லாவிட்டால் தெரியா தாக்கும்! இது சொல்லித் தெரிவதில்லை அம் மணி! போனைக் கொண்டு போய் விட்டால் நாம் எந்தச் சாக்கை வைத்துச் சந்தித்துக் கொள்வது என்று....

சாரு: ஆமாம், போனைச் சாக்கை வைத் துக்கொண்டு மீட் பண்ணுவது!

[மேலே யிருந்து ரகுபதியின் தாயார் பார்வதியின் குரல் கேட்கிறது.]

பார்: ரகு... டே ரகு. எங்கே போய் விட்டே? இங்கே காஸ் போய்விட்டது பார்...

ரகுபதி: ஒரே நிமிஷம் சாரு! (மேலே ஓடுகிறான்.)

பார்: பாகற்காய் வத்தல் பண்ணிக்கொண் டிருந்தேன். பட்டுனு காஸ் போய்ட்டுது.

ரகுபதி: நீ வெண்டைக்காய் வதக்கல் பண்ணியிருந்தாலும் அது பட்டுனுதான் போயிருக்கும்மா! இப்போ என்ன செய்ய னும்கிறே? மணி ஆறுக்கு மேல் ஆகிறது. நாளைக்குத்தான் போன் பண்ண முடியும்.

பார்: அடடா, கிரஸினும் இல்லைபோலிருக் கிறது.... பாதி வதங்கின பாகக்காய்...

ரகுபதி (யோசனையுடன் தலையைக் குலுக்கி விட்டுக் கொண்டு): ஆங்... ஐடியா! அந்த வாணலியை அப்படியே கொடு. கீழே அவர்கள் காஸ் அடுப்பில் வைத்து கம்ப்ளீட் பண்ணிக் கொண்டு வருகிறேன்.

பார் (திகைத்து): உன்னால் அதைப் பதமாக வதக்க முடியாதுடா...

ரகுபதி: எல்லாம் முடியும். கொடு இப்படி!

[கீழே வாணலியுடன் போகிறான்.]

ரகுபதி: சாரு... சாரு... காஸ் அடுப்பைப் பற்ற வை. க்விக்!

சாரு (திகைத்து): அடே! இதென்ன வாணலியும் கையுமாய்?

ரகுபதி: என்னையா அடேய் என்று சொன் னாய்? கையில் வாணலி மட்டும் இல்லையானால் உன் காதைப் பிடித்துத் திருகியிருப்பேன்.

சாரு (சிரித்து): உங்கள் அம்மா என்ன பதத்தில் வதக்குவார், சொல்லுங்கள். எண் ணெய் அதிகம் விடவேண்டுமா?

ரகுபதி: அம்மா என்னை எப்படி வதக்கு கிறாளோ அப்படி வதக்குவாள் இதையும். சரியாகப் பவுன் நிறம் ஆக வேண்டும்.

சாரு (அடுப்பில் வாணலியை வைத்து விட்டு): காஸுக்குப் போன் செய்வதுதானே?

ரகுபதி: ஆறு மணிக்கு அப்புறம் எங்கள் காஸ் கம்பெனி கிடையாது.

சாரு: ஆக, நாளைக்காலை நீங்கள் காஸுக்கு போன் பண்ணக் கீழே வருவீர்கள்?

ரகுபதி: ஆகா, எத்தனை சந்தோஷம், எத்தனை சந்தோஷம் முகத்தில்?


சாரு: நாளைக்குச் சனிக்கிழமை— அரை நாள்தானே? மத்தியானம் ஆபீசில் வேலை இருக்கிறதா?

ரகுபதி (திகைத்துப் போய்): ஏன் அரை நாள் முழுக்க இங்கே உட்கார்ந்து போன் பண்ணச் சொல்லுகிறாயா?

சாரு: ம்...ம்... சினிமாவுக்குப் போக லாமா என்று பாலு கேட்டான். ஒரு நல்ல இந்திப் படம் வந்திருக்கிறதாம். நீங்கள் வந்தால் நல்ல துணையாயிற்று...



"ரொம்ப விலையுயர்ந்ததோ?"



"இல்லையே, இது கமலா"



சொற்பச் செலவிலே
சொகுசான உடுப்பு

கமலா

நைலான் ஸ்ட்ரெச்
சாட்டின் துணி

CU-A 1353

மனதில் மலர்ந்திருப்பவள்



10-8-74 1-வது வருஷாப்திகம்

" இல்லாளகத்திருக்க
இல்லாத தொன்றில்லை "

என்பதை மெய்ப்பித்து அன்புடனும்
பண்புடனும் மகிழ்வித்த
இனிய

சாரதாம்பாள் என்று விளங்கிய
" துளசி "

சி. மா. ஷண்முகம்
(Sub. C. M. Shanmugam, Retd.)

1898
முதல் பிரசித்தி பெற்றது

பண்டிட் D. கோபாலாசார்லுவின்

ஜீவாம்ருதம்

ஆரோக்கியத்திற்கும்
பலத்திற்கும்

ஆயுர்வேதாஸ்ரமம்
பிரைவேட் லிமிடெட் - சென்னை-17.



"நம்ம ஊர் நகர சபை கவுன்சிலர்கள் மீட்டிங்குலே ஒரே சத்தம். கூச்சல், குழப்பம்."

"ஏன், எதற்குச் சச்சரவு?"

"சுடுகாட்டு நுழைவாயிலில் Welcome போர்டு போடணும் என்றது ஆளும் கட்சி. கூடாது, நல்வரவு என்றுதான் போர்டு மாட்டணும் என்கின்றன எதிர்க் கட்சிகள்!"

ரகுபதி (உற்சாகத்துடன்): ஆபீஸில் வேலையும் இல்லை. சரியாக ஒரு மணிக்கு டாண் என்று புறப்பட்டு வீட்டுக்கு வந்துவிடுவேன். போகலாமா? என்ன படம்?

சாரு (யோசித்து): ம்ம்... சட்டென்று நினைவுக்கு வரவில்லை....

ரகுபதி: வா, வந்து என் கழுத்தைக் கட்டிக்கொள்!

சாரு: என்ன தைரியம்! உடம்பு எப்படி இருக்கிறது?

ரகுபதி: அட ராமா! அது ஒரு ஹிந்திப் படம் சாரு! ஆ கலே லக் ஜா. நான் தமிழில் சொன்னேன்....

[மேலேயிருந்து பார்வதியின் குரல் வருகிறது.]

பார்: டேய் ரகு...! என்னடா பண்ணுகிறே? அங்கே? பாகக்காய் வதக்கல் எங்கே?

ரகுபதி: இதோ கொண்டு வரேனம்மா!

[வாணலியுடன் ஓடுகிறான்; சாரு சிரிக்கிறாள்.]

4

[அடுத்த வாரம் ஒரு நாள் மாலை. சாருவின் தகப்பனார் ஜகந்நாதன் கையில் ரோஜா மாலைகளுடன் காரிலிருந்து இறங்குகிறார்.]

ஜக (சாருவிடம்): இந்தாம்மா, இந்த மாலைகளை யெல்லாம் எடுத்து வை. இதோ பார், ஆபீஸிலிருந்து இரண்டு பேர் ரேடியோகிராம் கொண்டு வந்து வைப்பார்கள். எனக்குக் கொடுத்த பிரிவுபசாரப் பரிசு. பத்திரமாக இறக்கி ஹாலில் வைக்கச் சொல்.

சாரு: விருந்தில் நன்றாகப் பேசினீர்களா அப்பா?

ஜக: பின்னே? வெளுத்து வாங்கிவிட்டேன். ஆமாம்... ஒன்று சொல்ல மறந்து விட்டேன். நாளைக்கு டெலிபோன் இலாகாவிலிருந்து ஆட்கள் வந்து போனை எடுத்துக் கொண்டு போவார்கள்.

சாரு: ஏம்பா, போனை நாமே வைத்துக் கொள்ள முடியாதா?

ஜக (சிரித்து): என்னத்துக்கு சாரு இனிமேல் போன் எனக்கு? ஆபீஸ் போன். (தமாஷாக) அவன் கொடுத்தான். அவனே எடுத்துக்கொள்கிறான்! ஒரு பெரிய தலைவலி அது. போகட்டும்!

[உள்ளே போகிறார், சாருவின் உற்சாக மிழந்த முகத்தைக் கவனிக்காமல்.]

5

[மறுநாள் மாலை. டெலிபோன் இலாகாவிலிருந்து போனை எடுத்துக் கொண்டு டைரக்டரியோடு புறப்பட்டுப் போகிறார்கள். சாரு பார்த்துக் கொண்டு நிற்கிறாள். அதே டெலிபோன் இலாகாவிலிருந்து இரண்டு காக்கிச் சட்டைக் காரர்கள் ஒரு புதிய பச்சை நிற டெலிபோனுடன் வருகிறார்கள், சாருவை நோக்கி]

டெலி: ஏம்மா, என். ரகுபதி என்கிறவர் இந்த வீடுதானே?

சாரு (திகைத்து) ஆமாம்...

டெலி: அவருக்கு டெலிபோன் வைக்கணும்னு ஆர்டர்ஸ் வந்திருக்கு பாருங்க...

சாரு: (என். ரகுபதி, சீஃப் அக்கவுண்டெண்ட் என்று போட்டிருக்கிறதைப் பார்த்துவிட்டு) பாலு, டேய் பாலு... மேலே ரகு மாமாவைக் கூப்பிடுடா... போன்.. போன் வந்திருக்கிறது...

[பாலு மேலே ஓடிப் போய்ச் சொல்லுகிறான்.]

ரகுபதி (வந்துகொண்டே) ஆமாம் சாரு, எங்கள் அக்கவுண்டெண்ட் உன் அப்பா வயசுதானே? நேற்றுத்தான் மிஸ்டர் சபாபதி ரிடையர் ஆனார். எனக்குத்தான் அந்தப் பதவி என்று சொல்லி ஆர்டரும் தந்து விட்டார்கள். ஆபீஸ் டெலிபோன் தருகிறார்கள். வந்த பிறகு உன்னை ஆச்சரியத்தில் திணறவைக்க வேண்டும் என்று பார்த்தேன். நீ முந்திக் கொண்டு விட்டாய்... (டெலிபோன் ஆட்களைப் பார்த்து) மேலே ஹாலில் 'பிக்ஸ்' பண்ணுங்கள்! புதிய டெலிபோன் கேட்டிருந்தேனே?

டெலி: ஆமா சார். இது பிரியதர்சினி சார். (மேலே போகிறார்கள்).

ரகுபதி: பிரியதர்சினி என்றால் என்ன தெரியுமா சாரு?

சாரு: எனக்கொன்றும் தெரியாது.

ரகுபதி: எல்லாம் இந்திப் படம் மாதிரி மொழிபெயர்க்க வேண்டும் உனக்கு. பிரியதர்சினி என்றால் பார்வைக்கு இனியவள். (அவளருகில் நெருங்கி) டெலிபோன் மட்டும் தானா? நீயும்தானே?

சாரு (வெட்கத்துடன்): இனிமேல் டெலிபோன் கால் மேலே யிருந்து வருமோ?

ரகுபதி: உன் அம்மா ஹைதராபாத்திலிருந்து திரும்பி வரட்டும். அப்புறம் 'டெலிபோன் காலை' எப்போதும் அட்டெண்ட் பண்ண உன்னை பர்மனென்டாக மேலே அனுப்ப முடியுமா என்று கேட்கிறேன். நீ செய்த பாகற்காய் வதக்கலை அம்மா இன்னும் புகழ்ந்து கொண்டே யிருக்கிறாள்!

[இருவரும் சிரிக்கிறார்கள். பாலுவும் சேர்ந்து கொள்கிறான் சிரிப்பில்.]

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran



...அழகான ஆடைகளைத்தான் அணிகிறாள்!

REGISTERED No. M. 4392

Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் விலை 60 சதம் (தபால் செலவு தனி)

The first auto ancillary plant in MALAYSIA

A PROUD TESTIMONIAL TO A JOINT EFFORT BETWEEN TWO DEVELOPING NATIONS

India Pistons, a pioneer piston assembly manufacturer in India has joined hands with Malaysian interests to start a new manufacturing venture- MALAYSIA PISTONS SDN. BHD. The plant which is now under construction at the Senawang industrial estate in the State of Negri Sembilan will shortly commence manufacture of Pistons and Cylinder liners to meet the fast expanding needs of the automobile industry in Malaysia.

It is significant that two developing nations have joined hands in communicating know-how which will eventually make Malaysia self-sufficient for this vital range of auto ancillaries.

INDIA PISTONS LIMITED
Madras 600 011
INDIA

MALAYSIA PISTONS SDN. BHD.
Jalan Sulaiman Kuala Lumpur
MALAYSIA

has fresh Indian know-how



IP 187